75 YEARS 1942-2017 ANNIVERSARY

பவளவிழா மலர்

1942.08.15 - 2017.08.15

நாவாந்துறை
தூய விண்ணக அன்னை ஆலயம்

To Fr Stalin.

From. Fr. Antony Bala
Parish Priest
Navanthurai

02 - 10 - 2017

தூய விண்ணக அன்னை ஆலயம்
நாவாந்துறை

பவள விழா மலர்

1942 ~ 2017

Church of Our Lady of Assumption
Navanthurai

75th Year Jubilee Souvenir

15.08.2017

The Holy Father Francis

cordially imparts the requested

Apostolic Blessing to the

Parish Priest Rev. Fr. C. J. Antony Bala and faithfuls of Church of Assumption

on the occasion of its 75th Anniversary

and invokes an abundance of heavenly graces

and the continued protection of the Blessed Virgin Mary

Navanthurai North – Jaffna, August 15, 1942 / 2017

Dal Vaticano 3.7.2017

+ Leonard Leajewski

Arcivescovo Nunzio Apostolico

Message of Blessing

It gives us great pleasure to write this message on the occation of the 75th Anniversary of the Laying of the Foundation Stone for St. Mary's Church, Navanthurai. From a humble beginning with Cadjan roofing, the present church stands as a monument to the faith of the parishioners. Our Heavenly Mother has guided this Community for the last 75 years. I am sure the faithful of the Community look forward to thank the Lord for the wonderful way in which Our Lady has interceded with Her Son in all their needs.

In this year dedicated to St. Joseph Vaz. it is our fervent hope that the jubilee celebrations will be occasions to further deepen the faith of the Community. We are confident that our Havenly Mother, the Patroness of this Parish, as well as St. Joseph Vaz, Apostle of Sri Lanka, will continue to interceed on your behalf before the Almight Father so that You would continue to flourish. May all the celebrations spiritually enrich the Community!

I take this opportunity to congratulate Rev. Fr. Croos Jesuthas Antony Bala, the Parish Priest and the Parishioners, and impart upon all of You the Apostolic Blessings of our Holy Father, Pope Francis, as a pledge of spiritual happiness and peace in our Lord, Jesus Christ.

Pierre Nguyen Van Tot
Apostolic Nuncio

யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி

"அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப் அழைக்கப்படுவர்" (மத்தேயு 5:9).

யாழ் மறை மாவட்டத்தின் நாவாந்துறை தூய மரியன்னை ஆலயத்தின் 75வது யூபிலி ஆண்டிலே உங்கள் அனைவருக்கும் இறை ஆசிரோடு கூடிய வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். கிறிஸ்தவ குடும்பங்கள் முழுமையாக வாழும் இச்சமூகத்தில் இறை விசுவாசமும், ஆன்மீகமும், ஆழமான மனித விழுமியங்களும் வாழப்பட்டிருப்பது உண்மையில் பாராட்டத்தக்கது. அத்தகைய நிறைவான வாழ்வு உங்களுள்ளும் வாழப்பட வேண்டும்.

1940ல் ஓலைக் கொட்டிலில் நீங்கள் ஆரம்பித்த உங்கள் தனித்துவமான ஆன்மீகப் பயணம் 1942ல் தூய மரியன்னை ஆலயமாக உருவாகி, ஆன்மீக வாழ்வின் மையமாக இருந்தது. இதுவே உங்கள் விசுவாசத்தின் அடையாளச் சின்னமுமாகும். நீங்கள் பெற்றுக்கொண்ட இறை அனுபவமும், இறை பராமரிப்பும் உங்களுள் ஆன்மீக புத்தெழிச்சியை ஏற்படுத்த வேண்டும். நீங்கள் ஆன்மீக முதிர்ச்சியடைந்த இறைமக்கள் சமூகம் என்பதை உங்கள் வாழ்வினால் எடுத்துக்காட்ட வேண்டும். நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள். அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள் என்பது இறைவார்த்தை தரும் அழைப்பு. கடவுளின் பெயரால், ஆலயத்தின் பெயரால் பிளவுபடாது ஒன்றுபட்டு புதிய மக்களினமாக வாழ முற்படுங்கள். உங்கள் கடந்தகால வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இடைவிடாது செபியுங்கள் எனும் தூய பவுலின் வார்த்தைகள் உங்கள் வாழ்வாகி, உங்கள் சந்ததியும், உங்களைச் சூழ வாழ்வோரும், நம்பிக்கையை, இறை மகிழ்ச்சியை அனுபவிக்க நீங்கள் கருவிகளாக இருங்கள். 75 ஆண்டுகள் உங்களோடு வழிநடந்த இறைவன் உங்களைப் பாதுகாத்து வழிநடத்துவாராக. உங்கள் பாதுகாவலி அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக அமைதியான வாழ்வு நடத்த இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள

பேரருள்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்

யாழ் ஆயர்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரின் ஆசிச் செய்தி

மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தமது ஆலயம் அத்திவாரமிடப்பட்டு இன்று 75 வருடங்களைப் பூர்த்தி செய்கின்ற தருணத்திலே இறைவனுக்கு நன்றி சொல்லும் நாவாந்துறை புனித மரியாள் ஆலய பங்குத் தந்தைக்கும் பங்குச் சமூகத்திற்கும் எனது வாழ்த்துக்களைக் கூறி இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

யாழ் மறை மாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் பேரருட் கலாநிதி யோண் அல்பிரட் கியோமர் அ.ம.தி அவர்களால் 1942.08.15 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய ஆலயமானது அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டு ஆவணி 15ம் நாள் திருநாளாகக் கொண்டாடி இன்று 75 வருடங்களை நிறைவு செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எனது இலங்கைத் திருச்சபை வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது இரண்டு சமூகங்கள் தமக்குள்ளே சரியான புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை இல்லாமல் முரண்பாடுகளோடு வாழ்ந்தபோது எம் நாட்டின் அப்போஸ்தலரான புனித யோசவ் வாஸ் அடிகளார் கையாண்டது போல அவற்றைத் தனித்தனி அலகுகளாகப் பிரித்து ஆன்மீக முன்னெடுப்புக்களை மேற்கொண்டதைக் காணமுடியும். இதுபோலவே நாவாந்துறை கிராமத்தைப் பார்க்கின்றபோது புனித மரியாள் ஆலயத்தைச் சேர்ந்த மக்களும் ஆரம்பத்தில் புனித நீக்கிலார் ஆலயத்திற்குச் சொந்தமானவர்களே. ஆனால் அங்கு நிலவிய புரிந்துணர்வற்ற சமூகத்திலிருந்து பிரிந்து தமக்கெனத் தனியான ஆலயத்தை அமைக்கவேண்டிய தேவையை உருவாக்கியது.

நாவாந்துறைப் பங்கிலே 1 வருடம் பணியாற்றிய அனுபவம் எனக்கு உண்டு. இவ்வாறு நான் அங்கு பணியாற்றிய நாட்களில் புனித மரியாள் ஆலய மக்களுடைய இறைபற்று ஆர்வத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்கள் மத்தியில் இருந்து அதிகளவான இறையழைத்தல்கள் (சிறப்பாக செபமாலைத் தாசர் இன்னும் ஏனைய துறவற சபைகளுக்கும்) கிடைத்தன. இன்னும் இது தொடர்ந்து கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பல இளைஞர்கள் இங்கிருந்து மேலைநாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் கோரிச் சென்றதும் ஒரு பாக்கியமாகவே கருதப்படவேண்டும். காரணம் அவர்கள் அங்கிருந்து

கொண்டு இவ்வாலய வளர்ச்சிக்கு ஏராளமான பண, பொருள் உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

இந்த வேளையில் புனித மரியாள் இளையோர் சமூகத்தையும் நான் பாராட்டியாக வேண்டும். காரணம் இவர்கள் இளமைத்துடிப்போடு ஆலயப் பணிகளை முன்னெடுப்பதோடு விளையாட்டுத்துறையிலும் தொடர்ச்சியான ஆர்வத்தையும் காட்டி வருகின்றார்கள். உதைபந்தாட்ட விளையாட்டைப் பொறுத்தமட்டில் பல உள்ளூர் அணிகளுக்கு இவர்கள் இன்றும் ஒரு சவாலான அணியாக இருந்து வருகின்றார்கள்.

இப்பங்கின் பங்குத்தந்தை இந்த இரண்டு ஆலய மக்களையும் வழிநடத்த வேண்டிய ஒருவராக இருக்கின்றார். இது மிகவும் கடினமான ஒரு பணியாகும். இப்பணியை தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி அன்ரனிபாலா இறை அருளோடு சிறப்பாகச் செய்து வருகின்றார்.

ஆகவே இந்த மகிழ்ச்சியான தருணத்தில் பங்குத்தந்தை, ஆலய மக்கள், இன்னும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இவ்வாலய மக்கள் எல்லோரையும் வாழ்த்துவதோடு இறை ஆசீரும் கூறி நிற்கின்றேன். அன்னை மரியாள் தொடர்ந்தும் இவர்களுக்காகப் பரிந்து பேசுவாராக.

போரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை
அப்போஸ்தலிக்கப் பரிபாலகர்
மன்னார் மறைமாவட்டம்



ஓய்வு நிலை ஆயரின் ஆசிச் செய்தி

யாழ். கத்தோலிக்க திருச்சபையின் நீண்டதோர் வரலாற்றுப் பயணத்தில் நாவாந்துறை புனித பரலோக அன்னையின் ஆலயமும் ஆலய மக்கள் நீங்களும் 75 ஆண்டுகளாகத் தனித்துவமாக இணைந்து பயணித்ததை எண்ணி ஆசி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த 23 வருடங்களாக இம் மறை மாவட்டத்தின் ஆயராக நான் பணியாற்றிய வேளையில் நீங்கள் காட்டிய பணிவையும் பாசத்தையும் எண்ணிப் பெருமிதமடைகின்றேன்.

யாழ். மறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு முன்பே மாத்தளை மரியாயின் பிரான்சிஸ்கு சபை அருட்சகோதரர்களாக மூவரும் தோலகட்டி செபமாலைத் தாசர் சபை அருட்சகோதரராக ஒருவரும் 1905 தொடக்கம் இவ்வாலயத்தில் இருந்து தம்மை இறையழைத்தலுக்கு அர்ப்பணித்துப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் செபமாலைத் தாசர் சபையில் இணைந்து அருட்தந்தை யு.ஆ.ஸ்ரீபன் அவர்கள் நாவாந்துறைப் பங்கின் முதற் குருவாக 1980 மே 01இல் திருநிலைப் படுத்தப்பட்டார். அவரைத் தொடர்ந்து பல இளையோர் இறையழைத்தலைப் பெற்றமை உங்களுக்குக் கிடைத்த அருள் வரங்களைப் பறை சாற்றுகின்றது.

பல்வேறு யுத்த அவலங்களும் இடப்பெயர்வுகளும் புலம்பெயர்வுகளும் உங்கள் விசுவாசத்தைச் சீர் குலைக்காமல் உறுதியடைய வைத்தமையை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். திருச் செபமாலையைக் கரமேந்திக் கடந்த காலத்தில் தாக்கிய நெருக்கடிகள், துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள், இறப்புக்கள், நோய்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், விரக்திகள் எல்லாவற்றையும் தாண்டி வந்துள்ளீர்கள்.

தொடர்ந்தும் நீங்கள் இறைவனின் பிள்ளைகளாக, மரியன்னையின் அன்புக் குழந்தைகளாக ஆன்மீக வாழ்விலும் கலை, கல்வி, ஞானத்திலும் முன்னேறி இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் வாழ, வளர ஆசி கூறுகிறேன்.

ஓய்வு நிலை யாழ். ஆயர்,

இ. தோமஸ் சவுந்தரநாயகம்.

குரு முதல்வரின் ஆசிச் செய்தி

மரியன்னையுடனான 75 ஆண்டுகாலப் பாசப் பிணைப்பை வெளிப்படுத்தும் விழா

நாவந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவினை மகிழ்ச்சியோடு கொண்டாடும் ஆலய மக்களுக்கும் தற்போதைய பங்குத் தந்தை அருட் திரு கு.யே.அன்ரனி பாலா அடிகளாருக்கும் தற்போது பணியாற்றும் நல்லாயன் சபை அருட் சகோதரிகளுக்கும் கடந்த காலங்களில் பணியாற்றிய பங்குத் தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் இவ் ஆலய சமூகத்திலிருந்து திருச்சபைக்கு தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் குருக்கள் துறவியர் அருட்சகோதரிகளுக்கும் மரியன்னையின் பரிந்துரையோடு கூடிய இறையாசீர் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமது பாதுகாவலியாகிய மரியன்னையின் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் நம்பிக்கையும் கொண்டவர்களாக இவ் ஆலய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு அன்னையின் ஆலயத்தின் வளர்ச்சி சான்றாக அமைகிறது. மரியன்னையின் பரிந்துரையால் இறைவன் தமக்கு அருளும் வளங்களைக் கொண்டு தமது பாதுகாவலியின் ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும் எவ்வளவு சிறப்பாக மெருகூட்ட முடியமோ அவ்வளவுக்கு மெருகூட்டி அமைத்து தமது நன்றிகளையும் காணிக்களையும் செலுத்தி வருகிறார்கள். தமது ஆலயத்தின்பால் இவர்கள் கொண்டுள்ள பற்று மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும்.

கடந்த 75 ஆண்டுகளாக இவ் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் தமது மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமது பாதுகாவலியாகிய பரலோக அன்னையை மகிமைப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்தில் எப்போதும் ஒன்றுபட்ட உணர்வோடு செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இது இவர்களின் விசுவாச வாழ்வின் சான்றாக அமைகிறது. வெளிநாடுகளில் வாழுகின்ற இவ் ஆலயத்தைச் சேர்ந்த மக்களும் தமது ஆலயத்தின்பால் உள்ள நெருக்கமான உறவை, அக்கறையை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

மொத்தத்தில் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய மக்களின் இவ்விழாவானது வெறுமனே 75 ஆண்டுகளின் நிறைவைக் கொண்டாடுகின்ற விழாவல்ல. மாறாக தமக்கும் மரியன்னைக்கும் இடையிலான தமது நீண்ட கால உறவினால் விளைந்த பாசப் பிணைப்பை வெளிப்படுத்தும் விழாவாகும்.

தொடர்ந்தும் அன்னையின் பராமரிப்பினால் எல்லோரும் ஒரே இறைத் தந்தையின் பிள்ளைகள் என்ற உணர்வோடு அன்பிலும் ஒற்றுமையிலும் வளர்ந்து சான்று பகர்கின்ற மக்களாக வாழவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள

அருட்தந்தை ப.யோசப்தாஸ் ஜெபரட்ணம்

குரு முதல்வர்,

யாழ். மறைமாவட்டம், யாழ்ப்பாணம்.

யாழ். மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

ஈழத்திரு நாட்டில், இறைபக்தி ஊற்றெடுக்கும் யாழ் மறைமாவட்டத்தின் குறையறு பணித்தளமாய் நிறைவுறு விசுவாச விளைநிலமாய் விளங்கிடும் நாவாந்துறை புனித மரியன்னை ஆலய மக்களின் நலிவுறாத நம்பிக்கையை நினைந்து ஆசி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இறைத்திட்டம், முரண்பாடுகளின் ஊடாகவும், குறையற நிறைவேறும் என்ற உண்மைக்கு உதாரணமாக விளங்குவதே இவ்வாலயமாகும். இவ்வாலயத்தின் உருவாக்கத்திற்கு ஊன்று கோலாய் 1936ம் ஆண்டில் அமைத்த "சென் மேரிஸ் ஐக்கிய வாலிப சன்மார்க்க விருத்திச் சங்கத்தின் ஆழ்ந்த விசுவாச வாழ்வையும், ஆன்மீக குருவாய் இருந்து அக்காலத்தில் வழிகாட்டிய அருட்தந்தை M.சூசைதாசன் OMI (நல்லாயா சுவாமி) அவர்களையும், 1942ம் ஆண்டு அடிக்கல் நாட்டிய அன்றைய ஆயர் அமரர் மேதகு J. A. கியோமர் அவர்களையும் நன்றியோடு நினைந்து இறைபுகழ் கூறுவதில் பேருவகை யடைகின்றேன்.

அன்னையின் ஆலயம் அன்பின் ஊற்றாய் திகழ்ந்து, 75 ஆண்டுகள் நிறைவுறும் இந்நந்நாளில் இவ் ஆலயம் சிறப்புற அடியெடுத்து வைக்க உதவிய அருட்தந்தையர்கள் ஒவ்வொருவரையும், அவர்களின் பணி வாழ்வையும் பெருமையோடு நினைவு கூருகிறேன். இறைபக்தியில் பற்றுறுதி கொண்டு இன்று வரை பங்கை பண்போடும் பக்தியோடும் வளர்த்துச் சென்ற பங்கு வாழ் பொதுநிலைப் பணியாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் வாழ்த்தி ஆசித்து நிற்கின்றேன்.

இன்னல்கள், துன்பங்கள் பல கடந்த எம் வரலாற்றில் எப்போதும் இறைவனின் காக்கின்ற கரமும், பராமரிப்பும், அன்னை மரியாளின் பரிந்துரையும் இங்கு பணிபுரிகின்ற பங்குத்தந்தை மீதும் பங்கு மக்கள் மீதும் நிறைவாகக் கிடைத்து இயேசுக் கிறிஸ்துவிற்கு சாட்சியாக வாழ ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

Rev.Fr.R.C.S.Nesarajah,
Parish Priest,
St.Mary's Cathedral,
Jaffna – Sri Lanka.

பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

நாவாந்துறை விண்ணக அன்னை ஆலயத்திற்கு அடிக்கல் இடப்பட்டு 75 வருட நிறைவில் மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில் ஆலைய மக்களாகிய உங்கள் மகிழ்வில் நானும் இணைந்து கொள்கின்றேன்.

வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின்றபோது நாடுகளும், நகரங்களும், ஊர்களும், உறவுகளும் ஒன்றாக இணைந்ததாகச் சரித்திரமே இல்லை. போர்களும் குழப்பங்களும், துன்பங்களும், இயற்கை அழிவுகளும் பிரிவினைகளை ஏற்படுத்தி விட்டன. முன்னைய கூட்டுக்குடும்ப வாழ்வு தற்போது இல்லை. இயந்திர மயமாகி விரைவாகச் சுற்றிச் சுழலும் மனித வாழ்வில் தனித்தனிக் குடும்பங்களாக தந்தையும் தாயும் ஒன்றாகச் சந்திக்க முடியாத நிலையில் பிள்ளைகள் விழிபிதுங்க அன்பும் பாசமும், அரவணைப்பும் இல்லாதவர்களாக வாழ்வதை நாம் காண்கின்றோம்.
இந்த நிலையில் அன்னை மரியாவின் பாசப்பிணைப்பால் கட்டுண்ட நீங்கள் குடும்ப உறவிலும், பரந்த பாச நேசத்திலும் இறுக இணைக்கப்பட்டவர்களாக ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய முடியாதவர்களாக, கூட்டுக் குடும்பங்களாக எல்லோரும் எல்லோருக்கும் உறவானவர்களாக வாழ்கின்றீர்கள்.

அள்ளிக்கொடுக்கும் கரங்களான ஆழக்கடலல்லாது, கிள்ளிக்கொடுக்கும் கரங்களான தப்புக்கடலின் வெளிப்பாடாகத் 'தன்தசைக்கு மட்டும் உதவி' என்னும் கோட்பாட்டிலிருந்து வெளிவந்து 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று உணரவேண்டும்.
எமது ஆலயம், எமது ஊர், எமது ஆற்றல் திறமைகள், எமது பிள்ளைகள் என்ற ஒரு குறகிய வட்டத்திற்குள் இருந்து வெளிவந்து உப்புத்தண்ணீரில் நனைந்தவர்களுக்கும் ஊப்புக் காற்றைச் சுவாசித்தவர்களுக்கும் இறையருளின் ஆசீர்வாதமாகக் கிடைத்த குழந்தைச் செல்வங்களிலிருந்து இறைபணிக்கு மென்மேலும் அழைத்தல்களைத் தாராளமாக வழங்க வேண்டும். திருச்சபையின் அங்கத்தவர்களாக இருக்கும் நாம் கண்ணாடிக் கூண்டிற்குள் இருந்து கல்லெறியாமல் சுயநலங்கள், போட்டி பொறாமைகள், விளங்கிக் கொள்ளாத் தன்மைகள், சொந்த உறவுகளுக்குள் முகமன் பார்த்தல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு அன்னை மரியாவில் விளங்கிய தாழ்ச்சி, இறையன்பு, பிறரன்பு, இறை விசுவாசம் போன்ன பல பண்புகளை வளர்த்துக்கொண்டு இரக்கத்தோடும், இறை வல்லமையோடும், சகிப்புத் தன்மையோடும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு கீழ்ப்படிந்து வாழ மரியா உங்களுக்குப் பரிந்து பேசுவாள். ஆடம்பரத்தை விட்டு ஆன்மீகத்திற்கு இடம் கொடுப்போம்.

இந்த யூபிலி ஆண்டில் உங்கள் மத்தியில் பணிசெய்யக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். உங்கள் எதிர்காலம் சிறந்த பல யூபிலிகளைக் கொண்டாட நற்கருணை நாதரிடம் உங்களை ஒப்புக்கொடுக்கின்றேன். அன்னை மரியாள் உங்களுக்காக பரிந்து பேசுவாளாக.

அருட்தந்தை
C. J. அன்ரனிபாலா
பங்குத்தந்தை

Message of Blessing

This gives me a great joy for me to wish you for the Jubilee of the 75th year of the St. Mary's Church Navanthurai, Jaffna, Sri Lanka. Your Parish of Navanthurai has contributed many vocations for our congregation of the Rosarians from the Foundation of it, in 1928 as Rev. Br. Mark Amirthanather had joined the congregation and become a Religious Brother.

When we started the Rosarian Ashram in Jaffna, Priestly vocations came and I am very happy to record that the First Priest from Navanthurai was through our Congregation of the Rosarians in 1980. Continuing this now about eight priests among you, harked the voice of the Master calling and were formed through our Founder's Charism.

Our prayers are always with you and we wish you that God's Grace may strengthen further your Faith. We appreciate Rev. Fr. Parish Priest and you the faithful of this St. Mary's Church.

We also thank Mother Mary for her intercessions in the past and pray for the future that our Lord Jesus may shower all the necessary graces upon you to grow in wisdom and understanding.

Thank you all for your love and concern to our congregation.

Fr. K. P. Xavier CR,
Prior General,
Congregation of the Rosarians
Bangalore – India.

அமலமரித்தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வரின் ஆசிச்செய்தி

நாவந்துறை பரலோக மாதா ஆலய மக்கள் தமது ஆலயத்தின் 75ம் ஆண்டை நினைவு கூருகின்ற வேளையில் அவ் ஆலய மக்களின் விசுவாச வாழ்வை எண்ணி பேருவகை கொள்கின்றேன்.

75 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த கொட்டில் கோவிலை தற்போது பெரிய தேவாலயமாக கட்டி எழுப்பிய மக்களை மனதாரப் பாராட்டுகின்றேன். அத்தோடு இம் மக்களுக்கு இப்பெரிய தேவாலயத்தைக் கட்டி முடிப்பதற்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வழங்கிய அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்களுக்காக ஆண்டவரை புகழ்ந்து நன்றி கூறுகின்றேன். இவ் ஆலய வரலாற்றைப் புரட்டிப் படிக்கின்ற போது இவ் ஆலயத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை அமலமரித் தியாகிகள் சபையைத் சேர்ந்த குருக்கள்தான் பங்குக்குருக்களாகப் பணி புரிந்திருக்கின்றார்கள் என்று அறியவருகின்றது. இவர்களது அயராத முயற்சியினால்தான் இவ்வாலயம் பெரிதாக நிர்மாணிக்கப்பட்டு சகல வசதிகளுடனும் காணப்படுகின்றது என்ற உண்மையை இத்தருணத்தில் இங்கு பதிவு செய்ய ஆசிக்கின்றேன். அத்துடன் இவ்வாலய மக்களும் அன்னை மரியாவை தேவதாய், பரலோக மாதா, விண்ணக அரசி என்று போற்றிப் புகழ்ந்து மகிமைப்படுத்துவதும் இவ்வாலய வளர்ச்சியின் உயர்ச்சிக்கு இன்னொரு காரணமாய் இருந்திருக்கின்றது என்பதும் மற்றுமொரு உண்மை.

இவ் ஆலயத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 60 ஆண்டுகாலமாக அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்கள் பங்குக் குருக்களாக பணிபுரிந்ததன் காரணத்தினால்தான் இன்றும் இவ்வாலய மக்கள் அமலமரித்தியாகிகளை அவர்களது பணிகளை மறக்காமல் அன்போடு நினைவு கூருகின்றார்கள்.

இம்மக்கள் மேலும் மேலும் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பராமரிப்பையும் பெற்று வாழ வளர ஆசிக்கின்றேன். பரலோக மாதா இறைமகன் இயேசுவின் தாயாக இருப்பதால் அவர் தயவில் வாழும் இவ்வாலய மக்களுக்கு ஆண்டவர் இயேசு அனைத்து இகபர நன்மைகளையும் அளப்பரிய விதமாக அள்ளி வழங்கவேண்டுமென்று ஆசித்து 75வ ஆண்டு யூபிலி வாழ்த்துக்களையும் அனைத்து அமலமரித்தியாகிகள் சார்பில் சிறப்பாக வடமாகாண அமலமரித் தியாகிகள் சார்பில் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.

அமலமரியின் அன்புடனும் ஆசியுடனும்

அருட்தந்தை கலாநிதி செ.எட்வின் வசந்தராஜா, அ.ம.தி

யாழ். மாகாண முதல்வர்

Message from the Province Leader Good Shepherd Congregation

I am privileged to be associated with you as you celebrate the 75th Anniversary of the laying of the Foundation Stone for St.Mary's Church, Navanthurai.

It is with praise and thanksgiving to God Almighty that I send you my message of congratulations and blessings to the souvenir published to mark this august occasion.

Yes, it is indeed a day to celebrate this mighty gift of God to the people of Navanthurai. I can well understand the challenges that have been faced and the obstacles overcome by the forerunners of this Parish to bring to reality this magnificent edifice to the people of the area for worship. It is no doubt the result of the great love God has for His people. "Unless the Lord builds the house, those who build it labour in vain. Unless the Lord watches over the city the watchman stays awake in vain" (Ps. 127:1)

We, the Good Shepherd Sisters have been associated with this Church and ministering to the parishioners with much love, care and concern for the past over 40 years. It has indeed been a rewarding experience and mission. We assure you of our continued service to the Church and the people of Navanthurai.

May all who worship in this House of God experience deep peace and joy. And may the tranquility of heart that you enjoy today vibrate the energy of joy around beyond all differences.

I extend to you my prayerful wishes for continued blessings that will benefit both the present and future generations of this hallowed Church.
May our shepherd God be with you all.

Sr. Francine Muthugala

ஆசிச்செய்தி

நாவாந்துறை வரலாற்றுப்புகழ் மிக்க புனித மரியன்னை ஆலயத்தின் பவள விழாவை ஒட்டி வெளியீடவிருக்கும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மனமகிழ்வு அடைகின்றேன்.

நாவாந்துறை மக்கள் இறைவனில் ஆழமான விசுவாசமும், தங்களின் பாதுகாவலியான புனித மரியன்னை மட்டில் ஆழ்ந்த பக்தியும் அபார அன்பும் கொண்டவர்கள். இவர்களின் ஆலய விழாக்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. ஆரம்பத்தில் சிறியதொரு கொட்டிலாக ஐக்கிய வாலிப சன்மார்க்க விருத்திச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட ஆலயமானது மக்களின் பக்தியும், விசுவாசமும் அதிகரித்ததற்கு அமைவாக பவள விழாக்காணும் அளவிற்கு இன்று சிறப்புள்ள ஆலயமாக விளங்குகின்றது. எளிமையான இப் பங்கு மக்களின் விசுவாசமும், எதிர்நோக்குமே உறுதுணையாக அமைந்தது என்பது இவ் வேளையில் பாரட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இம் மக்களின் விசுவாச வாழ்விற்கு உயிரோட்டம் அளித்த கியோமர் ஆண்டகை அவர்கள், பங்குத்தந்தை நல்லையா சுவாமி அவர்கள், அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆ. சூசைதாசன் சுவாமி இவர்களின் தியாக வாழ்வு இன்றைய நாளில் நினைவுகூரப்பட வேண்டியதொன்றாகும்.

இறைவனில் ஆழமான பற்றுதியும், நம்பிக்கையும் கொண்ட மக்களின் விசுவாச வாழ்வால் இக் கிராமத்திலிருந்து பலர் இறையழைத்தலுக்கு தம்மை கையளித்து திருச்சபையின் மேய்ப்புப் பணியில் பங்கு கொண்டு நற்பணி செய்வது நன்றியோடு நினைவுகூரப்பட வேண்டியது. எமது திருக்குடும்ப கன்னியர் சபைக்கும் அருட்சகோதரிகள் இறையழைப்பைப் பெற்று பணியாற்றி வருவதையிட்டு மனமகிழ்வும் நிறைவும் அடைகின்றோம். சிறப்பாக இறைவனின் ஆசியும், அருளும் நிறைவாகப் பெற்று மகிழ்வுடன் இறையுறவில் தொடர்ந்து பயணித்திட பங்குத்தந்தை, பங்குமக்களுக்கு நல்லாசி கூறி வாழ்த்தி, பவளவிழா இனிதே சிறப்புடன் திகழ இறையாசி வேண்டுகிறோம்.

அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத்தலைவி
திருக்குடும்ப கன்னியர், யாழ்ப்பாணம்.

ஆசிச்செய்தி

இந்து மா சமுத்திரத்தின் முத்தெனத் துலங்கும் இலங்கைத் தீவின் தலையாம் வடமாகாணத்தின் யாழ் மாநகரின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது நாவாந்துறை. இது கடலும் வானமும் தரையும் இணைந்து இயற்கை அழகு கொண்ட ஒரு சிறு ஊராகும்.

பவளவிழாக் காணும் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தின் புதல்வன் என்ற பூரிப்போடு அந்த விண்ணக அன்னையின் புகழ் பாடி அவள் பதம் பணிகின்றேன். நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தின் பவளவிழாவை 75 ஆண்டுகளின் நிறைவை யூபிலி விழாவாக 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி புனித மரியா விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த ஆலயம் என்னைக் குழந்தையிலிருந்தே பல்வேறு வழிகளில் இறைவனுடைய அன்பில் வளர்த்தெடுத்ததாகும். 1952ம் ஆண்டு யூலை மாதம் 05ம் திகதி இந்த ஊரில் பிறந்த நான் யூலை மாதம் 11ம் திகதி அன்றைய இப்பங்கின் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி தார்சீசியஸ் அமதி அடிகளாரால் திருமுழுக்குப் பெற்றேன். அன்றைய காலத்திலிருந்து இந்த ஆலயம் இறைபக்தியிலும், நற்கருணை விசுவாசத்திலும், புனித மரியன்னையின் பக்தியிலும் என்னை வளர்த்து வந்தது.

இந்நாவாந்துறைப் பங்கு மக்கள் இவர்களின் வரலாற்றுக் காலங்களின் ஆரம்பத்திலிருந்தே கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாசத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களாக இருந்தனர். பொதுவாக நாவாந்துறை மக்களின் கிறிஸ்தவ வரலாறு போர்த்துக்கேயரின் வருகையோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்று வரலாறு கூறுகின்றது. புனித நீக்கிலார் ஆலயம் ஒன்றே நாவாந்துறையில் ஒரே ஆலயமாக இருந்தது. அதிகமான பக்தியும், உறுதியான விசுவாசமும் கொண்டவர்களாகவும் விளங்கினர். நாவாந்துறையின் பல்வேறு சமூகங்களைச் சார்ந்தவர்களும் புனித நீக்கிலார் ஆலயத்தின் உறுப்பினர்களாகவே திகழ்ந்தனர்.

1940ம் ஆண்டிற்கு முன்பாக இன்றைய புனித மரியாள் ஆலய சமூகத்தினரின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும் பிணக்குகள் ஏற்பட்டதாலும், தாங்களாகவே ஒரு புதிய ஆலயத்தை அமைக்கக்கூடிய சகல வசதி வாய்ப்புகளும் உழைக்கும் திறமையும், விசுவாச அர்ப்பணமும், தியாக உணர்வும் உடையவர்களாய் இருந்தமையாலும் இச் சமூகத்தினர் தனியாக ஆலயம் ஒன்றை அமைத்து தனித்துவமாக வளரலாம் என்ற

உணர்வுடையவர்களாக இருந்த வேளையில் அன்றைய பங்குத்தந்தை ம. சூ. நல்லையா அமதி அவர்களும் இது நல்லதெனக் கண்டு அதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார் என்பது வரலாறு.

இந்த ஆலோசனையை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட அன்றைய இச்சமூகத்தின் பெரியோரும் இளையோரும் புதிய ஆலயத்தை அமைப்பதற்கான திட்டங்களைத் தீட்டி அதை நடைமுறைப் படுத்த எல்லா நிலைகளிலும் முயற்சிகளை மேற்கொண்டனர். இது புனித பரலோக மாதா ஆலயமாகத் திகழும் என்று அனைவரும் ஒரே உள்ளத்தினராய் ஏற்றுக் கொண்டனர். இன்றைய இந்த பெரிய ஆலயத்தை அமைக்க அத்திவாரக்கல் அமைக்கப்பட்ட நாளின் 75வது ஆண்டு நிறைவின் பவள விழாவையே இன்று கொண்டாடுகின்றனர். ஆயினும் இந்த ஆலயத்தை அமைப்பதற்கு முன்பு இந்த ஆலயத்தின் முன்பகுதியில் கொட்டிலில் புனித மரியாவின் திருச்சுரூபத்தை வைத்து தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை வாழ முயன்றனர். மேலும் இன்றைய ஆலயத்தின் முற்பகுதியில் முருகைக் கல்லினால் ஆன சிறு ஆலயத்தை அமைத்து தங்கள் விசுவாச வாழ்வைத் தொடர்ந்தனர். இந்த ஆண்டுகளில் இன்றைய பெரிய ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து கொண்டிருந்தன. இந்த வேலைகள் எல்லாவற்றிற்குமான செலவுகளைத் தங்கள் நாளாந்த உழைப்பின் வழியாகவே பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது இவர்களின் தொடர் விசுவாச வாழ்வை எப்போதும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த மக்களின் வாழ்வு ஒரு சிறப்பான வளர்ச்சியை படிப்படியாக மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிட வேண்டியது ஒன்றாகும். அதற்காக அன்றிலிருந்து பணியாற்றிய அனைத்துப் பங்குத் தந்தையர்களும், அருட் சகோதரிகள், அருட் சகோதரர்களும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றினர்.

இந்த மக்களின் ஆழமான விசுவாச வாழ்வின் பலன்கள் இந்தப் பங்கிலிருந்து இறைவன் தேர்ந்தெடுத்த இறை அழைத்தல்களிலிருந்து அனைவரும் அறியலாம். இன்றைக்கு 112 ஆண்டுகளுக்கு முன்பாகவே 1905ம் ஆண்டு மாத்தளை புனித மரியாவின் பிரான்சிஸ்கன் சபைத் துறவியாக இறைவன் அருட்சகோதரர் ச.ம.பீலிக்ஸ் என்பவரைத் தேர்ந்தெடுத்தார். அவரைத் தொடர்ந்து 1972ல் மூன்று அருட்சகோதரர்கள் அழைக்கப்பட்டனர். இவர்களின் வாழ்க்கைக் காலத்திலேயே குருத்துவ அழைத்தல்களும் இறைவனால் வழங்கப்பட்டு என்னை அழைத்து 1980 மே மாதம் 1ம் திகதி முதற் குருவாக நாவாந்துறைப் பங்கிற்கு செபமாலைத் தாசர் சபைமூலம் கொடுத்தார். இதைத் தொடர்ந்து

இன்று குருக்களும், அருட் சகோதரிகளும் இப்பங்கிலிருந்து அழைக்கப்பட்டு சிறப்பாக இறைபணியாற்றி வருகின்றனர்.

இது இந்தப் பங்கினுடைய இறை அன்பு, விசுவாசம், நம்பிக்கைக்கும் இறைமகன் இயேசுவின் மீதம், அன்னை மரியாவின் மீதும் அவர்கள் கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பிற்கும் இறைவன் கொடுக்கும் கொடைகளாகத் திகழ்கின்றன.

தொடர்ந்தும் இந்த மக்கள் உண்மையான தாழ்மையோடும், விசுவாசத்தோடும் இறையன்பிலும், பிறரன்பிலும் வாழ்ந்து கத்தோலிக்க விசுவாசத்தில் வளரவும் இதை உலகெங்கும் பரப்பும் கிறிஸ்துவின் சாட்சிகளாகத் திகழ எமது செபங்கள் நிறைந்த வாழ்த்துக்களை இந்த பவளவிழாவிலே இவ்வாலய மக்கள் அனைவருக்கும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

அருட்தந்தை அ. ம. ஸ்ரீபன் மரியதாஸ் செ.தா
இலங்கை மாகாண முதல் ஆலோசகர்
செபமாலைத்தாசர் சபை.

ஆசிச் செய்தி

புனித பரலோக மாதா கோவில் அத்திவாரக்கல் நாட்டப்பட்டு இவ்வருடம் 75 ஆண்டுகள் ஆகின்றன. எனவே அன்னை மரியாளின் பக்தி பல ஆண்டுகளாக இக்கோவில் மக்களுக்குக் கிடைத்த நல்ல பாக்கியம். அன்னையின் திருவிழா ஆண்டு தோறும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு பவள விழாச் சிறப்புற கொண்டாடப்படுவதால் பல ஆயத்தங்கள் செய்யப்படுகின்ற வேளை அம் மண்ணின் மைந்தன் செபஸ்தி நீக்கிலாஸ் அ.ம.தி ஆகிய எனது ஆசிச் செய்தியைக் கேட்டு பங்குத் தந்தை வண. கு.யே. அன்ரனிபாலா வந்து சிறப்பாகக் கொண்டாட பங்கு மக்கள் தங்களை ஆயத்தம் செய்வதாகக் கூறினார். ஆன்மீக வழியில் கரிசனை காட்டுகின்றமையால் என்னுடைய ஆசிச் செய்தியையும் வழங்கி அன்னையின் ஆசீரும் விசுவாசிகளுக்கு நல்ல வாழ்வும் அமைய வேண்டுமென்று ஆசித்து நிற்கின்றேன்.

பங்கு மக்கள் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு அன்னை மரியாளின் பக்தி சிறப்பாகக் காணப்படுவதால் அவர்கள் எவ்வளவு ஆவல் கொண்டுள்ளார்கள் என்பதை எல்லோரும் அறியக் கூடியதாய் இருக்கின்றது.

புதிய கொடி மரம் நிர்மானிப்பதற்கு திருவாளர் செபஸ்தி அமிர்தநாதர் பல வழிகளில் முயற்சி எடுத்து வருகின்றார் என்பதை நினைத்து பேருவகை கொள்கிறேன். மத். 7:11ன்படி அன்னை மரியாளின் மைந்தன் இயேசு நன்மைகள் செய்வதிலேயே நாட்டமாய் இருந்தார். எனவே நாமும் நன்மை செய்வதில் கருத்தாய் இருக்க வேண்டும். விண்ணரசி திருவிழாவைக் கொண்டாட நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் அன்னை வாயிலாக இயேசு எம் மீட்பரைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும்.

இறை இயேசுவின் அன்னை விண்ணகத்தாய் எமக்காக தம் மைந்தனிடம் பரிந்துரைப்பாளாக.

மண்ணின் மைந்தன்
செபஸ்தி நீக்கிலாஸ் அ.ம.தி



Message of Blessing

Congratulations on accomplishing 75 years of love and faithfulness to your parish church. I am one of those involved in your story and accomplishments in more or less from the beginning. It was a hard road to follow but you never wavered. You were faithful in your commitment.

The final outcome is beautiful. You can be very legitimately proud of your accomplishment. This was a huge undertaking – but you never wavered. All of you were very faithful. In the end all that matters is faithfulness. Enjoy and celebrate your church. I will celebrate a mass of thanksgiving for all of you.

Remember me at your mass of Thanksgiving.
May the good Lord and the Blessed Mother be with all of you.

Peace and love!!

Fr. Bennet Constantine

ஆசிச் செய்தி

பவள விழா காணும் நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தின் விழுதுகளில் நானும் ஒருவன் என்பதை எண்ணுகையில் பூரிப்படைகின்றேன்.

நவாயூர் மக்களை ஒரு கூரையின் கீழ் ஒன்று சேர்த்து அன்னையின் ஆசீரைப் பெற உதவிய நம் மூதாதையர்கள், பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவரையும் இத்தருணத்தில் நாம் நினைவு கூர கடமைப்பட்டுள்ளோம்.

உண்மையிலேயே இத்தேவாலய பங்கிலிருந்து நான் கண்டுகொண்டவை யாதெனில் இறை விசுவாசம், ஒற்றுமை, அன்பு என்பனவாகும். நவாயூர் மக்களின் அயராத உழைப்பினால் இத்தேவாலயம் சிறப்புடனும், அழகுடனும் விளங்குகின்றது என்று கூறினால் அது மிகையாகாது. அதுமட்டுமன்றி இறை சேவையை ஆற்றும் பங்குத்தந்தையரும் தமது முழுமையான அர்ப்பணிப்புடன் பங்கிற்கும், பங்கு மக்களுக்கும் தமது சேவையைச் செய்ய அன்னையை வேண்டி நிற்கின்றேன்.

இவ் ஆலயத்திற்கும் எனக்கும் உள்ள நினைவுகள் எண்ணிலடங்காதவை. ஏனெனில் பரலோக அன்னை என்மேல் அளவு கடந்த ஆசிர்வாதத்தை பொழிந்ததன் காரணமாகத்தான் இவ் ஆலயத்திலேயே குருவாக திருநிலைப்படுத்தும் திருப்பலியை நடத்தி அவள் தன் பாதம் சேர்த்துக் கொண்டதை என் வாழ்வின் வரமாக எண்ணுகின்றேன்.

பரலோக அன்னையின் ஆசியுடன் பங்கு மக்கள் அன்புடனும், விசுவாசத்துடன் வாழவும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் இவ்வாலயத்தின் மூலம் நன்மைகள் பெறவும் அன்னை வழியாக இயேசுவை வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி மைக்கல் பிரபு, SDS,
அகில இலங்கைக்கான இறை மீட்பர் சபை இணைப்பாளர்

ஆசிச் செய்தி

புனித பரலோக அன்னையின் ஆலயத்து மக்கள் மத்தியில் பணிபுரிய கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நன்றிகூறுகின்றேன்.

அன்னையின் பக்தர்களாக விசுவாசத்தில் வளர்ச்சி கண்டு தாமாக முன்னேறுவதில் அவர்கள் மிகவும் அக்கறையும் ஆர்வமும் உள்ள மக்களாக முயற்சித்து வருவதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். ஒவ்வொரு கத்தோலிக்கனும் ஒரு தூணாக இருந்து சமூகத்தைக் கட்டியெழுப்பி ஒரு பலன்தரும் மரமாக இருக்க வேண்டும். அதன் பயனை அவர்கள் குடும்பங்களிலிருந்து உருவாக்கப்பட்ட பல குருக்களும் அருட்சகோதரிகளும் சாட்சி பகருகின்றனர்.

ஆலயமும் ஆலய வளவும் பல ஆக்கங்களாலும், சமூகக் கழகங்களினாலும் பரா-மரிக்கப்பட்டு வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூக ஒற்றுமையில் சிறந்து விளங்கி பல விளையாட்டுகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றி சிறப்பிக்கும் இளைஞர்களுக்கு எமது பாராட்டுக்கள். சிறு சிறு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் மனம் சலிக்காமல் முழுமூச்சுடன் இயங்குவர். பலர் கல்வியில் சிறந்து விளங்கி சமுதாயத்தின் முன்னோடிகளாக விளங்குவதுடன், பலர் வெளிநாடுகளில் இருந்-தாலும் பரலோக அன்னையின் விசுவாசமுள்ள பக்தர்களாக வாழ்வதும் இம்முறை நீங்கள் கொண்டாடும் 75 வது ஆண்டு நிறைவானது மரியன்னை மூலமாக இறைவன் கொடுத்த ஒரு விசேட கொடை.

மேலும் விசுவாசத்தை ஆழப்படுத்தி அன்னையின் பரிந்துரையால் வாழ்க்கையில் முன்னேற இறை ஆசீர்வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்தந்தை A. P. **தேவசகாயம்**
முன்னாள் பங்குத் தந்தை

வாழ்த்துச் செய்தி

நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்திற்கு அடிக்கல் இட்டு எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறுவதை முன்னிட்டு வெளியிடப்படும் யூபில் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்பும் திருப்பணியின் இறுதிக் கட்டத்தில்தான் நான் நாவாந்துறைப் பங்குக் குருவாகப் பொறுப்பேற்றேன். இத்திருப்பணிக்கென இந்த ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக கடற்றொழிலாளர்கள் தங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை வழங்கினார்கள். இவ்வாறு பிறருதவியின்றி தாங்களாகவே இவ்வாலயத்தைக் கட்டி முடிக்க வேண்டும் என்ற மனவுறுதியுடன் அவர்கள் செயற்பட்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1967 ஆனி முதல் 1972 சித்திரை வரை நான் இம்மக்கள் மத்தியில் பணியாற்றிய காலத்தில் ஆலயத்தின் பூச்சு வேலைகள், நிலமிழுத்தல், மின்விளக்கமைத்தல், கதவு யன்னல் கண்ணாடி அமைத்தல், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளும் அத்தோடு எட்டடிக்குக் கூடுதலான நீளமுடைய இயேசு பாடுபட்ட சொரூபமும் வேறு பெரிய சொரூபங்களையும் ஸ்தாபிதம் செய்ய இறைவன் அருள் கூர்ந்தார். அத்தோடு 1970இல் மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதா பிரசீடியம் என்னும் மரியாயின் சேனையும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

அதேபோல் இன்றைய மக்களும் இவ்வாலயத் திருப்பணிக்குத் தேவையான உதவிகளைத் தாராளமாக வழங்கத் துணைபுரிய வேண்டுமென்று பரலோக அன்னையை இறைஞ்சுகிறேன்.

அருட்தந்தை G. E. மேரி யோசவ்
முன்னாள் பங்குத் தந்தை

ஆசிச் செய்தி

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய மக்களின் 75 வருட விசுவாச வாழ்வின் மகிழ்வில் உங்களோடு இணைந்து மகிழ்கின்றேன். அன்னையவளின் பரிந்துரை மூலமாக பல்வேறு இடர்கள், இடம்பெயர்வின் தாக்கங்கள் உறவுச் சிக்கல்களின் விளைவுகள் குடும்ப வாழ்வின் இடையூறுகள் மத்தியிலும் இறைவன் உங்களை தாயின் பராமரிப்பில் வைத்துக் காத்து வந்தமையை எண்ணி நன்றி கூறுகின்றேன். அன்னையை நம்பியோர் எப்போதும் கைவிடப்படமாட்டார்கள் என்பதை நான் பங்குத் தந்தையாக 1977 சித்திரை தொடக்கம் 1981 தை வரை உங்கள் மத்தியில் பணியாற்றிய வேளை நீங்கள் அன்னை மூலம் பெற்ற வரங்களில் இருந்து அறிந்து கொண்டேன்.

நான் பங்குத்தந்தையாக இருந்த வேளையில் மக்களின் ஒன்றிணைந்த முயற்சியாகப் பல்வேறு பக்திச் சபைகள், மன்றங்களை உயிரூட்டம் செய்ததோடு விளையாட்டுக் கழகத்தை மறுமலர்ச்சியடைய வைத்து பல சாதனைகளை ஈட்டச் செய்ததை மறக்க முடியாது.

1978ஆம் ஆண்டின் தவக்கால ஆற்றுகையாக பரபாஸ் என்னும் திருப்பாடுகளின் காட்சியானது தற்போதைய கலாபூஷணம் N.M. பாலச்சந்திரன் அவர்களால் எனது மேற்பார்வை, ஒழுங்கமைப்பின் கீழ் முதல் முதலாக நாவாந்துறை வரலாற்றில் மேடையேற்றப்பட்டதை மறந்துவிட முடியாது. மக்கள் பலம், விளக்கம் பெற்று ஒன்றுபட்டுச் சாதிக்கும் பண்பு போன்றவை காரணமாகவே இம் முதல் முயற்சி நிகழ்வுற்றமை அன்னை மரியின் மகிமைக்கும் அவளின் கனியாகிய இயேசுவின் அன்புக்கும் தந்தை இறைவனின் அருளுக்கும் சான்றாகியதெனலாம். மேலும் இக்காலத்தில்தான் 1980 மே 1இல் ஈவ்வாலயத்தின் முதற்குரு, செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஸ்ரீபன் அடிகளாரின் முதற் திருப்பலி நிகழ்வை ஆலய வளவில் பிரமாண்டமாக மேடையமைத்து நிகழ்த்தியதை மறக்கமுடியாது.

இவ்வாறு உங்கள் விசுவாச வாழ்வை அருட்சாதனங்களை வளர்த்துவிட்ட இவ்வாலயப் பெருமை கண்டு 75 வருடப் பூரிப்பில் மகிழும் உங்களோடு இணைந்து எதிர்கால வாழ்வு வளம் பெற ஆசிக்கின்றேன்.

அருட்தந்தை R.M.G. நேசநாயகம்
முன்னாள் பங்குத் தந்தை

ஆசிச் செய்தி

நாவாந்துறை பரலோக அன்னையின் 75வது ஆண்டு நிறைவையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆலயத் திருவிழா என்றால் ஆலயம் களைகட்டும். குடும்பங்கள் குதூகலிக்கும். இப்பங்கு மக்களோடு சேர்ந்து நானும் மகிழ்கின்றேன். 1993ல் இருந்து 1995 ஒக்ரோபர் 30 வரை நாவாந்துறைப் பங்கில் பணியாற்றிய நாட்கள் மறக்க முடியாதவை. போர் நம் மக்கள் வாழ்வை சிதறடிக்க, 1995ல் பாரிய இடப்பெயர்வும் இடம்பெற்ற பின்னணியில் இப்பங்கு மக்களை நான் நன்கு அறிவேன். துடியாட்டம், ஆற்றல்கள், விளையாட்டு, கல்வி, கலை உணர்வு இவற்றை உள்ளடக்கிய சமூகம்தான் இவ்வாலயச் சமூகம். கிறீஸ்தவ விசுவாசத்தில் உறுதியும், வழிபாடுகளில் முழுப் பங்கெடுப்பும், குருக்கள் துறவியர்க்கு கீழ்ப்படிகின்ற இவர்கள் மத்தியில் பணியாற்றியது நல்ல அனுபவம்.

திருவிழாவிற்குரிய பெரும் மாற்றங்களை ஆலயத்திலும், அதைச்சுற்றியும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. புலம் பெயர் மக்களினதும், உள்ளூர் மக்களினதும் செயற்பாடுகளால் மாற்றங்கள் நடைபெறுவதாகக் கொள்ளலாம். 'எங்கள் ஆலயம், எங்கள் மக்கள்' என்ற உணர்வு இம்மாற்றங்களுக்கு தூண்டுகோலாக அமையும். இம்முக்கிய ஆண்டில் ஆலயம் புதுப்பொலிவு பெறுவதை அனைவரும் விரும்புவர்.

எனினும் இதற்காக அனைத்தையும் விரயம் செய்யாமலும், ஆடம்பரத்திற்குள் அகப்படாமலும், பொறுமையிலும், ஏழ்மையின் விழிம்பில் உள்ள பலரது வாழ்வில் இத்திருவிழாவின் பெயரால் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஆலய விழாவின், பங்கு விழாவின் மகிழ்ச்சியை இரட்டிப்பானதாக மாற்றும் என்பதை நாம் உணர்வோம். அதையே நானும் ஆசிக்கின்றேன்.

'எல்லோருக்கும் எனது திருநாள் வாழ்த்துக்கள்'

அருட்தந்தை J.X போர்னாட் றெக்னோ
முன்னாள் பங்குத் தந்தை

Message of Blessing

நாவாந்துறை புனித மரியாள் ஆலய 75 ஆண்டு நிறைவில் யூபிலி விழாக் கொண்டாடும் பங்கு மக்களுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

நெருக்கடிகள் நிறைந்த காலம் அது. பாரிய இடம் பெயர்வுக்குப் பின் குடாநாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக சொந்த மண்ணுக்கு திரும்பிக்கொண்டிருந்த வேளை. திரும்பிக்கொண்டிருந்த நாவாந்துறை மக்களை பராமரித்து வழிநடத்த பணிக்கப்பட்டிருந்தேன். அவ்வேளையில் நான் புனித மாட்டின் சிறிய குருமடத்தில் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

இராணுவத்தின் கெடுபிடிகள் நிறைந்த அவ்வேளை பல சவால்கள், தடைகளையும் தாண்டி பங்கு மக்களுக்கு பணிபுரிவதில் ஒரு ஆத்ம திருப்தி. சிறு தொகையாக குடும்பங்கள் திரும்பி வந்திருந்தாலும், பங்கு மக்கள் தம் சொந்த வீட்டிற்கு வந்து விட்டோம் என்ற திருப்தியில் ஓரளவு மனத்துணிவோடு இருந்தார்கள். எங்கள் அன்னை மரியாளிடம் வந்துவிட்டோம் என்ற சிந்தனை அளவில்லா நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டியது.

ஆலய வழிபாடுகளில் மனப்பூர்வமாக பங்குபற்றினார்கள். தேவையான வேளைகளில் தங்கள் பங்களிப்பை அளித்தார்கள். ஒருவர் ஒருவருடன் நல்லுறவுடன் வாழ்ந்தார்கள்.

ஓரிரு ஆண்டுகள்தான் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அதனையும் மிக்க மகிழ்வோடு செய்தேன். மக்களுடைய ஆதரவு எப்பொழுதும் அதிகமாகவே இருந்தது. இவ்வளவு கட்டங்களையும் தடைகளையும் தாண்டி வந்து இன்று ஓரளவு வளம், முன்னேற்றம் அடைந்தவர்களாக வாழும் புனித மரியாள் ஆலய மக்கள் தொடர்ந்து இறையருள், ஆசீர் நிறையப்பெற்று, இறை நம்பிக்கையில் உறுதி கொண்டவராக ஒன்றுபட்ட, மகிழ்வான கிறிஸ்தவ சமூகமாக வாழவேண்டும் என்று ஆசீர் கூறி நிற்கின்றேன்.

அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன்
முன்னாள் பங்குத் தந்தை

விசுவாசத்தின் அடையாளமாக

யாழ். நகரில் இறை விசுவாசத்தின் அடையாளமாகத் திகழும் நாவாந்துறை பரலோக அன்னை ஆலய 75வது ஆண்டு நிறைவைக் காண அருள்பாலித்த இறைவனுக்கு நன்றி கூறி மகிழும் பங்கு மக்களுக்கு இறையாசீர் நிறைவாய் வேண்டி வாழ்த்துகின்றேன்.

பரலோக அன்னை ஆலயத்தின் பக்தி முயற்சியால் இறையருளைப்பெற முன்னின்று உழைத்த முன்னோர்களின் விசுவாசவாழ்வு, அர்ப்பணிப்புக்கள் அருள் வடிவங்களாக பல அற்புதங்கள், ஆசீர்கள் பெற வழிகாட்டிகளாக உழைத்தவர்களை நன்றியோடு நினைவு கூறுவோம். இன்று எமது விசுவாச வாழ்வைச் செயலால் பகிரும் யூபிலி ஆண்டாக ஏற்று நல் வாழ்த்துக் கூறுவோம். பரலோக அன்னையின் வேண்டுதலும் இறைவனின் அருளாசீரும் என்றும் விசுவாச வாழ்வால் நிலைத்து வாழ இறையாசீர் கூறி வாழ்த்துகிறேன்.

அருட்பணி ச. யூஜின் பிரான்சிஸ்
இயக்குனர், கரித்தாஸ் கியூடெக்,
யாழ்ப்பாணம்.

ஆசிச் செய்தி

நாவாந்துறை தூய மரியாள் ஆலயத் திருச்சபை தமது ஆலயத்தின் 75ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடுகின்ற மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாவாந்துறைப் பங்கு எனது பணிவாழ்வின் புதிய அனுபவம். திருப்பலி ஒப்புக்கொடுப்பது என்பது மகிழ்ச்சியான அனுபவம். ஏனென்றால் மக்கள் எல்லோரும் குருவோடு சேர்ந்து ஈடுபாட்டுடன் பலி ஒப்புக்கொடுக்கும் நிலை ஒரு பரிசுத்தம் நிறைந்த திருச்சமூகத்தை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைந்துள்ளது. மரியாளிடமும், நற்கருணை நாதரிடத்திலும் அவர்கள் வைத்திருக்கும் பற்று வார்த்தைகளால் சொல்ல முடியாது. தமது பற்றையும், விசுவாசத்தையும் அவற்றில் உள்ள ஈடுபாட்டையும் அவர்கள் வெளிப்படுத்தும் செயல்கள் என்னைப் பிரமிக்க வைத்தன. தம் முன்னோர் கட்டிக் கொடுத்த ஆலயத்தை அப்படியே விட்டுவிடாமல் அதை எப்படியெல்லாம் மெருகூட்ட முடியுமோ அப்படியெல்லாம் மெருகூட்டி ஆலயத்தையும் அதன் சுற்றாடலையும் எப்போதும் சிறப்பித்துக் கொண்டு இருப்பார்கள்.

அவர்கள் ஆன்மீகத்தில் மாத்திரமல்ல விளையாட்டு, கலை, கல்வி போன்ற துறைகளிலும் ஈடுபாட்டுடன் முன்னேற்றம் கண்டு அத்துறைகளில் தங்கள் பிள்ளைகளையும் வளர்த்து வருபவர்கள். எத்துறைகளில் ஈடுபட்டாலும் ஆலயத்தை மையமாகக் கொண்டே செயற்படுபவர்கள். இன்று யூபிலி விழாக் காணும் ஆலயத்தின் அமைவிடம் இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரையாகும். இதனால் இவர்களது வாழ்வு கடல் அன்னையுடனும், அன்னை மரியாளுடனும் இரண்டறக் கலந்த வாழ்வாக மாறியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இவர்கள் குருக்கள், துறவிகளை அன்பு செய்பவர்கள் மட்டுமல்ல பல குருக்களையும், துறவிகளையும் திருச்சபையின் பணிக்கு அர்ப்பணித்தவர்கள். இன்னும் இறை அழைத்தல் பெருக வேண்டும் என்று செபிப்பவர்களும் கூட.

இவ்வாறாக பல வகைகளிலும் தங்கள் ஆற்றல்கள் திறமைகளை வளர்த்து இன்று தமது ஆலயத்தின் 75ம் ஆண்டு நிறைவை பெருவிழாவாகக் கொண்டாடும் நாவாந்துறை தூய பரலோக அன்னை ஆலய மக்களை வாழ்த்தி ஆசீர் கூறுகின்றேன்.

அருட்பணி பா.பி. இராசசிங்கம்
முன்னாள் பங்குத் தந்தை

வாழ்த்துச் செய்தி

"பிறையேறி விண்சென்ற பெருமகளே எம் தாயே
தந்தையருகிருப்பவளே
தமியரெமை காத்தருளே!"

நாவந்துறை பரலோக அன்னையின் திருச்சொருப அழகிலே லயித்து அன்று எழுதிய பாடல் வரிகள் மட்டுமல்ல பங்குத்தந்தையாய் பணியாற்றிய 2006-2009 ஆண்டு காலப்பகுதியின் நினைவுகள் அனைத்தும் பசுமரத்தாணியாய் மனதிலே பதிந்துள்ளன.

பணிப்பொறுப்பேற்று சில மாதங்களிலேயே பரலோக அன்னை ஆலயத் திருவிழா வந்தது. நவநாட்களிலேயே இறுதிக்கட்ட போர் ஆரம்பித்து விட்டது. ஊரடங்கு உத்தரவின் மத்தியிலே மணியொலியின்றி திருச்சொரூபத்தை ஆலயத்தைச் சுற்றி வந்து விழாவை நடாத்தினோம். அவ்வாறு ஆரம்பித்த போரின் கொடூர நாட்களுக்கூடாக எமது விசுவாசப் பயணம் உறுதியாகத் தொடர்ந்தது. நினைவுகள் அனைத்தும் நிறைவு தருபவையாகவே அமைந்திருக்கின்றன. துன்பமான நாட்களை கிறிஸ்தவ நட்புறவோடு எதிர்கொண்டோம்.

அருட்சகோதரி புனிதராணி தலைமையிலான நல்லாயன் சகோதரிகள் குழுஇ கிராம சேவையாளரான திரு.சுந்தரராஜனின் ஒத்துழைப்பு என இணைந்து மேற்கொள்ளக் கிடைத்த சமய சமூக பணிகள் ஒவ்வொன்றும் மனதில் நிழலாடுகின்றன. பரலோக அன்னை ஆலயத்தின் பவள விழாவை எதிர்கொள்ளும் இந்நாட்களில் பசுமையான நினைவுகளைக் கொண்ட அந்த நாட்களை எண்ணிப் பார்த்தேன். வசதிகள் இருக்கவில்லை. ஆனால் எம்மிடம் வாழ்விருந்தது. சண்டைகள் இருக்கவில்லை. ஆனால் சகோதரத்துவம் தளைத்தோங்கியது. எம்மால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளுக்கும் முழு ஆதரவு தந்த நாவாந்துறை பங்கு மக்களை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரது அன்பும் இன்றும் மனதை நெகிழ வைக்கிறது.

இப்போது ஆலய முன்றலின் பல கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. ஆலயம் சிறப்பாக மெருகேற்றப்படுகிறது மகிழ்ச்சி. ஆயினும் பங்கின் ஓரங்களில் குறிப்பாக நித்திய ஒளிப்பகுதியில் மக்கள் இன்றும் மிகவும் நலிவடைந்த நிலையில் வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அன்னை மேல் கொண்ட பாசத்தினால் ஆலய வளாகத்தை அலங்கரிக்கும் மக்கள்இ புலம்பெயர் உறவுகள் ஏன் "பவள விழா நகர்" ஒன்றை இப்பகுதியில் அமைத்திருக்கக்கூடாது? அன்னையின் பாசக்கரங்களாக இருந்து இம் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற முன்வந்தால் எப்படி இருக்கும்?

எனது மனதில் தோன்றிய இக்கருத்துக்களை அன்புரிமையோடு முன்வைத்து பங்கு மக்கள் அனைவருக்கும் பவளவிழா நல்வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கிறேன்.
பரலோக அன்னையின் பரிந்துரை அனைவரின் வாழ்விலும் வளம் சேர்ப்பதாக!

அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரன்.

ஆசிச் செய்தி

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி மகிழும் ஆலய மக்களிற்கு ஆசிகூறி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எழுபத்தைந்தாண்டுகள் இவ்வாலயத்தின் ஆன்மீக செயற் பாடுகளினால் இம்மக்கள் பெற்ற அருள்வளங்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

ஆலயங்களின் அடிப்படை இலக்கு, மக்களின் மனங்களை ஒருமுகப்படுத்தி, இறையுறவிலும், அதன் கனியாக அயலவர் உறவிலும், மன அமைதியிலும், வாழ்க்கைப் பயணத்தை அர்த்தத்துடன் மேற்கொள்ள வைப்பதே. அந்நோக்கில் பார்க்கும்போது இவ்வாலயம் இறையுறவின் ஒற்றுமையின் அடையாளமாக இருந்தது மட்டுமன்றி உறவையும், ஒற்றுமையையும் வளர்க்கும் ஒரு ஊற்றாகவும் இருந்துள்ளது.

மேலும் நல்ல கிறிஸ்தவ இறையரசின் விழுமியங்களை மக்கள் மத்தியில் விதைக்கும் உயர்ந்த விளை நிலமாகவும் இவ்வாலயம் இருந்து வந்துள்ளது. இறை நம்பிக்கை வாழ்வின் உயர்ந்த அருள் அடையாளமாகவும் இவ்வாலயம் திகழ்ந்துள்ளது. இங்கு நடைபெற்ற வழிபாடுகள், திருவிழாக்கள், திருப்பலிகளினூடாக இம்மக்கள் பெற்ற இறையரசின் விழுமியங்கள் இவர்களின் வாழ்வியலில், கூட்டு செயற்பாடுகளில் முக்கியமான வகிபாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குடும்ப வாழ்விலும் இவ்வாலயத்தின் ஆன்மீக செயற்பாடுகள் கணிசமான தாக்கத்தை, வழிநடத்துதலை கொடுத்துள்ளது. நல்ல குடும்பங்களே இறை அழைத்தலின் விளை நிலங்களாகும். இவ்வாலயத்தைச் சேர்ந்த பலர் துறவற, குருத்துவ வாழ்விற்கு தம்மை அர்ப்பணித்துள்ளார்கள் என்றால் நல்ல குடும்பங்களை உருவாக்குவதில் இவ்வாலயம் பெரும் பங்காற்றியுள்ளது என்பதே அர்த்தமாகும்.

தொடரும் காலங்களிலும், இவ்வாலயத்தின் மக்கள் காலச்சூழலுக்கு ஏற்ப, ஆவியின் வழி நடத்துதலால், புதிய உத்வேகத்துடனும் புதுப் பொலிவுடனும் புதிய பாதையில் பயணிக்க, பரலோக அன்னையின் பரிந்துரை என்றும் இம்மக்கள் மீது இருக்க இறை ஆசிர் வேண்டுகின்றேன்.

அருட்பணி கி. ஜோ. ஜெயக்குமார்
முன்னாள் பங்குத் தந்தை

ஆசிச் செய்தி

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது..." (லூக். 1:47)

நாவாந்துறை புனித மரியன்னை ஆலயத்தின் 75வது ஆண்டு நிறைவில் யூபிலி ஆண்டாக மகிழ்ந்து கொண்டாடுகின்ற பங்குத்தந்தை, அருட் சகோதரிகள், பங்கிலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருக்கும் இவ்வாலயத்தின் மக்கள் அனைவரையும் முன்னாள் பங்குத் தந்தை என்ற மகிழ்வின் உரிமையில் மனமார வாழ்த்தி நிற்கின்றேன். இந்த யூபிலியை கொண்டாட நீங்கள் மேற்கொண்ட அனைத்து நிகழ்வுகளையும் பாராட்டி நிற்கின்றேன்.

ஒரு கிராமத்தின் ஆன்மீக மையமாக அமைவது அதன் ஆலயமாகும். அந்த வகையில் 75 வருடங்களுக்கு முன் ஒரு சிறிய கொட்டில் கோவிலாக உருவெடுத்து இன்று பல துரித பரிணாம வளர்ச்சி கண்டு பல அரிய வடிவங்களுடனும், பல பக்தி முயற்சி சின்னங்களுடனும் கண்கொள்ளாக் காட்சி தரும் அன்னையின் ஆலயம் பலரை இறைவழி இட்டுச் செல்ல இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

இவ்விடத்திலும், வேறு பல இடங்களிலும் வாழுகின்ற பரலோக அன்னையின் அன்பு பக்தர்களே பல முயற்சி எடுத்து பல தியாகங்களை மேற்கொண்டு கட்டியெழுப்பி, கட்டிக்காத்துவரும் அன்னையின் மகிமையை யூபிலிக் கொண்டாட்டத்துடன் சோர்வடையவிடாது அன்னை அன்றும், இன்றும் கூறுவது போன்று "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா. 2:5) எனும் கூற்றுக்கு அமைய இறை சித்தத்தை அறிந்து செயற்பட்டு நூற்றாண்டு விழா நோக்கி வீறு நடை போட்டிட இறையாசீருடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

பரலோக அன்னையின் ஆசீரும் பரிந்துரையும் உங்களுக்கு என்றும் கிடைப்பதாக.

அருட்தந்தை மோ. சோபன் றூபஸ்
முன்னாள் பங்குத் தந்தை

ஆசிச் செய்தி

"அருள் மிகப் பெற்றவளே வாழ்க"

நாவாய் பரலோக அன்னை ஆலயம் தனது 75வது ஆண்டிலே காலடி எடுக்கும் இவ் வேளையில் இவ்வாலயத் திருச்சபையை வாழ்த்துவதில் மன நிறைவு அடைகின்றேன். கிறிஸ்துவின் இறையரசுக் கனவை நனவாக்கும் குட்டித் திருச்சபைகளாக ஆலயங்களும் அதனைச் சூழ்ந்துள்ள அன்பியச் சமூகமும் காணப்படுகிறது.

தாய்த் திருச்சபையின் கொள்கைகள், போதனைகள், வழக்காறுகளை உள்வாங்கி மக்களுக்குள் ஊடுருவச் செய்வது ஆலயத்தின் மிக முக்கிய பணியாக இருக்கிறது.

இந்த வகையில் தாய்த் திருச்சபையின் தனித்துவத்தையும், தம் சமூகத்தின் சிறப்பையும் இணைத்து 75 வருடம் இவ்வாலயம் பயணித்து வருகிறது என்பது இறை ஊக்கமும் இறை திட்டமும் ஆகும்.

இவ்வாலயம் வெறுமனே காலத்தை மட்டும் கடந்து வரவில்லை. ஆழமான விசுவாசிகளையும், அருட்பணியாளர்களையும் உருவாக்கி இருக்கிறது.

இறைவனும் மனிதனும் இரண்டறக் கலந்த வரலாற்றில் 'மரியாளின் சிறப்பிடம்' இன்று கேள்விகளுக்கு உட்பட்ட போதும் அசையாத மரியாளின் விசுவாசக் கோட்டையாக நாவாய் பரலோக அன்னை ஆலய திருச்சபை விளங்குவது தனிச்சிறப்பே.

அன்னையின் ஆசிகளும், பரிந்துரைகளும் இவ்வாலயத் திருச்சபையை எப்போதும் இயங்கு நிலையில் வைத்திருக்கிறது.

அன்னையின் ஆசிகள் உங்களோடு இருப்பதாக.

ஆசிக்கும்

அருட்தந்தை சதீஷ்

நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

Message of Blessing

O glorify the Lord! Give praise to His Holy Name!

Such are our joyous sentiments of deep gratitude to God, as we (Srs.Assumpta Maria, Paschal & Angela) write this short message on the occasion of the 75th Anniversary of St.Mary's Church at Navanthurai. Congratulations to you, dear Parishioners of St. Mary's Church! Do you realize how blessed you are? Yes, you are truly blessed! We recall with profound joy our experience of the Blessings poured out on you through the intercession of our Blessed Mother Mary, during our short stay in Navanthurai, as the first community in Nallayan illam if we experienced and saw such a wealth of blessings showered on you during our short stay, how much more, has been the super abundancce of graces and blessings of 75 years! Heartfelt thanks to our Blessed Mother Mary! Praise the Lord with all your heart and soul, and never forget all His blessings!

We recall how through many problems of varied kinds, the prayers and cries that wafted on High to God, through our Blessed Mother Mary, our Divine Mediatrix! She was our Most Powerful intercessor and Mothr whose constant care for the good of Her Children, never wavered! She did not leave you for a single moment, and She still continues to be concerned about you, caring for you in the most extraordinary ways one could hardly imagine! She has nurtured all of you, even when you were hardly aware of her presence with you in your family life and in your Parish! She never left you in times of trouble or tribulation! She was always there by your side. You were blest sons and daughters of Mother Mary! Praise the Lord.

We wish to mention in particular the blessings showered by our Blessed Mother Mary on the parish of St.Mary's in the form of dedicated parish priests, a few of whom we knew personally during our ministry in Navanthurai! We also wish to mention the numerous vocations to the priesthood and religious life that have sprung up from St.Mary's parishioners. We remember in the 1970s, when we mentioned the word 'relisious life' in one of our conversations, and the response we then received, "Can we ever have vocations to the priesthood or religious life from our village of Navanthurai?" But we were sure it will happen, and it has happened! Our Grateful thanks to our Blessed Mother Mary, and congratulations to you, dear Parishioners! You are Blessed! You are truly blessed! And we too are blessed to have been associated with St. Mary's Church! We continue to be united with you in love, through and prayer! Congratulations, once again, and thank you! May you continue to be true sons and daughters of our Blessed mother Mary as She continues to lead you to her Divine Son, showering His choicest blessings on al of you! God bless you!

Sr. Mary Angela Fernando, RGS & Sr. Paschal Fernando, RGS.

வாழ்த்துரை

பவளவிழாக் காணும் எம் நாவாயூர் பரலோக அன்னை ஆலய மக்களுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்து. 'கடல் அலைகள் மோதும் நாவாய் துறையில் பக்திப் பெருக்குடன் வீற்றிருக்கும் அன்னையே பரலோகத் தாயே வாழ்க, வாழ்க'.

எம் முன்னோரின் விடா முயற்சியாலும், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், ஆசிரியர்களின் ஆன்மீக வழிநடத்தலாலும், பல குருக்களையும், அருட் சகோதரர்களையும், அருட் சகோதரிகளையும் தன்னகத்தே கொண்ட நாவாந்துறையே வாழ்க பல்லாண்டு.

கலை, கல்வி, விளையாட்டுத் துறையில் முன்னிலையில் நிற்கும் எம் இளைஞர்கள், யுவதிகளையும், மாணவ, மாணவிகளையும் உள்ளடக்கியது எம் ஆலயம் என்று கூறுவதில் பெருமைப் படுகின்றேன். சூரியனை நோக்கி மட்டுமே மலரும் சூரிய காந்தி மலர்களைப் போல் இறைவனை நோக்கி எம் மக்கள் வாழவும், வளரவும், பரலோக அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்திடவும் இறைவனின் ஆசீர்வாதங்களும் எனது செபங்களும் உரித்தாகட்டும்.

அருட்சகோதரி மேரி எமிலின் ஆசீர்வாதம்

ஆசிச் செய்தி

பரலோக அன்னையின் பதியின் 75வது ஆண்டில் கால் பதிக்கும் நாவாந்துறை பங்கு மக்களையும் பங்குத் தந்தையையும் வாழ்த்துவதில் நாம் பெருமையடைகின்றோம். வரலாற்றில் விசுவாசத்தின் வளர்ச்சியில் வெற்றிகண்ட புனித தளங்களில் ஒன்று நம் பரலோக அன்னையின் பரிசுத்த தளம். அன்னையின் பரிந்துரையினால் பல ஆன்மீகக் குருக்களும் துறவிகளும் விசுவாசத்தின் விளை நிலங்களாக உருவாகி திருச்சபையை அழகுபடுத்தியிருக்கிறார்கள். புனித அகுஸ்தினார் தன் வாழ்வின் அனுபவத்தில் இவ்வாறு அன்னையை வர்ணிக்கின்றார். "மண்ணில் தோன்றிய விண்மலர் அன்னை மரியாள், அவளிடமிருந்து தான் வான்புகழ் லீலிமலர் தோன்றியது அன்னைதான் நம் வாழ்வில் காலக் கண்ணாடி". இத்தகைய நிலையில் தம் புனிதம் நிறைந்த வாழ்வினாலும், இடைவிடாத பாதுகாவலினாலும் நம் தாய் மரி நம்மைப் பாதுகாத்து தம் திருமகனின் பாதையை நமக்குச் சுட்டிக்காட்டுகிறாள்.

இவ்வூரில் அன்னையின் பதி நமக்கு ஓர் உன்னத அடையாளம். சோகத்தில் வாழ்வோருக்கு ஆறுதலையும், மனமுடைந்தோருக்கு ஊக்கத்தையும் தருமாறும் உள்ளங்களுக்கு வாழ்வின் நிழலையும் கொடுத்து நம்மை ஆன்மீக பாதையில் வழிநடத்தும் அற்புதமான தாரகை நம் பரலோக அன்னை. இத்திருத்தலத்தில் நம் பரலோக அன்னை வீற்றிருந்து நம்மிடம் கேட்பது, செபித்து அருள் வாழ்வைப் பெற்றுக் கொள்வதே ஆகும். இத்தகையை வாழ்வு தான் நாம் கொண்டாடுகின்ற பவள விழாவிற்கு மகுடம் சேர்க்கும்.

யாழ். மண்ணில் கத்தோலிக்க விசுவாசத்தை வளர்ப்பதில் பரலோக அன்னையின் ஆலயமும் முக்கிய தளமாக இருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் செய்தி. காலம் காலமாக வளர்க்கப்பட்ட விசுவாசத்தின் விளக்கு இன்று இவ்விழாவில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இவ்விழாவைக் கொண்டாடும் பங்குத் திருச்சபையையும், ஆலய மக்களையும் மீண்டும் வாழ்த்துவதோடு பரலோக அன்னையின் பரிந்துரையால் புதிதாய் வாழ்வோம் என்னும் தொனியில் நிலைத்து நிற்போமாக.

உங்களுக்கு எங்கள் "சபை இறைபராமரிப்பு அருட்சகோதரிகளின் இறை ஆசீரும் அன்பும்".

அருட்சகோதரி மேரி மலர் சிறில்

ஆசிச் செய்தி

இறை இயேசுவில் அன்பானவர்களே!
பவள விழாவைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய இறை ஆசீரோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

அன்னை மரியா அன்று ஆண்டவரின் திருவுளத்தை நிறைவேற்ற முன் வந்து, "அருள் மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்" என்னும் தூதரின் வாழ்த்துக்கு "இதோ ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அன்பான இறைமக்களே மரியன்னை தன்னுடைய வாழ்விலே அன்பு, தாழ்ச்சி, பொறுமை, பரிவு, இரக்கம் என்னும் நல்ல பண்புகளால் எமக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்து காட்டினாள்.

சிறு பராயத்திலிருந்து அன்னை மரியாளின், அடிச்சுவட்டைத் தொடர்ந்து வாழ்ந்த என்னுடைய வாழ்க்கையில் இறைவனுடைய அழைப்பை ஏற்று, துறவற வாழ்வுக்கு காலடி எடுத்து வைத்த நாள் இறைவனின் ஆழமான விசுவாசம், அன்பு, இரக்கம், பொறுமை போன்ற பண்புகளை என்னுடைய குடும்பத்திலும், பங்கிலும் இருந்து பெற்றுக்கொண்டேன் என்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

எனது அழைப்பை குடும்ப செமாலை மூலாமாகவே பெற்றுக் கொண்டேன். அதிலும் விடேமாக, "தேவ அழைத்தல்" செபத்தைச் சொல்லுகின்ற போதெல்லாம் என்னுடைய உள்ளத்தில் ஒருவித விழிப்பு வந்துபோனதை உணர்ந்தேன். அந்த அழைப்பை, அமைதியாகத் தினமும் செவிமடுத்தவளாக, வாழ்ந்து வந்தேன். காலத்தின் சூழ்நிலையால், துன்பப்பட்டோம். போர், இடப்பெயர்வு, உயிரிழப்பு, இவற்றின் மத்தியிலும் இறைவனின் அன்பும் பராமரிப்பும், அவரது வழிநடத்தலும் என்னோடு இருந்து வழிநடத்தியதை உணர்ந்தேன். "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்ற இறைவார்த்தை மரியன்னைக்கு உறுதி கொடுத்தது போல, எனது வாழ்க்கைக்கும் சக்தி தந்தது.

எமது ஆலயம் அமைந்து 75 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்நாளில், எம் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட சந்தோ'ங்கள், கஸ்ரங்கள், இழப்புக்கள், மத்தியிலும் விசுவாசம் காக்கப்பட்டு வந்த மகிழ்வின் அடையாளமாக யூபில் விழா கொண்டாடுவது மகிழ்வைத் தருகின்றது. இந்த யூபிலி ஆண்டிலே விடே விதமாக எமது பங்கில் உள்ள குடும்பங்களை நசரேத்தின் திருக்குடும்பம் எவ்வாறு தந்தையின் சித்தத்தோடு தம்மை ஒன்றித்து வாழ்ந்ததே அதே போன்று நசரேத் திருக்குடும்பத்தின் பண்புகளை வாழ்ந்து ஐக்கியத்தை கட்டியெழுப்பி, 'இறைவனுக்கு மாத்திரமே' என்ற மகிமையோடு எம் நிறுவுனரின்

வார்த்தைக்கு ஏற்ப "முன்னேறிச் செல்லுங்கள்" என்ற பொன்மொழிக்கு ஏற்ப வாழ அழைத்து நிற்கின்றேன்.

தொடர்ந்தும், உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி, மரியன்னையின் கரத்தில் ஒப்படைத்து நிற்கின்றேன்.

அருட்.சகோ. மேரி றெஜின் யோசவ்,
முன்னாள் பங்குத் தந்தை
திருக்குடும்ப சபை,
உகண்டா,
ஆபிரிக்கா.

ஆசிச் செய்தி

என் இதயத்தின் ஆழத்திலிருந்து எனது நல்லாசியைப் பகிர்கிறேன். நாவாந்துறை பரலோக மாதா பக்தர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 75 ஆண்டுகளாக நாம் பெற்றுக்கொண்ட எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களுக்கு என் இதயபூர்வமான நன்றியை இறைவனுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

நல்லாயன் யேசுவின் கருணை உள்ளமும் ஒருமைப்பாடும் நிறைந்த முழுமையான பணியில் எம்மை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி அவரது பணியை சிறப்பாகச் செய்வதற்கு எமக்கு உறுதுணையாக இருந்த, இன்று எம்மத்தியில் தோள்கொடுத்து தோழர்களாக வாழ வழி அமைத்தவர்கள் எம் முன்னோர்கள் என்பதையும் மறக்க முடியாது. தொடர்ந்து இப்பணியையும் ஒற்றுமைமிக்க சமுதாயத்தை எமது இளையோர்க்கு ஒப்படைக்கின்றோம். தொடர்ந்து அவர்கள் வழிகாட்டும் நல்ல ஆயர்களாக செயல்படுவார்களாக. கடந்து வந்த துன்ப துயரங்களை இறை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு உங்கள் விசுவாசத்தை ஆழப் படுத்தியுள்ளீர்கள். உண்மையில் பாராட்டக்கூடிய விடயம்.

இன்னும் பரலோக அன்னையின் அருளும் ஆசியும் நிறைவாக பொழிய வேண்டுமென்று சொல்லியும் உங்களோடு தொடர்ந்து மரியாள் பயணம் செய்து சகல மக்களும் மகிழ்வோடும் வெற்றியோடும் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள நல்லாசிகள்.

மரியே வாழ்க

அருட்சகோ. மே. யூடித்

Message of Blessing

I am pleaserd to send a message of felicitation on the occasion of the 75th Jubilee celebrations of the church of Our Lady of Assumption at Navanthurai, Jaffna.

I'll never forget the piely with whivh the Parishoners partook in the church Lithurgy and participated in the church activities.
God will reward you and your families abundantly, as he did during the past many years.

Let us not forget our ancestors who sacrificed their time, energy and finances to build this beautiful church in honour of our lady.

They prayerful and best wishes as you celebrate the Jubilee. May Our Lord and His Mother Mary bless you.

Sr. Monica Fernando

ஆசிச் செய்தி

புனித மரியாள் ஆலயத்தின் 75 வருட யூபிலி ஆண்டினை முன்னிட்டு நான் பங்கு மக்களுடன் இணைந்து இணைவனைப் போற்றுகின்றேன்

மக்கள் தங்கள் கஸ்டங்கள் மத்தியிலும், கவலைகளை மறந்து இறை அன்னையுடன் இணைந்து இறைவனைத் தமது வாழ்வின் மையமாக வைத்து வாழ முயன்றார்கள். முரண்பாடுகள் முட்டுக்கட்டைகள் வந்தபோதும் மனம் தளர்ந்து சோம்பிக் கிடக்காது தங்கள் பாதச் சுவடுகளை உறுதியாக வைத்து முன்னேறிச் சென்றார்கள் என்பது வெள்ளிடைமலை.

இறைபணி ஆற்ற அநேக குருக்களும், அருட் சகோதரர்களும் அருட் சகோதரிகளும் உருப்பெற்றனர். இன்னும் துறவறம் தழைத்தோங்கவும், இல்லறத்தார் இறைவன் வழியில் செல்லவும், பரலோக அன்னையின் வரம் வேண்டி வாழ்த்தி நிற்கும்....

அருட்சகோதரி மொனிக்கா பஸ்தியாம்பிள்ளை

வாழ்த்துச் செய்தி

யாழ் நாவாவூர் மண்ணில் இறையருள் தனைப் பெற்றுத்தரும் பரலோக அன்னையின் ஆலயத்தின் 75வது வருட நிறைவை மகிழ்வோடும், நன்றியோடும் நினைந்து கொண்டாடும் பங்கு சமூகத்திற்கு அன்னையின் பரிந்துரையால் ஊற்றெடுக்கும் ஆசீர் மழை அனைவரதும் உள்ளத்தில், இல்லத்தில், பங்குச் சமூகத்தினரை நனைத்திட ஆசிக்கின்றேன்.

பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் இவ் மங்களகரமான நாட்களில் பரலோக அன்னையின் அரவணைப்பில் என்றும் மகிழ்வுடனும், ஒற்றுமையுடனும், ஒரு தாயின் மக்கள் என்ற உறவுடனும் அனைவரும் இணைந்து வாழ அன்னை துணை செய்ய வேண்டும். பலரின் கண்ணீரைப் போக்கி, பல இன்னல்கள், இடையூறுகள், இடப்பெயர்வுகளில் கண்மணிபோல் காத்து நின்ற அன்னையின் பண்புகள் ஒவ்வொருவரிலும் திகழ வேண்டும்.

இம் மகிழ்வு நிறைந்த நாளில் அன்னையின் அன்பு நம் அனைவருக்கும் ஆறுதலாகவும் அன்னையின் மன்றாட்டு நம் அனைவருக்கும் விடியலாகவும், அன்னையின் செபமாலை நம் அனைவருக்கும் வெற்றியாகும். எனவே பரலோக அன்னையின் பரிந்துரையினால் அனைவருக்கும் நிறைந்த அருளும் ஆசியும் கிடைக்க ஆசிக்கிறேன் வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி பற்றிசியா இராஜேஸ்

Message of Blessing

It gives me great pleasure to write this message as the people of Navanthurai bring to a close 75 years of being a haven of peace and shelter for all those who came to our Blessed Mother Quean of Heaven; specially during trouble times and otherwise. Let us with grateful hearts thank God our loving father for all the happy memories of past years; working together in the building up of God's kingdom. May his love and care continue to be with you, your families and your occupations, on your life's journey.

Wishing you God's choicest blessing on this happy occasion.

Sr. Assumptha Murugupillai

ஆசிச் செய்தி

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக
மனுவைப் படைத்தான் தனைவணங்க"

அகவை எழுபத்தைந்து வருடங்களில் விழாவை நினைவு கூரும் எமது தூய பரலோக அன்னையின் ஆலயத்தை வாழ்த்தி என் ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடலலை தாலாட்ட, இளந்தென்றல் மேனியை வருட நாவாய் என்று அழைக்கப்படும் நாவாந்துறை என்னும் நன்மையான பதியில் பக்திப் பரவசத்துடன் காட்சி தரும் புனித பரலோக அன்னை ஆலயம் அமையப்பெற்றது எம் நாவாய் மக்கள் பெற்ற பெரும் பேறாகும்.

நல்லாயன் சபையைச் சார்ந்த அருட் சகோதரிகள் 1974ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இப்பங்கில் அன்னையின் அருகில் பணிபுரிந்து அன்னையின் அருளைப் பெற்றுள்ளார்கள். எம் சேவைக் காலத்தில் எம்மையும் எம் மக்களையும் எதிர்நோக்கி எழுந்த எத்தனையோ சவால்கள், ஆபத்துக்கள் நிறைந்திருந்த வேளையிலும் எம் பரலோக அன்னையின் பாதுகாப்பும், பரிந்துரையும் எம்மை வெற்றிபெற வைத்துள்ளது.

பரலோக அன்னையின் பக்தர்களாகிய எம் பங்கு மக்களின் ஆன்மீக வாழ்வும், இறைப் பற்றும், ஆழ்ந்த விசுவாசமும் மெச்சத்தக்கது. இதனாலேயே இவ்வாலய விதை நிலத்திலிருந்து அநேக அருட்பணியாளர்களையும், அருட்சகோதரிகளையும் உருவாக்க முடிந்தது.

எனவே இம் மகிழ்ச்சிகரமான நிகழ்வுடன் எதிர்வரும் காலங்களிலும் பரலோக அன்னையின் பாதுகாப்பும், பரிவும், பரிந்துரையும் நாவாய்ப் பங்கு மக்களுக்குக் கிடைத்தருள வரம் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

கிறிஸ்துவின் அன்பில் வாழும்
அருட்சகோதரி புனிதராணி மாற்குப்பிள்ளை

ஆசிச் செய்தி

கடல் அலை தாலாட்டும், வங்கக் கடலின் நாவாய் ஊரினிலே குடி கொண்டுள்ள புனித மரியாள் ஆலயத்தின் 75வது ஆண்டு யூபிலி விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தம் முன்னோர் கட்டியெழுப்பிய இறை விசுவாசத்திலே வாழுகின்ற புனித மரியாள் ஆலய சமூகம், தனது இறை பக்தியினாலும், விசுவாசத்தினாலும் இன்று ஏராளமான குருக்களை, துறவிகளை ஈன்றெடுத்த சமூகமாகத் திகழ்வது, அவர்களின் விசுவாச வாழ்வின் பிரதிபலனே. இம்மக்கள் அன்னை மரியாளிடத்திலும், ஆலயத்திலும் மிகுந்த பற்றுடையவர்கள். தங்கள் ஆன்மீக வாழ்வோடு மட்டும் நின்றுவிடாது, கல்வித்துறை, கலைத்துறை, விளையாட்டுத் துறைகளில் முன்னேற ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் உழைப்பவர்கள். கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாகாது என்ற முதுமொழிக்கு ஏற்ப முன்னோர்கள் அழகிய ஆலயத்தை அமைத்துள்ளார்கள். இன்று இவ்வாலயம் எல்லா மக்களும் வழிபடுகின்ற மரியாளின் ஆசீரைப் பெறுகின்ற புனித இடமாகப் போற்றப்படுகின்றது. சிறுவர்கள் முதல் பெரியோர்வரை, தமது கல்விக்காகவோ, தொழிலுக்காகவோ, விளையாட்டு நிகழ்வுகளுக்காகவோ செல்லும்போதும் சரி, திரும்பி வரும்போதும் சரி அன்னை மரியாளின் பரிந்துரையைப் பெற்றுச் செல்பவர்கள், இவ்வாறான ஆன்மீக வளர்ச்சிக்குக் காரணமான முன்னோர்களை நாம் மறந்து விடமுடியாது.

எனது பணிவாழ்வில் நீண்ட காலம் பணி செய்த பங்கு நாவாந்துறை என்று கூறுவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இவர்கள் அன்பும், மரியாதையும், நன்றியுணர்வும் கொண்டவர்கள். நல்லாயன் அருட்சகோதரிகளுடன் நெருக்கமான உறவை வளர்ப்பவர்கள், பங்கிலே வாழ்பவர்கள் மட்டுமல்ல, புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுகின்றவர்களிடமும் இவ்வாறான நல்ல பண்புகளை காணக் கூடியதாக இருந்தது. தங்களுடைய குடும்ப நிகழ்வுகளின் போது குருக்கள், துறவியர்களையும் தமது குடும்ப உறவாக நினைத்து செயற்படுபவர்கள். அருட் சகோதரிகளைத் தேடிச் சென்று உதவி செய்தல், அறிவுரை கேட்டல், மனக்குறைகளைக் கூறி ஆறுதல் பெறுதல், செப உதவி கேட்டு நிற்பவர்கள் என்பது எனது பணிக்காலத்தில் நான் கண்ட அனுபவம். இவ்வாறான நல்ல பண்புகளும், இறை பக்தியும் கொண்டுள்ள நீங்கள், உங்கள் பிள்ளைகளையும் அதே நற்பண்புகளிலும், இறை பக்தியிலும், விசுவாசத்திலும் வாழ, வளர வழிகாட்ட வேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றேன். ஈற்றில் புனித மரியாள் ஆலயத்தின் 75வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் இறை ஆசீரையும் கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிறிஸ்துவின் அன்பில் வாழும்

அருட்சகோதரி மேரி ஜெசி நீக்கிலாப்பிள்ளை

ஆசிச் செய்தி

நாவாந்துறைப் பங்கின் மரியன்னை ஆலய மக்கள் இறை குடும்பமாக, இறைவனோடு எழுபத்தைந்து வருட காலமாக மேற்கொள்ளும் பயணத்தில், தாம் பெற்றுக்கொண்ட இறை அனுபவங்களுக்கும், அருள் வரங்களுக்கும், அசீர்வாதங்களுக்கும் நன்றி கூறி விழா எடுக்கும் இந்த வேளையிலே, இம்மடலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் உவகை அடைகின்றேன்.

எம் தாய் மரியாள் ஊடாக தந்தையாம் இறைவன் செய்த ஏராளமான அற்புதங்கள், அதிசயங்களை எம் மக்கள் தம் வாழ்வில் உணர்ந்திருப்பர். கஸ்ட காலங்களில், யுத்த காலங்களில் தன் அண்டை தஞ்சம் அடைந்தோரை அரவணைத்து, அவர் அளித்த பாதுகாப்பு, பராமரிப்புக்காக இறைவனைப் போற்றுவோம், வாழ்த்துவோம், நன்றி கூறுவோம். இந்த நாவாந்துறைப் பங்கிலும் தனது பெயர் கொண்ட இந்த ஆலய மக்கள் மத்தியில் இறைவனின் வயலில் அறுவடை நோக்கிப் பணி செய்ய இறை அழைத்தல்களை அன்னை மரியா தந்திருக்கிறாள். பலர் துறவற சபைக் குருக்களாகவும், அருட்சகோதரர்களாகவும், அருட் சகோதரிகளாகவும் மிளிர்ந்து பணி செய்கின்றனர். இவர்களுள் எமது நல்லாயன் சபைக்கென, அருட்சகோதரி மேரி எமிலின் ஆசீர்வாதம், அருட்சகோதரி சகாயமேரி அருள்ராசா, அருட்சகோதரி மேரி பற்றிமா அந்தோனிப்பிள்ளை, அருட்சகோதரி மேரி நிக்கொலின் எஸ்தாக்கி, அருட்சகோதரி மேரி அமித்றனி அமிர்தநாதர், அருட்சகோதரி மேரி மேசியா பாலசிங்கம், அருட்சகோதரி கிறிஸ்ரா அந்தோனிதாஸ் என்னும் ஏழு பேரைத் தந்திருக்கின்றாள். எனவே எனதுள்ளம் நன்றியால் புகழ் பாடுகின்றது. மேலும் இறைவன் சித்தமே தனது பணியாக, மூச்சாக வாழ்ந்தமையால், எம் தாய் மரியாள் பரலோகத் தாயாக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளாள். இத்தாயே எம் தாயாகவும், மாதிரியாகவும் இருந்து தொடர்ந்து எம் மக்களுக்காக இறை பிரசன்னத்திலே பரிந்துரை செய்து, யாவர் தேவைகளையும் சந்தித்து, பாதுகாத்து தொழில் துறைகளைச் செழிப்புறச் செய்து, வாழ்வும் வழியும் உண்மையுமான இறை யேசுவுடன் நெருக்கமான உறவில் வளர்ந்து, வேற்றுமைகள் துறந்து, அன்பில் செறிந்து, தாமும் சிறப்புற்று, தம் பங்குக் குடும்பத்தையும் சிறப்புறச் செய்து, உண்மையான கிறிஸ்தவத்திற்கு சான்று பகன்று அற்புதமான ஓர் இறை குடும்பத்தைக் கட்டி எழுப்பித் தம் பயணத்தை மேலும் இறைவனுடனும், தாய் மரியாளுடனும் தொடர ஆசித்து, பிரார்த்தித்து, வாழ்த்தி நிற்கிறேன். எனது மனங்கனிந்த நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அருட்சகோதரி மேரி கமலா சிறீநாதன்

எமது ஆலய அருட்பணிச் சபைச் செயலரின் வாழ்த்துச் செய்தி

எம்முடைய பாதுகாவலியாம் புனித பரலோக அன்னையின் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு பவள விழாவைக் கொண்டாடும் எம் நாவாய் பரலோக அன்னை ஆலய மக்களை இறை ஆசீரோடு வாழ்த்தி நிற்கின்றேன். இவ்வேளையில் நாம் இவ் ஆலயத்தின் நினைவாக ஓர் அழகிய மலரை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எம்முடைய ஆலயமானது நிறுவப்பட்ட நாளிலிருந்து இன்று வரை ஆலய மற்றும் நாவாந்துறைப் பங்கு மக்களையும் கண்ணின் மணிபோல காத்து வழிநடத்தி வருகின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிப் பாடல்களை நவில்கின்றேன்.

உண்மையின் தேடலாக, உறவின் பாலமாக, உணர்வின் இராகமாக, மௌனத்தின் சாயலாக மாந்தர் மனதைக் கொள்ளையிடும் அளவிற்கு தனிச்சிறப்பும், பெருமையும் கொண்டவள் தான் எம் பரலோக அன்னை. அவளுடைய பாதுகாப்பினாலும், அரவணைப்பினாலும் நாவாய் மண்ணானது பல முத்துக்களை ஈன்றெடுத்துள்ளது. அந்த வகையிலே அன்னையின் பரிந்துரையினால் இயேசுவின் அழைப்புக்குரல் கேட்டு தம்மை குருக்களாகவும், துறவிகளாகவும் அர்ப்பணித்துள்ள எம் உறவுகளிற்காக பரலோக அன்னைக்கு நன்றி கூறுவதோடு தொடர்ந்து இறையழைத்தல்கள் பெருக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தொடர்ந்தும் எம்முடைய கிராமத்தில் பிள்ளைகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து நல்ல தலைமைத்துவப் பண்போடு எதிர்காலத்தில் பணியாற்ற ஆசித்து நிற்கின்றேன். நாம் அனைவரும் எமது ஆலய மக்களின் வளர்ச்சிக்காக ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக செயற்பட இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

செயலாளர்

திருமதி கிளமென்ற் சோபினி

ஓட்டுமடம் தூய செபஸ்ரியார் ஆலய மக்களின் வாழ்த்துச் செய்தி

நாவாந்துறை தூய மரியாள் ஆலயத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடி வெளியிடப்படும் மலருக்கு ஓட்டுமடம் தூய செபஸ்ரியார் ஆலய மக்கள் வாழ்த்துச் செய்தி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாவாந்துறை பங்கின் துணை ஆலயமாக இயங்கும் ஓட்டுமடம் தூய செபஸ்ரியார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த சிறிய ஆலயமாகும். ஆனால் இவ்வாலயம் இன்று சிறப்புடன் திகழ்வதற்கு வழிகோலியவர்கள் நாவாந்துறை மக்களே. முதல் வெள்ளி வழிபாடுகளை சிறப்பிப்பது மாத்திரமல்ல, திருவிழாக்காலங்களிலும் எம்மை உற்சாகப்படுத்தி எமது ஆலயத்தை சிறப்பான நிலைக்குக் கொண்டு வந்தவர்களும் அவர்களே. எம் ஆலய விழாக்களில் தேவையான பங்களிப்புக்களைச் செய்து விழா முழுவதையும் சிறப்பித்து எமக்கும், எம் ஆலயத்திற்கும் பெருமை தேடித்தந்தவர்களும் அவர்களே.

இவ்வாறு தம்முடைய ஆலயத்திற்கு மட்டுமல்லாது ஏனைய ஆலயங்களின் தேவைகளையும் உணர்ந்து கைகொடுக்கும் தூய மரியாள் ஆலய மக்கள் தமது ஆலயத்தின் ஏழுபத்தைந்தாவது ஆண்டு யூபிலியைக் கொண்டாடி மகிழும் வேளையில் ஓட்டுமடம் தூய செபஸ்ரியார் ஆலய மக்கள் நாம் எல்லோரும் ஒன்று கூடி வாழ்வதில் மகிழ்ச்சியடைக்கின்றோம்.

தூய பரலோக அன்னை உங்கள் எல்லோரையும் தன் அரவணைப்பிற்குள்ளே வைத்துக் காப்பாராக

தூய செபஸ்ரியார் ஆலய மக்கள்
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்

நாவாந்துறை தூய நீக்கிலார் ஆலய மக்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகரின் குடதிவையில் அமைந்துள்ள நாவாந்துறைக் கிராமத்தில் ஆபார்த்துக்கல் தேசத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே புனித நீக்கிலார் ஆலயமாகும். சுமார் 200 வருடகால பழமை வாய்ந்த ஆன்மீக செயற்பாட்டைக் கொண்ட இக் கோவிலே நாவாந்துறைப் பங்கு மக்களின் ஆசானக் கோவில் ஆகும். புனித நீக்கிலார் ஆலய திருவிழா காலாகாலமாக கிராம மக்களின் ஒவ்வொரு சமூகங்களாலும் கொண்டாடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. சில அசாதாரன சூழ்நிலைகள் நிகழ்ந்ததாகவும் எமது கிராம பெரியோர் சொல்லக்கேட்டதுண்டு.

இவ்வாறான சூழல்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக நாவாந்துறை கிராமத்தைச் சேர்ந்த வடக்குப் பகுதி மக்கள் தங்களுக்கென ஓர் ஆலயம் அமைக்க முற்பட்டனர். நாவாந்துறைப் பங்குத்தந்தையாக அருட்தந்தை வில்லியம் யேசுதாசன் (அ.ம.தி.) அடிகளாரின் முயற்சியின் பயனாக 1942ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி யாழ் ஆயர் மெதகு J.A. கியோமர் (அ.ம.தி) ஆண்டகை அவர்களால் தற்போதய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் பின்னர் நாவாந்துறைப் பங்கில் மறைபணியாற்றிய பிரான்ஸ் நாட்டின் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருமார்களாகிய அருட்பணி C. சர்வே அடிகளாரும், அருட்பணி Y. கறோவ் அடிகளாரும் பெரு முயற்சியுடன் ஆலயத்தின் முக்கிய பகுதிகளைக் கட்டி முடித்தனர். இவர்களின் பின்வந்த எமது பங்குத் தந்தையரும் அரும்பணியாற்றி கோவிலை புதுமெருகு பெறவைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் 2017ம் ஆண்டு புனித பரலோக மாதா ஆலயம் 75 வருடங்கள் கடந்து கொண்டாடுவது மிகமிகச் சிறப்பிடம் பெறுகிறது.

இம்மக்கள் நாடகக்கலைகறிலும், எமது கிறிஸ்தவ சமய நிகழ்வுகள் (பாஸ்) போன்றவற்றில் முன்னணிவகிக்கிறார்கள். தற்போதும் செயற்பட்டும் வருகின்றனர். இவற்றுடன் மாதர் நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்வுகள் சிறுவர் கல்விக் கூடங்கள் போன்றவற்றில் மிகத்திறம்பட இயங்கிவருகின்றனர். சரிநிகராக எமது நாவாய் மண்ணிலிருந்து வட மாகாணத்தில் உதை பந்தாட்டத்திற்கு சவாலாக விளங்கும் இரண்டு விளையாட்டுக் களகங்களான சென். நீக்கிலஸ், சென் மேரிஸ் என்பவையாகும். இவர்களது சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் யாழ் மண்ணில் மட்டுமல்ல, இலங்கை ரீதியிலும் சிறப்பிடம் பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது. இதைவிட ஏனைய விளையாட்டு நிகழ்வுகளிலும் சிறப்பிடம் பெற்று திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நாவாந்துறை விண்ணக அன்னை ஆலயம்

எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகி கொண்டாடும் இக்கோவில் மக்கள் ஆன்மீக பக்திச் செயற்பாடுகளில் சிறந்து விளங்குவதுடன், பங்கிலே ஆன்மீகப் பணியாற்றுகின்ற பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகளை அனுசரித்து, அரவணைத்து அவர்கட்கு துணைபுரிவது கண்கூடு. கோவில் நவநாட்கள், பக்திச் சபைகள் குறிப்பாக புனித மரியாள் சேனை, புனித விச்நன்டீபோல் தரும சபை போன்ற ஆன்மீக சபைகளில் தங்கள் செயற்பாடுகளை சிறப்பாகச் செய்துவருகின்றனர். இதுதவிர தமது பிள்ளைகளின் ஆன்மீகம், கல்வி போன்ற செயற்பாடுகளில் கூடிய அக்கறையுடன் செயற்பாடுகளில் கூடிய அக்கறையுடன் செயற்படுகின்றனர். இதன்பயனாக குருமார்களும், அருட்சகோதரிகளும் கூடிய அளவு இப்பங்கிலே அருட்பணிசெய்ய வந்துள்ளனர், வருகைதரவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலை கலாச்சாரத்திலும் யாழ். நகரிலேயே முன்னணிவகிக்கின்றனர். தமிழர் பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்துக்கு எடமது நாவாந்துறை பங்களிப்பை வளங்கியுள்ளது. பலஅ ண்ணாவிமார், சிறந்த நடிகர்கள் இவ்வாலய மக்கள் மத்தியில் மிளிர்ந்தார்கள். இவ்வாறு பல துறைகளிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழும் இக்கோவில்சார்ந்த மக்கள் தொழில் துறைகள் சிறந்து, நோய் நொடிகள் நீங்கி, ஆன்மீக வாழ்வில் நிலைக்க எம் புனித பரலோக அன்னை அருள் பாலிக்க இறைஞ்சிநிற்போம்.

புனித பரலோக அன்னை உங்களைத் தன் கருணையால் வழிநடத்துவாராக.

நாவாந்துறை,
புனித நீக்கிலார் ஆலயமக்கள்.

அஞ்சனந்தாழ்வு ஆரோக்கியமாதா ஆலய மக்களின் வாழ்த்து

ஆர்ப்பரிக்கும் கடலலைகள் முத்தாயிடும் நாவாந்துறைப் பதியினிலே எழுந்தருளி வந்தோர்க்கு எல்லாம் வரம் பல அளித்து நிற்கும் பரலோக அன்னையின் ஆலய 75வது ஆண்டு விழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் புனித ஆரோக்கிய அன்னையின் பிள்ளைகள் நாம் அகமகிழ்வடைகின்றோம்.

பங்குத்தந்தை வில்லியம் யேசுதாசன் (அ.ம.தி) மேற்கொண்ட முயற்சியால் 1942 ஆவணி 15ம் திகதி யாழ். ஆயர் கியோமர் (அ.ம.தி) ஆண்டகையால் அடிக்கல் நாட்டப்பட்டு உருவாக்கப்பட்டு வானளாவ உயர்ந்துள்ளது இவ்வழகிய ஆலயம் . ஆன்மீக வாழ்விலும், சாட்சியம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்விலும் மிளிர்ந்து நின்று பவள விழாவினைக் கொண்டாடி நிற்கும் விண்ணக அன்னையின் மக்களை எண்ணி பெருமையும் மகிழ்வும் அடைகின்றோம்.

அருளும், எழிலும், ஆசீரும் நிறைந்த அன்னையின் பிரசன்னத்தால் நாற்றிசையிலும் சூழ வாழும் மக்கள் ஒவ்வொருவரின் குறைகளை நீக்கி கோடி நன்மை தினம் புரிந்து நிற்கும் தாயவள் பாதாரம் தாழ்ப்பணிந்தவர்களாக அவரின் உன்னதமான பார்வையால் பங்கும், ஆலயத்தைச் சூழ வாழும் மக்களும் சிறப்புற்றிடவும் தாயின் வழியாக தந்தையிடம் வேண்டி நிற்கின்றோம்.

75வது ஆண்டினைக் கொண்டாடும் எம் சகோதரப் பங்கு வாழ் மக்களும் அவர்கள் ஆலயப் பணிகளும் சிறந்திடவும் உயர்ந்து நிற்கும் ஆலயம் போல் உன்னதமான விசுவாசத்தில் நிறைந்து நிற்கும் மக்களாகி ஆண்டுகள் பல கடந்து அகவைகள் பல நிறைந்து வரலாற்றில் நூற்றாண்டினையும் நோக்கி பயணித்திட மனதார வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்
புனித ஆரோக்கிய மாதா ஆலயம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இறை பணிக்கு திருநிலைப்படுத்தப்பட்டோரின் வாழ்க்கைக் குறிப்புகள்

அருட்தந்தை A.M. ஸ்ரீபன் செ.தா.

தந்தை பெயர்:- தொம்மை அந்தோனிப்பிள்ளை
தாய் பெயர்:- அந்தோனியாப்பிள்ளை
பிறந்த திகதி:- 1952.07.05
செபமாலைத் தாசர் சபையில் சேரல்: 1972.07.16
31.10.1973 :- இந்தியாவிற்கு உயர் துறவற பயிற்சிக்காகச் சென்றார்.
02.02.1974 :- நவத்துறவறம் ஆரம்பம் (Noviciate)
02.02.1975 :- முதல் அர்ப்பணம்
15.07.1975 :- பெங்களூர் தர்மாரம் கல்லூரியில் மெய்யியல் படிப்பு
15.07.1977 :- பெங்களூர் கார்மெலறம் கல்லூரியில் இறையியல் படிப்பு
04.10.1979 :- நித்திய அர்ப்பணம்
08.03.1980 :- பெங்களூர் புனித இராயப்பர் கல்லூரியில் தியாக்கோன் பட்டம்
01.05.1980 :- யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் குருத்துவத் திருநிலைப்பாடு

பணித்தளங்கள்:

23.06.1982 :- தோலகட்டி செபமாலை மாதா ஆச்சிமத்தின் அதிபர்
06.08.1986 :- இலங்கை செபமாலை மாதா துறவற மாவட்ட அதிபர்
05.07.1988 :- யாழ். அருள் ஆச்சிரம அதிபர்
25.03.1990 :- இந்தியாவில் திருச்சி மாவட்ட மணப்பாறை புஸ்பவனம் ஆச்சிரமத்தின் அதிபர் நவத்துறவு ஆசிரியர்
05.09.1991 :- சபைத்தலைவரின் ஆலோசகர், துறவறப் பயிற்சிப் பொறுப்பாளர், மாவட்ட இறைஅழைத்தல் ஊக்குனர்
1994 - யாழ் அருள் ஆச்சிரம அதிபர்
1995 - வவுனியாவில் புதிய ஆச்சிரமம் ஆரம்பித்தது
1995 - 2000 செபமாலை ஆச்சிரமம், வவுனியா
2000 - நீர்கொழும்பு கொச்சிக்கடையில் செபமாலை தாசர் சபையின் இலங்கை மாகாணத் தலைவர்
2000 - 2006 செபமாலை ராஜனி சேவன, கொச்சிக்கடை, சபையின் மாகாண அதிபர்
2006 - 2012 செபமாலை ஆச்சிரமம், பெங்களூர், இந்தியா. சபையின் உயர் தலைவர்
2012 - 2015 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்
2015 - 2016 செபமாலைதாசர் குருத்துவக் கல்லூரி, கண்டி
2017 - புனித சூசையப்பர் ஆச்சிரமம், மிருசுவில்
இலங்கை மாகாண முதல் ஆலோசகர்

அருட்தந்தை செபஸ்ரி நீக்கிலஸ் அமதி

பிறப்பு :- 19.04.1957
திருமுழுக்கு :- 30.04.1957
1973 :- அமதிகள், கொழும்புத்துறை புனிதவளனார் குருமடத்தில் சேருதல்
07.09.1982 :- நவசந்நியாசப் பிரவேசம், பண்டாரவளை திரு இருதயநாதர் குருமடம்
07.09.1982 :- முதல் அர்ப்பணம்
01.11.1982 :- நித்திய அர்ப்பணம்
03.12.1985 :- தியாக்கோன் பட்டம் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்
19.06.1986 :- யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் குருத்துவ திருநிலைப்படுத்தல்
22.06.1986 :- நாவாந்துறை புனித பரலோகமாதா ஆலயத்தில் முதல் திருப்பலி

அருட்தந்தை M. ஜோன் பொஸ்கோ செ. தா.

தந்தை பெயர் :- இன்னாசி மனுவல்தாசன்
தாய் பெயர் :- அலெக்சாண்டர் சிசிலியா
பிறந்த திகதி :- 1964.11.14
சபையில் முதல் அர்ப்பணம் :- 1987.10.07
சபையில் நித்திய அர்ப்பணம் :- 1993.10.12
குருப்பட்டம் :- 1996.05.08
பணித்தளங்கள்:- 1996-1998 செபமாலை ஆச்சிரமம், வவுனியா
1998 - 2009 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.
2009 - 2012 செபமாலை ஆச்சிரமம், வவுனியா
2012 - 2015 தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி, யாழ்ப்பாணம்,
2015 - இன்றுவரை செபமாலை ஆச்சிரமம், வவுனியா

அருட்தந்தை M. லியோணியஸ் செ.தா.

தந்தை பெயர் :- செபஸ்ரியாம்பிள்ளை மரியதாசன்
தாய் பெயர் :- பத்திநாதர் மெற்றலின்
பிறந்த திகதி :- 1976.06.02
சபையில் முதல் அர்ப்பணம் :- 1997.10.07
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2002.09.21
குருப்பட்டம் :- 2006.10.05

பணித்தளங்கள்: 2006 - 2007 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்
2007 - 2009 செபமாலை ஆச்சிரமம், வவுனியா
2009 - 2012 செபமாலை ராஜா சேவன, கொச்சிக்கடை
2012 - 2015 செபமாலை ஆச்சிரமம், வவுனியா.
2015 - இன்றுவரை செபமாலைத்தாசர் குருத்துவக்கல்லூரி, கண்டி.

அருட்தந்தை மைக்கல் பிரபு SDS



பிறப்பு : 11.12.1976
தந்தை பெயர்: செபஸ்ரியாம்பிள்ளை மைக்கல் ராஜா
தாய் பெயர்: மைக்கல்ராஜா மாசில்லா

கல்வித்தகமை:
1981-1991 ஆரம்பக்கல்வி நாவாந்துறை நோ.க. வித்தியாலயம்
1991-1995 இடைநிலைக்கல்வி புனித பத்திரிசியார் கல்லூரி
1996-1999 உயர் கல்வி IAB & CIMA (London)- IAS at Colombo

பல்கலைக்கழக பட்டப்படிப்பு

2002-2005- BA in Philosophy & Psychology at Lasallette University, Philippines.
2006-2009- BTh (Rome) At Divine Word School of Theology, Philippines

துறவறசபை :- இறை மீட்பர் சபை (Salvatorian Fathers)
சபையில் இணைவு:- 06.12.2000
நவதுறவு பயிற்சி:- 19.03.2001
முதல் அர்ப்பணம்: 19.03.2002
நித்திய அர்ப்பணம் 01.05.2009
திருத்தொண்டர்: 02.05.2009
குருப்பட்டம்: 31.07.2010

சிலாபம் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் பணியாற்றலும், குருமட மாணவர் உருவாக்குனர். 2014முதல் இன்றுவரை அகில இலங்கை இறைமீட்பர் சபை குருக்கள், அருட்சகோதரர்களின் இணைப்பாளர்.

அருட்தந்தை C. கொட்வின் கியுபேட் செ.தா.

தந்தை பெயர் :- ஆரோக்கியம் யோசவ் கிறிஸ்தோப்பர்
தாய் பெயர் :- செபஸ்ரி புவனராணி
பிறந்த திகதி :- 1975.04.25
சபையில் முதல் அர்ப்பணம் :- 2001.02.02
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2009.09.16
குருப்பட்டம் :- 2010.12.30

பணித்தளங்கள்

2010 - 2012 செபமாலைத் தாசர் குருத்துவக் கல்லூரி, கண்டி
2012 - 2013 புனித சூசையப்பர் ஆச்சிரமம், மிருசுவில்.
2013 - 2014 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.
2014 - இன்றுவரை செபமாலை ஆச்சிரமம், வவுனியா

அருட்தந்தை P. டன்சன் செ.தா.

தந்தை பெயர் :- சந்தியோகு ஜோண் பீற்றர்
தாய் பெயர் :- கிறகெரி ஜசிந்தா
பிறந்த திகதி :- 1976.09.30
சபையில் முதல் அர்ப்பணம் :- 2000.09.25
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2006.09.16
குருப்பட்டம் :- 2010.12.30

பணித்தளங்கள்:

2010 - 2011 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்
2011 - 2012 தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி.
2012 - 2014 செபமாலை ஆச்சிரமம், வவுனியா.
2014 - இன்றுவரை செபமாலைதாசர் ஆச்சிரமம், கனடா

அருட்தந்தை P. செபஸ்ரியன் வீனஸ் செ.தா.

தந்தை பெயர் :- கிறகெரி பாக்கியநாதன்
தாய் பெயர் :-அந்தோனிப்பிள்ளை மேரி மெரில்டா
பிறந்த திகதி :- 1979.09.18
சபையில் முதல் அர்ப்பணம் :- 2003.07.16
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2007.09.15
குருப்பட்டம் :- 2012.01.12

பணித்தளங்கள்:

2012-2013 தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி
2013 - 2014 செபமாலை ஆச்சிரமம், வவுனியா.
2014 - 2015 செபமாலை ரஜனி சேவன, கொச்சிக்கடை
2015 - 2016 செபமாலை தாசர் குருத்துவக் கல்லூரி, கண்டி
2016 - இன்றுவரை செபமாலை தாசர் ஆச்சிரமம், கனடா.

அருட்தந்தை S. ஜெபதாசன் செ.தா.



தந்தை பெயர் :- அலெக்சாண்டர் செபமாலை
தாய் பெயர் :- சந்தியா மேரி கற்பலங்காரி
பிறந்த திகதி :- 1980.01.21
சபையில் முதல் அர்ப்பணம் :- 2003.07.16
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2007.09.15
குருப்பட்டம் :- 2012.01.12

பணித்தளங்கள்

2012 - 2013 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்
2013 - 2014 செபமாலை குருத்துவக் கல்லூரி, கண்டி
2014 - 2015 செபமாலை ஆச்சிரமம், வவுனியா.
2015 - 2016 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.
2016 - இன்றுவரை தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி

அருட்தந்தை M. மரிசுதன் செ.தா.



தந்தை பெயர் :- அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்
தாய் பெயர் :- இறப்பியல் மார்க்கம்மா
பிறந்த திகதி :- 1980.09.03
சபையில் முதல் அர்ப்பணம் :- 2003.07.16
சபையில் நித்திய அர்ப்பணம் :- 2007.09.15
குருப்பட்டம் :- 2012.01.12

பணித்தளங்கள்

2012 - 2013 அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்
2013 - 2014 செபமாலை குருத்துவக் கல்லூரி, கண்டி
2014 - 2015 தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி.
2015 - 2016 செபமாலைதாசர் ஆச்சிரமம், கனடா
2016 - இன்றுவரை செபமாலைதாசர் குருத்துவக்கல்லூரி, கண்டி

இறைபணிக்கு தம்மை அர்ப்பணம் செய்தோரின் வாழ்க்கைக் குறிப்புகள்

அருட்சகோதரர் பீலிக்ஸ்

சந்நியாச முதல் வார்த்தைப்பாடு : 1912.11.14
சந்நியாச நித்திய வார்தைப்பாடு : 1918.11.19
தந்தை : திரு. சவரிமுத்து மடுத்தீஸ்
தாய் : திருமதி. மடுத்தீஸ் யக்கமுத்து

இவர் 07.10.1882ல் பிறந்தார். மாத்தளை மரியாயின் பிரான்சீஸ்கன் சபைத் துறவியாக 1905ல் இணைந்துகொண்டார். மகோனாவில் முதல் சந்நியாச வார்த்தைப்பாட்டை 14.11.1912ல் பெற்றுக்கொண்டார். சந்நியாச நித்திய வார்த்தைப்பாடு 19.11.1918ல் பெற்றுக்கொண்டார்.

மகோனா சென் வின்சன் விடுதியில் மெழுகுதிரி உற்பத்தித் தொழிற்சாலையிலும், நெசவுத் தொழிற்சாலையிலும் பொறுப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். இவரது 50வது வருட பொன்விழாவை எமது ஆலய மக்கள் 1962ம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

அமைதியான வாழ்க்கையும், கடின உழைப்பும் கொண்ட இவர் சேவையாற்றிய இடங்களிலெல்லாம் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றார். இவர் 20.02.1975ம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

அருட்சகோதரர் யுவாம்

துறவற சபையில் சேர்வு : 1910.01.27
நவசந்நியாச சேர்வு : 1911.09.14
சந்நியாச முதல் வார்த்தைப்பாடு : 1912.11.14
சந்நியாச நித்திய வார்த்தைப்பாடு : 1918.11.19
தந்தை : திரு. சூசை தொம்மை
தாய் : திருமதி. தொம்மை வரோணிக்கா

இவர் 12.12.1887இல் பிறந்தார். மாத்தளை மரியாயின் பிரான்சீஸ்கன் சபையின் துறவியாக 27.10.1910இல் இணைந்து கொண்டார். 14.09.1922ல் நவசந்நியாசத்திலும் 14.11.1912 சந்நியாச முதல் வார்த்தைப்பாடும் 19.11.1918ல் சந்நியாக நித்திய வார்த்தைப்பாடும் முடித்து 22.08.1961ல் முழுச்சபையின் அதி சிரேஷ்டராசத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் தமது சந்நியாச 50 வருட பொன்விழா 15.09.1962ல் சிறப்பாகக் கொண்டாடினார்.

இதன்பின் மகோனா, சிலாபம் ஆகிய பகுதிகளில் உதவி ஆசிரியராகவும் சிலாபம் மேற்றிராசனத்தின் சென் பீற்றர் அச்சக அதிபராகவும் பிள்ளைகள் பராமரிப்பாளராகவும் தலைவில்லு புனித சந்தான மாதா ஆலய வருடாந்த திருவிழா பரிபாலன சேவையில் பங்காற்றி 14.03.1984ல் இறைபதமடைந்தார்.

அருட்சகோதரர் அலோசியஸ்

முதல் வார்த்தைப்பாடு : 1915.09.15
நித்திய வார்த்தைப்பாடு : 1921.09.15
தந்தை : திரு. இயசிந்து வலத்திசால்
தாய் : திருமதி. வலத்திசால் ஆச்சிக்குட்டி

இவர் 12.05.1889ல் பிறந்தார். மாத்தளை மரியாயின் பிரான்சீஸ்கன் சகோதரர் சபைத் துறவியாக 25.07.1912ல் இணைந்துகொண்டார். முதல் சந்நியாச வார்த்தைப்பாட்டை 15.09.1915ல் பெற்றுக்கொண்டார். நித்திய வார்த்தைப்பாட்டை 15.09.1921ல் பெற்றுக்கொண்டார்.

மகோன்னாவின் சென் வின்சென் விடுதியிலும், மாத்தளை மெழுகுவர்த்தித் தொழிற்சாலையிலும் கடமையாற்றினார். இவர் சிறுவர்கள் மட்டில் அன்பான பராமரிப்பும் ஆலய வழிபாடுகளில் முன்னின்று உழைத்த காரணத்தால் கடமையாற்றிய இடங்களில் நன்மதிப்பைப் பெற்றார். 17.05.1959ல் இறைவனடி சேர்ந்தார்.

அருட்சகோதரர் மார்க் அமிர்தநாதர்

முதல் வார்த்தைப்பாடு : 1930.02.18
இறுதி அர்ப்பணம் : 1936.02.18
தந்தை : திரு. அருள் சந்தியோ
தாய் : திருமதி. சந்தியோ வைத்தியானர்

இவர் 03.07.1908ம் ஆண்டு பிறந்தார். நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். தோலகட்டி செபமாலை தாசர் சபையில் இணைந்து 18.02.1930ல் சந்நியாச வாழ்வின் முதல் வார்த்தைப் பாட்டைப் பெற்றார். 18.02.1936ல் சந்நியாச வாழ்வின் நித்திய அர்ப்பணத்தைப் பெற்றார். 1980ம் ஆண்டு தமது 50ம் ஆண்டு பொன்விழாவை தோலகட்டி ஆச்சிரமத்தில் கொண்டாடினார். இதைத் தொடர்ந்து எமது ஆலயத்தில் ஆலய மக்களால் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவர் தோலகட்டி ஆச்சிரமத்தில் நீண்டகாலம் பணியாற்றி வந்தார். இவர் பணியாற்றிய காலங்களில் செபமாலை கட்டுதல், நெல்லிரசம், திராட்சை ரசம் தயாரிப்பு வேலைகளிலும் முன்னின்று பணியாற்றியவர். குறிப்பாக எம் ஆலய வளர்ச்சி, மக்களின் முன்னேற்றம் பற்றிப் பேசிக்கொள்வதுடன் துறவற வாழ்வில் பெரும் பகுதியை நற்கருணைப் பேழையின் முன் செலவிட்டார். கடின ஒறுத்தல் உபவாசங்களையும், மௌன விரதங்களையும் கடைப்பிடித்து இறைவனுடன் தம்மை இணைத்துக்கொண்டார். 01.07.1988ல் மாதத்தின் முதல் வெள்ளியன்று இறைபதமடைந்தார். தோலகட்டி மடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

அருட்சகோதரி ஆ. எமிலின் RGS

துறவற நுழைவு : 09.05.1979
முதல் அர்ப்பணம் : 08.02.1983
நித்திய அர்ப்பணம் : 15.01.1989
தந்தை : திரு. மைக்கல் ஆசீர்வாதம்
தாய் : திருமதி. ஆசீர்வாதம் மரியம்மா

அருட்சகோதரி அவர்கள் 08.06.1960ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை 1965 – 1975 வரை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்தில் முடித்த பின் 09.05.1979ல் நல்லாயன் கன்னியர் சபையில் சேர்ந்தார். முதல் அர்ப்பணத்தை 08.02.1983ல் நாயக்ககந்தை தலைமை மடத்தில் பெற்று தனது மேரி கபிரியேல் என்னும் பதிவுப் பெயரை விடுத்து, சகோதரி மேரி எமிலின் என்னும் துறவறப் பெயரைப் பெற்றார்.

15.01.1989ல் தனது நித்திய அர்ப்பணத்தை அதே மடத்தில் பெற்றுக் கொண்டார். இவர் முகத்துவாரம், வாழைச்சேனை, கல்கசேனை, உட்டியாந் தோட்டை நாயக்ககந்தை ஆகிய இடங்களில் தொண்டாற்றினார். தற்போது நீர்கொழும்பு புனித அக்னஸ் கன்னியர் மடத்தில் சேவையாற்றி வருகின்றார். இவர் நாவாந்துறைப் பங்கின் புனித மரியாள் ஆலயத்தின் முதல் அருட்சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரி அ. சகாயமரி RGS

துறவற நுழைவு : 03.11.1980
முதல் அர்ப்பணம் : 10.12.1983
நித்திய அர்ப்பணம் : 15.01.1989
தந்தை : திரு. தியோகு அருள்ராசா
தாய் : திருமதி. அருள்ராசா திரேசம்மா

அருட்சகோதரி சகாய மரியா 20.03.1958ல் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க. தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கற்றார். 1975ம் ஆண்டு அச்சுவேலி கார்மேல் கன்னியர் மடத்தில் கற்றார். 1976ம் ஆண்டு 3 மாத மறை ஆசிரியர் பயிற்சியை மறைக்கல்வி நிலையத்தில் முடித்து சிலகாலம் மறை ஆசிரியராகக் கடமையாற்றினார். 03.11.1980ல் நல்லாயன் கன்னியர் சபையில் சேர்ந்தார். முதல் அர்ப்பணத்தை 12.10.1983ல் நாயக்ககந்தை தலைமை மடத்தில் பெற்று தனது பதிவுப் பெயராகிய சகாயமரியா என்னும் பெயரையே துறவறப் பெயராகவும் பூண்டார்.

இவர் நித்திய அர்ப்பணத்தை 15.01.1989ல் அதே மடத்தில் பெற்றுக்கொண்டடார். இவர் பண்டாரவளை, நீர்கொழும்பு, முகத்துவாரம், கம்பளை ஆகிய இடங்களில் சேவையாற்றியுள்ளார். இப்பொழுது நாவலப்பிட்டிய மடத்தில் கடமையாற்றுகின்றார்.

அருட்சகோதரி அ. பற்றிமா RGS

முதல் அர்ப்பணம்: 07.09.1985
நித்திய அர்ப்பணம்: 02.02.1991
தந்தை: திரு. தொம்மை அந்தோனிப்பிள்ளை
தாய்: திருமதி. அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை

அருட்சகோதரி அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும் உயர் கல்வியை பாஷையூர் புனித அந்தோனியார் வித்தியாலயத்திலும் கற்றார். இவர் நல்லாயன் கன்னியர் சபையில் சேர்ந்து முதல் அர்ப்பணத்தை 07.09.1985ல் நாயக்ககந்தை தலைமை மடத்தில் பெற்று தனது மேரிறாணி (றஞ்சினி) என்னும் பதிவுப் பெயரை விடுத்து சகோதரி பற்றிமா என்னும் துறவறப் பெயரைப் பெற்றார்.

இதன்பின் நீர்கொழும்பு குனுப்பிட்டியிலும், மட்டக்களப்பு மாங்கேணியிலும், கண்டி, நாவலப்பிட்டி, கம்பளையிலும் தற்போது தம்மிற்ர நீர்கொழும்பிலும் சேவையாற்றி வருகிறார்.

அருட்சகோதரி சீ. மேரி மலர் DP

துறவற நுழைவு : 28.05.1982
முதல் அர்ப்பணம் : 24.11.1986
நித்திய அர்ப்பணம் : 30.04.1992
தந்தை : திரு. பத்திநாதர் சிறில்
தாய் : திருமதி. சிறில் கத்தறின்

அருட்சகோதரி அவர்கள் 29.01.1957ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தமிழ் மகா வித்தியாலயத்திலும் பெற்றார். 23.05.1982ல் தேவ பராமரிப்புக் கன்னியர் சபையில் இணைந்துகொண்டு 24.11.1986ல் முதல் அர்ப்பணத்தை தேவத்தை மடத்தில் பெற்று தனது மேரிமலர் என்னும் பதிவுப் பெயரையே துறவறப் பெயராகவும் பூண்டார்.

தமது நித்திய அர்ப்பணத்தை 30.04.1992ல் தேவத்தை தலைமை மடத்தில் பெற்றுக்கொண்டார். இவர் நுவரெலியா, தேவத்தை, கோட்டை ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளார். தற்போது றாகம தேவத்தை தேவ பராமரிப்பு சபை மடத்தில் பணிபுரிகின்றார்.

அருட்சகோதரி எ. மேரி நிக்கொலின் RGS

துறவற ஆரம்பம் : 06.12.1983
முதல் அர்ப்பணம் : 17.12.1986
நித்திய அர்ப்பணம் : 10.12.1991
தந்தை : அமரர் கலைக்கவி நீ. எஸ்தாக்கி (பாடசாலை அதிபர்)
தாய் : திருமதி. எஸ்தாக்கி மொணிக்கம்மமா

அருட்சகோதரி அவர்கள் 12.01.1963ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை 1968-1979 வரை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும் 1980-1982 வரை திருக்குடும்ப தமிழ் கன்னியர் மடத்திலும் உயர் கல்வி கற்று 1982.12.06ம் திகதி நல்லாயன் கன்னியர் சபையில் சேர்ந்து முதல் அர்ப்பணத்தை 17.12.1986ல் நாயக்ககந்தையில் பெற்று பின்பு 10.12.1991ல் நித்திய அர்ப்பணத்தை அதே மடத்தில் பெற்றுக்கொண்டார். இவர் வத்தளை வெலிகன, கொச்சிக்கடை கொழும்பு, பலாங்கொடை கம்பளை, முகத்துவாரம், நாவலப்பிட்டியிலும் தற்போது பூவரசங்குளத்திலும் இறைபணியாற்றி வருகின்றார்.

அருட்சகோதரி அ. அமித்றனி RGS

துறவற நுழைவு : 14.12.1986
முதல் அர்ப்பணம் : 23.07.1990
தந்தை : திரு. சூசைப்பிள்ளை அமிர்தநாதர்
தாய் : திருமதி. அமிர்தநாதர் மேரி றோஸ்

அருட்சகோதரி அவர்கள் 06.07.1966ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தமிழ் மகா வித்தியாலயத்திலும் பெற்று 14.12.1986ல் நல்லாயன் கன்னியர் சபையில் சேர்ந்து முதல் அர்ப்பணத்தை 23.07.1990ல் நாயக்க கந்தையில் பெற்றுக்கொண்டார். இவர் தமது மேரி சுகிர்தா என்னும் பதிவுப் பெயரை விடுத்து சகோதரி அமித்றனி என்னும் துறவறப் பெயரைப் பூண்டார். தற்போது கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடத்தில் ஆசிரியராகப் பணிபரிகின்றார்.

அருட்சகோதரி ஆ. ராஜேஸ் SDS

துறவற ஆரம்பம் : 08.10.1986
முதல் அர்ப்பணம் : 15.08.1990
நித்திய அர்ப்பணம் : 14.08.1996
தந்தை : திரு. சந்தியோ ஆரோக்கியநாதர்
தாய் : திருமதி. ஆரோக்கியநாதர் மொனிக்கம்மா

அருட்சகோதரி அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலையிலும் 6ம் ஆண்டிலிருந்து 10ம் ஆண்டு வரை இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் உயர் கல்வியை யாழ். திருக்குடும்பக் கன்னியர் ஆங்கிலப் பாடசாலையிலும் கற்றார்.

இவர் 08.10.1986ல் இரட்சகரின் கன்னியர் சபையில் சேர்த்து முதல் அர்ப்பணத்தை 15.08.1990ல் பெற்று தமது மேரி ராஜேஸ்வரி என்னும் பதிவுப் பெயரை விடுத்து சகோதரி ராஜேஸ் என்னும் துறவறப் பெயரைப் பூண்டார்.

இவர் தமது முதல் வருடத்தைச் சமூக ஆய்வுப் பயிற்சியிலும் அடுத்த வருடத்தை தாதிப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெற்று பரீட்சையிலும் சித்தியடைந்தார். கல்வி தொலைக்காட்சிச் சேவையினால் நடாத்தப்படும் ஆங்கிலப் பாடநெறியிலும் மாணவியாகப் பயின்று வருகின்றார். தற்போது குருநாகலில் பமுனவெல என்ற இடத்திலுள்ள தலைமை மடத்தில் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

அருட்சகோதரி அ. மேசியா RGS

துறவற நுழைவு : 1987.07.31
உருவாக்கம்: 1988.07.31
முதல் அர்ப்பணம் : 1991.08.10
நித்திய அர்ப்பணம்: 1996.12.14
தந்தை : திரு. செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
தாய் : திருமதி. அந்தோனிப்பிள்ளை லூர்த்தம்மா

அருட்சகோதரி அவர்கள் 13.12.1965ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ். திருக்குடும்பக் கன்னியர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் பெற்று நல்லாயன் கன்னியர் சபையில் 20.01.1988ல் இணைந்து கொண்டார். இவர் தமது முதல் அர்ப்பணத்தை 10.08.1991ல் நாயக்ககந்தையில் பெற்று தனது மெசியம்மா என்னும் பதிவுப் பெயரை விடுத்து அருட்சகோதரி மேசியா என்னும் துறவறப் பெயரைப் பெற்றார். பட்ட மேற்கல்வி டிப்ளோமா 2010 (தேசிய கல்வி நிறுவனம் - மகரகம)

இளங்கலைமானிப் பட்டம் 2005 பேராதனைப் பல்கலைக்கழகம். அர்ப்பண வெள்ளிவிழாவை 2016.07.30ல் நாவாந்துயைில் கொண்டாடினார்.

29.08.1991 – 15.01.1992 வரை கண்டியிலுள்ள வயோதிபர் மடத்தில் பணியாற்றினார். தற்பொழுது கொழும்பிலுள்ள நல்லாயன் கன்னியர் மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

அருட்சகோதரி கமலினி பற்றிக் (Minim Srs.)

தந்தை பெயர் :-சில்வேஸ்ரர் பற்றிக்
தாய் பெயர் :-திரேசம்மா பற்றிக்
பிறந்த திகதி :-1968.06.16
முதல் அர்ப்பணம்:-1997.04.06
நித்திய அர்ப்பணம்:-2005.12.15 (நாவாந்துறை புனித மரியாள் ஆலயம்)
ஆரம்பக் கல்வி:-யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி :-யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
உயர் கல்வி :-யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்
உருவாக்கம்பெற்ற இடம்:- உரோமாபுரி, இத்தாலி
காலம் :-1992
பணி :-ஆதரவற்ற சிறுவர்களை பராமரித்தல், யா-எல, மன்னார்.
தற்போது:-உரோமாபுரி இறையியற் கல்லூரி, இத்தாலி

அருட்சகோதரி செபஸ்ரின் அலெக்சாண்டர் – SDS

தந்தை பெயர் :- சிமியோன் அலெக்சாண்டர்
தாய் பெயர் :- செபமாலையம்மா
பிறந்த திகதி :-
முதல் அர்ப்பணம் :- 1998.08.15
நித்திய அர்ப்பணம் :- 2004.08.15
ஆரம்பக் கல்வி:- யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
உயர்தரம் :- திருக்குடும்பக் கன்னியர் மடம் குருநாகல் கன்னியர் மடம்
பணித்தளங்கள் :- 1998 – 2004 இலங்கை
2004 – 2014 பாக்கிஸ்தான்

அருட்சகோதரி மரிய கௌசலா மனுவேல்பிள்ளை RGS



பிறப்பு: 09.05.1979
தந்தை பெயர்: மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை
தாய் பெயர்: றெஜினா மனுவேற்பிள்ளை
கல்வி தகமை
தரம் 1-7 றோ. க. வித்தியாலயம், நாவாந்துறை
தரம் 8-11 திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.
க.பொ.த. உயர்தரம் பிரான்சிஸ்கு சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார்.
பட்டப்படிப்பு: சமூக விஞ்ஞானத்தில் இளங்கலைமானிப்பட்டம்
முதல் அர்ப்பணம்: 11.12.2004
நித்திய அர்ப்பணம்: 10.12.2010
பணித்தளம்
பாலாங்கொட, இணுவில், நாக்ககந்தை, எட்டியாந்தோட்ட, வாழைச்சேனை, கணேசபுரம் (வவுனியா) மல்லாவி, மாங்குளம், எட்டியாந்தோட்ட.
தற்போது தூய பிறிச்ஜிற் மடம், நோயளர் பராமரிப்பு

அருட்சகோ மேரி றெஜின் யோசவ் - H.F.

முதல் அர்ப்பணம்: 31.05.2000
நித்திய அர்ப்பணம் :
துறவற சபை : திருக்குடும்ப சபை
தற்போது உகண்டா, ஆபிரிக்காவில் பணியாற்றுகின்றார்.

அருட்சகோதரி வசந்தினி டானியஸ் SDS

தந்தையின் பெயர்: ம. டானியஸ்
தாயின் பெயர்: அக்கினசம்மா
பிறந்த திகதி: 1972. 12. 27
சபையின் பெயர்: இரட்சகர் சபை
சபையின் இணைந்தது: 1996.01.15
முதல் அர்ப்பணம்: 2000.12.08
நித்திய அர்ப்பணம்: 2008.08.15
கல்வித்தகமை: கொழும்பு அக்குயினாஸ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் இளங்கலைமானிப்பட்டம்.

பணிபுரிந்த இடங்கள்: கட்டுகஸ்தோட்டை, குருநாகல், மாகந்துவ, வவுனியா, வேப்பங்குளம் போன்ற இடங்களில் சமூகப்பணியும், சமய ஆசிரியரும். கொழும்பு பம்பலபிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தில் 2 வருடங்கள் ஆசிரியப்பணி. 2008ம் ஆண்டிலிருந்து கொழும்பு கொட்டாஞ் சேனையிலுள்ள புனித பெனடிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும், புதுக்கடைப்பங்கின் ஆங்கிலம் தமிழ் மொழிமூல மறைப்பாடசாலைக்கு பொறுப்பாசிரியராகவும் பணிபுரிகின்றார்.

அருட்சகோதரி காமலின் சிமியோன் - H.F.

தந்தை பெயர் :-தேவசகாயம் சிமியோன்
தாய் பெயர் :-அமைக்கலமேரி சிமியோன்
பிறந்த திகதி :-1982.11.24
முதல் அர்ப்பணம் :-2007.09.08
நித்திய அர்ப்பணம் :-2013.06.22
கல்விகற்ற பாடசாலை :-மன். புனித சவேரியார் பெண்கள் மகாவித்தியாலயம்
உருவாக்கம்பெற்ற இடம்:-தியத்தலதை வ
பணி :-ஆசிரியர்
பணிபுரியும் இடம்:-கிளிநொச்சி புனித திரேசாள் பெண்கள் கல்லூரி

அருட்சகோதரி றோஜினி காணிக்கைதாஸ் SDS

துறவறசபை: இறை மீட்பர் சபை
துறவற வாழ்வின் ஆரம்பம்: 05.07.2004
முதல் அர்ப்பணம்: 08.12.2008
இறுதி அர்ப்பணம்: 08.12.2015
ஆற்றிய சேவைகள்: ஆசிரியப்பணி. வயோதிபரை பராமரித்தல், பங்குப்பணி, தேவ அழைத்தலுக்காக ஊக்குவித்தல், தற்போது கண்டியிலுள்ள நவசன்னியாச மடத்தில் உதவியாளராக பணியாற்றுகின்றார்.

அருட்சகோதரி மேரி றோசி சிலுவைதாஸ் - HF

தந்தை பெயர் :- மலக்கியாஸ் சிலுவைதாஸ்
தாய் பெயர் :- திரேசம்மா சிலுவைதாஸ்
பிறந்த திகதி :- 1984.07.13
முதல் அர்ப்பணம் :- 2009.12.09
நித்திய அர்ப்பணம் :- 2015.12.02
கல்விகற்ற பாடசாலை :-யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
உருவாக்கம்பெற்ற இடம்:- தியத்தலதவை
பணி:- ஆசிரியர்
பணிபுரியும் இடம்:-புதுக்குடியிருப்பு/மந்துவில் அரசரட்ணம்வித்தியாலயம்
தற்காலிக இடம்: திருக்குடும்ப கன்னியர் மடம், முல்லைத்தீவு

அருட்சகோதரி மேரி யுனிஸ்ரா BECHL

பிறப்பு 04.10.1990
துறவற நுழைவு 10.06.2009
நவதுறவு 08.12.2010
முதல் அர்ப்பணம் 08.12.2012
தற்போது சென்னை, குன்றத்தூர் அன்னை வேளாங்கன்னி வைத்தியசாலையில் மருந்தாளராக பணிபுரிகின்றார்.

இறைபணிக்கு உருவாக்கம் பெறுவோர்

அருட்சகோதரி கிறிஸ்ரா அந்தோனிதாஸ் - RGS

தந்தை பெயர் :- அருளானந்தம் அந்தோனிதாஸ்
தாய் பெயர் :- மேரி ராணி அந்தோனிதாஸ்
பிறந்த திகதி :- 1992.02.13
சபையில் இணைவு :- 2012.10.09
முதல் அர்ப்பணம் :- 2017.03.11
ஆரம்பக்கல்வி :- கிளி/நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
இடைநிலைக் கல்வி :- மன்னார்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலை
உயர்தரம்:- யாழ்/புனித சாள்ஸ் ம.வி.
உருவாக்கப்பட்ட இடம்:- முகத்துவாரம்
தற்போதய இடம் :- வலிகென

அருட்சகோதரர் J. அமிர்தறாஜ் அ.ம.தி



தந்தை பெயர் :- அமிர்தநாதர் யேசுதாசன்
தாய் பெயர் :- அன்ரனியம்மா
பிறந்த திகதி :- 1988.10.20
முதலாவது வார்த்தைப்பாடு :- 2014.08.22
ஆரம்பக்கல்வி :- மரியாள் பாடசாலை (OLR) யாழ்ப்பாணம் - 1993- 1994, மன்/மடு/அ.த.க. பாடசாலை 1995 - 1996
இடைநிலைக் கல்வி:- மன்/விடத்தல்தீவு அ.த.க. பாடசாலை 1997 – 1998
மன்/இலுப்பைகடவை அ.த.க. பாடசாலை 1999 - 2002
உயர்தரம் :- யாழ்/நாவாந்துறை நோ.க.வித்தியாலயம் 2003 – 2004
யாழ்/புனித சாள்ஸ் ம.வி. 2006- 2008
மெய்யியல் கல்வி :- 2015 - 2016
தற்போது முதலாம் வருடம் இறையியல் கற்றுக்கொண்டிருக்கிறார்.

அருட்சகோதரர் மோகன்ராஜ் எட்வேட்

பிறப்பு: 16.01.1976
மறைமாவட்டம்: Portsmouth, England
குருத்துவ உருவாக்கத்தில் இணைவு: 11.09.2011
ஆரம்ப குருமடம்: ஸ்பெயின் 2012. 09 - 2013. 06
பெரிய குருமடம்: Oscott College in Birmingham, England 2013 – 09
இறையியலில் இளங்கலை மானிப்பட்டம் 2016 University of Birmingham
குருத்துவ நிலைக்கான வேட்பாளர் 04-06-2017

அருட்சகோதரர் P. காணிக்கைதாசன் - செ.தா



தந்தை பெயர் :- அருளப்பு பத்திராசா
தாய் பெயர் :- செபமாலை அருள்சீலி
பிறந்த திகதி :- 1987.07.29
சபையில் முதல் அர்ப்பணம் :- 2013.04.06
ஆரம்பக்கல்வி :- யாழ் /நாவாந்துறை நோ.க.வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி :-யாழ் /நாவாந்துறை நோ.க.வித்தியாலயம்
உயர்தரம்:- யாழ் /புனித சாள்ஸ் ம.வி
உருவாக்கம்:- செபமாலைத்தாசர் துறவறசபையில் இணைவு 2004
தற்போது இடைக்காலப் பயிற்சியில் உள்ளார்

நாவாந்துறை பங்கின் மறுமலர்ச்சி

யாழ் மாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பின்தங்கிய நாவாந்துறைப் பங்கு மக்களின் ஆன்ம வாழ்வில் அக்கறை கொண்டு அவர்களது வாழ்வை வளம் படுத்தும் நோக்கத்துடன் அம் மக்களுக்குப் பணிபுரிய நல்லாயன் சபைக்கு அழைப்பு விடுத்தார்.

ஆண்டகை அவர்களின் அழைப்பை ஏற்று நல்லாயன் சபை அருட்சகோதரிகளான மேரி ஆஞ்சலா பெர்னாண்டோ, அசுந்தா மரியா முருகுப்பிள்ளை, மேரி பாஸ்கல் பெர்னாண்டோ ஆகிய மூவர் 1974.01.11இல் நாவாந்துறைப் பங்கிற்கு வருகை தந்தனர். அவர்களைத் தொடர்ந்து அருட் சகோதரிகளான மேரி மற்றில்டா பெர்னாண்டோ, மேரி கிறிசோஸ்றம் பெரேரா

ஆகிய சகோதரிகள் வந்து சேர்ந்தனர். நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்திரு. பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகளார் அருட்சகோதரிகளை மகிழ்ச்சி பொங்க வரவேற்று அன்போடு அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தார். அதைத் தொடர்ந்து ஆண்டகை அவர்கள் வருகை தந்து தனது நல்லாசிகளை அருளினார். மக்களோடு வாழ மக்களுக்குப் பணிபுரிய வருகை தந்த அருட்சகோதரிகளைக் கண்ட பங்கு மக்கள் உளம் பூரித்து ஆனந்தம் அடைந்தனர். அருட்சகோதரிகளும் மக்களோடு உரையாடி அவர்கள் தேவைகளைப் புரிந்துகொண்டனர்.

"ஓர் ஆன்மா உலகைவிட மேலானது" என்ற நல்லாயன் சபை ஸ்தாபகியான அன்னை மேரி யூபிறேசியாவின் குறிக்கோளை நிறைவு படுத்த அருட்சகோதரிகள் ஆர்வமுடன் பணி வாழ்வில் ஈடுபட்டனர்.

01. பங்குப் பணிகள்

- பங்குத் தந்தையுடன் சேர்ந்து பங்கின் வளர்ச்சிக்காக பணி புரிதல்.
- பங்கில் பல பக்திக் கூட்டங்களை உருவாக்கி அவற்றைப் பராமரித்தல்.
- பங்கில் மறைக்கல்வி கற்பித்தல்.
- மணமக்களைத் திருமணத்திற்குத் தயார்செய்தல்.
- வீடுகளைத் தரிசித்து மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
- நோயாளரைத் தரிசித்து ஆறுதல் கூறல்.
- தனிப்பட்ட முறையில் மக்களுடன் செபித்தல்.

02. பாடசாலைகளில் படிப்பித்தல்.
03. பாலர் பாடசாலைகளை நடப்பித்தல்.
04. மாலைநேர வகுப்புக்கள் நடப்பித்தல்.
05. இளம் பெண்களுக்குப் பலவித பயிற்சிகள் அளித்தல்.

நாவாந்துறைப் பங்கில் மாத்திரமல்ல ஆனைக்கோட்டை, நவாலி பங்குகளிலும் அருட்சகோதரிகள் பணிபுரிந்தனர். காலத்துக்கேற்ற முறையில் பணிகள் மாற்றமடைந்தன.

பங்கில் பணிபுரிந்த தலைமைச் சகோதரிகள்:

1.	அருட்சகோதரி மேரி அஞ்சலா பொன்னான்டோ	1974 – 1976
2.	7. அருட்சகோதரி மேரி யூடித் கூஞ்ஞ	1976 – 1980
3.	அருட்சகோதரி மேரி மொனிக்கா பொன்னான்டோ	1980 – 1983
4.	அருட்சகோதரி மேரி மொனிக்கா பஸ்தியாம்பிள்ளை	1983 – 1985
5.	அருட்சகோதரி மேரி பற்றீசியாராஜேஸ் இம்மானுவேல்	1985 – 1991
6.	அருட்சகோதரி அசும்தா மரிய முருகுப்பிள்ளை	1991 – 2000
7.	அருட்சகோதரி சகாய மேரி அருள்ராசா	2000 – 2002
8.	அருட்சகோதரி மேரி புனிதராணி	2003 – 2010
9.	அருட்சகோதரி மேரி ஜெசி நீக்கிலாப்பிள்ளை	2010 – 2016
10.	அருட்சகோதரி மேரி கமலா சிறிநாதன்	2016–இன்றுவரை

சகோதரிகள்

அருட்சகோதரி மேரி சேவியர்
அருட்சகோதரி மேரி இராஜேஸ்
அருட்சகோதரி மேரி மக்டலின் பிரான்சிஸ்
அருட்சகோதரி மேரி கமலா
அருட்சகோதரி மேரி சேகிறட் காட்
அருட்சகோதரி மேரி கபிரியேல்
அருட்சகோதரி மேரி மொணிக்
அருட்சகோதரி மேரி சுகிர்தா
அருட்சகோதரி மேரி மாறி யூபிறேசியா
அருட்சகோதரி மேரி சிசிலியா
அருட்சகோதரி மேரி பெலிசிற்றா
அருட்சகோதரி மேரி நிர்மலா
அருட்சகோதரி மேரி மேபள்
அருட்சகோதரி மேரி கொன்சொலாத்தா
அருட்சகோதரி மேரி ஸ்ரெலா
அருட்சகோதரி மேரி புனிதராணி
அருட்சகோதரி மேரி றஞ்சனா
அருட்சகோதரி மேரி எமிலின்
அருட்சகோதரி மேரி றெமோஸினி
அருட்சகோதரி மேரி செல்வசோதி
அருட்சகோதரி மேரி வேஜினி
அருட்சகோதரி மேரி அனன்சியாற்றா
அருட்சகோதரி மேரி பற்றிமா
அருட்சகோதரி மேரி சுமித்ரா
அருட்சகோதரி மேரி நிஷானி
அருட்சகோதரி மேரி சர்மிலா
அருட்சகோதரி லூட் மேரி
அருட்சகோதரி அனி
அருட்சகோதரி மரிய அல்போன்சா

அருட்சகோதரிகள் பணிகளில் நிறைவுகண்டதன் பயனாக நாவாந்துறைப் பங்கில் நல்லாயன்சபை அருட்சகோதரிகள் பலர் உருவாகினர். பங்கும் மறுமலர்ச்சியடைந்தது.

1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி கரித்தாஸ் ஹொலண்ட் நிறுவனத்தின் உதவியுடன் யுவதிகள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதன் மூலம் சமூக மேம்பாட்டை முன்னேற்றக் கைப்பணி, தையல், உணவு வகைகள் தயாரித்தல், அழகுக்கலை போன்றவற்றில் பயிற்சியளிப்பதற்காக ஓர் புதிய கட்டிடம் ஆயர் அதிவந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1989களில் யுத்த நிலைமையும், பல பிரச்சினைகளும் நிறைந்த காலத்தில், நல்லாயன் சகோதரிகள் இறுதிவரை மக்களோடு நிலைத்து இருந்து எல்லா விதத்திலும், உதவி புரிந்து வந்தனர். நிலமை மோசமான போது, பங்கு மக்கள் யாவரும் பங்கைவிட்டு வெளியேறியபோது, அருட்சகோதரிகளும் பங்கைவிட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. சில மாதங்களின் பிற்பாடு அருட்சகோதரிகள் மீண்டும் பங்கிற்கு வந்து தம்பணி தொடர்ந்தனர். மிக மோசமான உக்கிரமான போர் நடந்துகொண்டிருந்த 2008, 2009ம் ஆண்டுகளில் கூட எமது நல்லாயன் சகோதரிகள் மக்கள் இடம்பெயர்ந்தபோதும், எங்கும் செல்லாது எஞ்சியிருந்த மக்களுடனேயே இருந்து இராணுவத்துடனான புரிந்துணர்வுடன் பல நன்மைகளைச் செய்து சகல விதத்திலும் மக்களுக்குப் பாதுகாப்பும் ஆறுதலும் அளித்து சிறப்பான பணி புரிந்தனர். யுத்தத்திற்குப் பிற்பாடு 2012ம் ஆண்டு 23 சித்திரை மாதம் நல்லாயன் சபையுடன் இணைந்து செயல்பட பலர் விருப்புடன் நல்லாயன் பொதுநிலையினர் சபையாக எம் பணியில் ஒத்தாசை புரிந்து வருகின்றனர். பாடசாலை மாணவர்களும் (சிறுமிகள்) எமது சபையின் தனி அருள்வரம் (charism) பற்றிய அறிவும், அனுபவமும் பெற றோஸ் வேர்ஜினி குழு அமைக்கப்பட்டு நல்லாயனான யேசுவின் இரக்கமுள்ள அன்பை உணரவும், அவரைப்போல் இரக்கமுள்ளவர்களாக வாழவும் வழிகாட்டப்படுகின்றனர்.

எமது மடத்திற்கு ஓர் புதிய கட்டிடத் தொகுதி 2014ம் ஆண்டு பங்குனி மாதம் 4ம் திகதி எமது மாகாணத் தலைவி அருட்சகோதரி பிரான்சின் முத்துகல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு இரவு வேளைகளில் வீடுகளில் நெருக்கமும், வசதியுமில்லா மாணவர்கள் வந்து தங்கி நின்று தமது கல்வியை மேற்கொள்ளவும், காலையில் வீடு செல்லவும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. வெளிநாடுகளில் வாழும், நாவாந்துறை மக்கள் இந்த முயற்சிக்கு தமது ஒத்தாசையை வழங்கினர்.

காலை வேளைகளில் கணித, விஞ்ஞான வகுப்புக்கள் க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு நடைபெறுகின்றன. வெளிநாட்டில் வாழும் நல்ல உள்ளங்கள் இம்முயற்சிக்கு உதவி புரிகின்றனர். மரியாள் ஆலய மக்களிடம் இருந்து எமது சபைக்கு இன்றுவரை ஒன்பது அருட்சகோதரிகள் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். மேலும் தேவைக்கேற்ற வகையில் பல புதிய முயற்சிகளை அறிமுகப்படுத்தி தமது பணியை முன்னெடுக்க எம் சகோதரிகள் உத்தேசித்துள்ளனர். நல்லாயன் யேசுவின் காலடிப்பாதையில் அவர்கள் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

- தற்போதைய தலைமைச் சகோதரி மேரி கமலா சிறிநாதன்

நாவாந்துறையில் கத்தோலிக்க சமயத்தின் பின்னணியும் புனித பரலோகமாதா ஆலய வரலாறும்

முன்னுரை

தற்போதைய நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயம் 75 வருடங்களை நிறைவு செய்தாலும் இவ்வாலயத்தின் கத்தோலிக்க சமூகம் அதற்கு மேலாகச் சில நூற்றாண்டுகள் வரலாற்றைக் கொண்டது. எனவே இவ்வாலய வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டுமுன் கத்தோலிக்க சமயம் கொண்டு வரப்பட்ட போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து (16ம் நூற்றாண்டிலிருந்து) இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கத்தோலிக்க திருச்சபை கடுகு விதைபோல் விதைக்கப் பட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் மறைசாட்சிகளின் இரத்தத்தால் உரமிடப்பட்டு வளர்ச்சியடைந்து குடாநாட்டின் எல்லா இடங்களிலும் வியாபித்துப் பலன் தரத் தொடங்கிய வரலாற்றையும் பின்னோக்கிப் பார்க்கும் போது 1942ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் வரலாற்று வளர்ச்சியும் முழுமை பெறும் எனலாம்.

யாழ்ப்பாணக் கோட்டையை அண்டிய பகுதியாக இருப்பதாலும் நகரை அண்டிய பகுதியாக இருப்பதாலும் யாழ். புதுமை மாதா ஆலயம் மற்றும் 17ம் நூற்றாண்டில் யாழ். நகரில் தமது மையங்களைக் கொண்டிருந்த எல்லாத் துறவற சபைகளினதும் (பிரான்சிஸ்கன் சபை, இயேசுசபை, டோமினிக்கன் சபை, ஆகியவை) இல்லங்கள் அமைந்திருந்தமையாலும் நாவாந்துறை மக்கள் அந்நாட்களிலிருந்தே கத்தோலிக்க சமயத்தைத் தழுவி வந்திருக்க வேண்டும். பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் நாவாந்துறையில் கத்தோலிக்க சமயம் பரவுவதற்குச் சாதகமாய் அமைந்திருந்தன. அத்துடன் போர்த்துக்கேயர் ஊர்காவற்துறைக்குத் தமது கப்பல்களில் வந்து சிறிய படகுகளில் யாழ்ப்பாணம் வருவதற்கு நுழைவாயிலாக நாவாந்துறை இருந்தமையால் தமது தேவைகளுக்காக தீவுப்பகுதியிலிருந்து ஒரு தொகுதி மக்களைத் தமக்குதவியாக இருப்பதற்கு நாவாந்துறையில் குடியமர்த்தியிருந் தார்கள். ஒருவேளை இவர்கள் போர்த்துக்கேயரால் வரிவசூலிக்கக் குடியிருத்தப் பட்டிருக்கலாம். ஏனெனில் புனித நீக்கிலார் ஆலய வளவு உறுதியின் பெயர் ஆயவடி என்பதாகும். இவர்கள் கத்தோலிக்கராக இருந்தமை நாவாந்துறையில் ஏற்கனவே இருந்தவர்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவ ஏற்புடைய சூழலையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

போர்த்துக்கேயர் இலங்கை வருகையும் யாழ். குடாநாட்டு வருகையும் கத்தோலிக்க சமய ஆரம்பமும்.

போர்த்துக்கேயர் காலத்தில் (1505-1658) யாழ். குடாநாட்டில் கத்தோலிக்க திருச்சபையின் ஆரம்பம்

போர்த்துக்கேயர் (1505ல் காலடி வைத்தாலும் கோட்டே அரசர் புவனேக பாகுவின் வேண்டுதலால் 1543ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையினர் ஜோவாவோ டி வில்லா டோ கொண்டே (Friar Joao de Villa do Conde) தலைமையில் வந்த 6 பிரான்சிஸ்கன் சபை மறைப் பணியாளரது முறைப்படியான பணியாலேயே கத்தோலிக்க திருச்சபை நாட்டு மக்களிடையே வேரூன்றத் துவங்கியது. இந்நாட்களில் யாழ்ப்பாண அரசின் அரசனாக விளங்கிய செகராசசேகரன் எனப்படும். 1ம் சங்கிலியன் (1519-1561) போர்த்துக்கேயருக்கும் அவர்கள் பரப்பிவந்த கத்தோலிக்க சமயத்திற்கும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையால் பிரான்சிஸ்கன் மறைப் பணியாளர் ஓரிருவர் வியாபாரிகள் போல் வேடமணிந்து யாழ்ப்பாண இராச்சியத்திலும் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் வந்து பணியாற்றிருப்பர் என்று எண்ண இடமுண்டு.

1543ம் ஆண்டின் இறுதிப்பகுதியின் மேற்குறிப்பிட்ட 6 குருக்களில் பேட்றாவோ (Pedrao) அடிகளும் இன்னுமொருவரும் யாழ். குடாநாட்டில் வியாபாரிகள் போல வந்து மறைவாக மறைப் பணியாற்றியதாக ஞானப்பிரசாகர் அடிகள் குறிப்பிடுகின்றார்.

எனினும் முறைப்படியான மறைப் பணிக்கான அத்திவாரம், 1560ம் ஆண்டு 1544ம் ஆண்டு சங்கிலியனது உத்தரவுக்கமைய இடம்பெற்ற மன்னார் மறைசாட்சிய நிகழ்விற்கென அரசனைத் தண்டிக்க போர்த்துக்கேயத் தளபதி டொன் பிறகான்சாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காலத்தில் தான் இடம்பெற்றது எனலாம். இந்த நடவடிக்கை ராணுவ ரீதியில் தோல்வியில் முடிவடைந்தாலும் இந்நாட்களில் திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கரும் பெஸ்கியொர் டி லிஸ்போவா போன்ற சில பிரான்சிஸ்கன் குருக்களும் மறைசாட்சிகளானார்கள். இம்மறைசாட்சிகளான பிரான்சிஸ்கன் சபையினரும் சில புதுக் கிறிஸ்தவர்களும் காண்பித்த துணிவும் அமைதியும் மற்ற மக்களின் உள்ளங்களிலும் கத்தோலிக்க திருச்சபை மட்டில் இருந்த மதிப்பையும் செல்வாக்கையும் அதிகரிக்க உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை உறுதிப் படுத்தும் விதத்தில் மேலும் சில பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் யாழ். குடாநாட்டுக்கு வந்ததாகவும் மறைசாட்சிகளான தமது சகோதர குருக்களின் இடத்தை நிரப்பும் விதத்தில் அவர்கள் பணியாற்றியதாகவும் அரச குடும்பத்தில் இருந்து ஒருவர் உட்பட ஏறக்குறைய 1500 பேர் திருமுழுக்குப் பெற்றதாகவும் இவர்களில் கணிசமானோர் மறைசாட்சிகளாயினர் என்றும் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

1561ம் ஆண்டு சங்கிலியன் இறந்ததும் யார் அரசனாவது என்பதில் ஒரு இழுபறிநிலை யேற்பட்டது. மக்கள் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயப் படையதிகாரியைத் தலையிடுமாறு கோரினர். இதற்கிணங்க போர்த்துக்கேயப் படையதிகாரியின் தலையீட்டினால் பெரியபிள்ள யெனும் சேகராசசேகரன் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டான். இவனது காலத்தில் (1565-1582) குடாநாட்டில் இருந்த கத்தோலிக்கருக்கு பிரச்சினைகள் இருக்கவில்லை. அதன் பின் ஆட்சிக்கு வந்த புவிராஜபண்டாரம் பரராசசேகரன் (1582-1591) தனது மக்கள் கத்தோலிக்கராவதையும் போர்த்துக்கேய தலையீடுகளையும் விரும்பவில்லை. இவன் அப்போது மன்னார் தீவில் நிலை கொண்டிருந்த போர்த்துக்கேயர் மீது தாக்குதலொன்றையும் மேற்கொண்டான். ஆயினும் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

யாழ். குடா நாட்டில் கத்தோலிக்க சமயம் பரவி வேர்விட ஆரம்பித்தல்

புவிராஜபண்டாரத்தின் மன்னார் தாக்குதல் முயற்சி 1591ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முறியடிக்கப்பட்ட பின் அண்ட்ரே பூர்ட்ராடோ டி மென்டோன்சா (Andre Furtado de Mendonza) தலைமையில் போர்த்துக்கேயப் படையணி யாழ்ப்பாண அரசனைத் தண்டிக்க யாழ்ப்பாணம் வந்தது. இந்தப் போரில் யாழ்ப்பாண அரசன் புவிராஜ பண்டாரம் கைது செய்யப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டான். முன்னைய அரசன் பெரியபிள்ளையின் மகன் எதிர்மன்ன சிங்ககுமாரன் அரசனாக நியமிக்கப்பட்டான். இதன் பின்னர் தான் முறைப் படியான கத்தோலிக்க மதம் குடாநாடெங்கும் போதிக்கப்பட்டு பல மதமாற்றங்கள் இடம் பெறத் தொடங்கின எனலாம். புதிய அரசன் கத்தோலிக்க சமயம் சார்பானவனாக இருந்தமையால் முதலியார்கள் மற்றும் பெரியோர்களது எதிர்ப்புக்கு மத்தியிலும் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டு வந்தது. நல்லூரில் அரசனுடைய மாளிகைக் கருகாமையிலேயே பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் தமது வதிவிடமொன்றை அமைத்தனர். 1614ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையின் முக்கியமான குருவாகிய பெற்றன்கோர் (Betancor) அடிகளாரது வருகையின் பின் கத்தோலிக்க சமயம் இன்னும் வேகமாகப் பரவத்தொடங்கியது.

யாழ். குடாநாடு முழுமையாக போர்த்துக்கேய கட்டுப்பாட்டுக்குள்ளும், ஆட்சிக்குள்ளும் வரல்

17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணைக் குடாநாட்டில் நிலை கொண்டிருந்தாலும் கத்தோலிக்க சமயம் குடாநாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவியிருந்தது என்று சொல்ல முடியாது. கத்தோலிக்கருடைய எண்ணிக்கை குடாநாட்டில் 11,000 பேரளவில் இருந்தனர். இவர்களை பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் பராமரித்தனர். 1619ம் ஆண்டு நடுப்பகுதியில் போர்த்துக்கேய படைத்தளபதி பிலிப் டி ஒலிவெய்ரா (Philip de Oliveira) தலைமை தாங்கி மேற்கொண்ட நடவடிக்கையால் 1621ம் ஆண்டு யாழ். குடாநாடு முழுவதும்

போர்த்துக்கேயரின் பூரண கட்டுப்பாட்டுக்குள்ளும், ஆட்சிக்குள்ளும் வந்தது. அதே வேளையில் ஏற்கனவே முதலில் மன்னாரிலும் பின்னர் தென்பகுதியிலும் பணியாற்றத் தொடங்கியிருந்த இயேசு சபையினரும் யாழ் குடாநாட்டுக்குள் பணிபுரிய வரவழைக்கப்பட்டனர். பிரான்சிஸ்கன் சபையினர் ஏற்கனவே பணியாற்றிய குடாநாட்டில் கரையோரப் பகுதிகளிலும், தீவுப் பகுதிகளிலும் தொடர்ந்து பணியாற்ற, இயேசு சபையினரை குடாநாட்டின் உட்பகுதியில் பணியாற்ற உடன்பாடாயிற்று. பிலிப் டி ஒலிவெய்ராவின் முழு ஒத்துழைப்புடன் பிரான்சிஸ்கன் சபையினரும், இயேசு சபையினரும் பெருமளவிலும் பின்னர் டோமினிக்கன் சபையினரும், அகுஸ்தீனியர் சபையினரும் ஓரளவுக்குத் தமது பணிகளை விரிவுபடுத்தி நிலைகொண்டனர்.

போர்த்துக்கேய ஆட்சியில் யாழ். குடாநாட்டில் கத்தோலிக்க சமயத்தின் நிலபரம்

பவுலோ டா ட்ரினிடாடே (Paulo da Trinidade) யின் தரவுகளின் படி 1634ம் ஆண்டு யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் 24 ஆலயங்களில் (பங்குகளில்) 69,371 கத்தோலிக்கர் இருந்துள்ளனர். இவையெல்லாம் அனேகமாகக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளிலும், தீவுப் பகுதிகளிலுமே இருந்துள்ளன. ஒவ்வொரு பங்கிலும் ஒரு பாடசாலை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யேசு சபையினரின் தரவுகளின் படி 1644ம் ஆண்டு அவர்களின் பொறுப்பில் 12 ஆலயங்களும் (பங்குகளும்) அவற்றில் 32,287 கத்தோலிக்கரும் இருந்துள்ளனர். இங்கு ஒவ்வொரு ஆலயத்தையும் அண்டியதாக ஒரு பாடசாலை இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒருசில டோமினிக்கன் சபையினரும் பணியாற்றியுள்ளனர். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் ஏதோ ஒரு பங்கின் கட்டமைப்புக்குள் பிரான்சிஸ்கன் சபையினரது அல்லது இயேசு சபையினரது பராமரிப்பின் கீழ் இயங்கி வந்துள்ளது எனலாம். கரையோரப் பகுதியிலும், தீவகத்திலும் பிரான்சிஸ்கன் சபையினர் இருந்து வந்த நிலையில் குடாநாட்டின் நடுப்பகுதியில் அனேகமாக யேசு சபையினரின் பங்குகள் இருந்துள்ளன. எனினும் யாழ்ப்பாண நகரைப் பொறுத்தளவில் அங்கு எல்லாத் துறவற சபைகளுக்கும் வதிவிடங்களிருந்தன. யேசு சபையினருடைய ஒரு உயர்நிலைப் பாடசாலை (கல்லூரி) யாழ்ப்பாணத்தில் இயங்கியது. எனவே குடாநாட்டின் கிராமப் புறங்களிலும் பார்க்க நகரத்தையும் அதையண்டிய நாவாந்துறை போன்ற புறநகர்ப் பகுதிகளிலும் கத்தோலிக்கருக்கு குருக்களின் சேவை சற்றுக் கூடுதலாகக் கிடைத்ததென்றே சொல்ல வேண்டும். எல்லா இடங்களிலும் பாடசாலைகள் இருந்தாலும் நகரையும், நகரை அண்டியுள்ள இடங்களிலும் இருந்த பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகள் சற்று அதிகமாகவேயிருந்தன என்றும் குறிப்பிடலாம்.

நாவாய்த்துறை - நாவாந்துறை: கேந்திர முக்கியத்துவம்

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் குறிப்பாக அரசனின் வதிவிடம் மற்றும் நிர்வாக மையங்கள் அமைந்திருந்த சனத்தொகை அடர்த்தியாக உள்ள நல்லூர் மற்றும் போர்த்துக்கேயர் வருகையின் பின் முக்கியத்துவம் பெற்ற யாழ்ப்பாண நகரக் கோட்டை, அதனைச் சூழவுள்ள பகுதிகள் இவற்றுக்கருகாமையில் உள்ள கடல் ஆழம் குறைந்ததாகவும் பெரும் கப்பல்கள் கரை வரை வருவதற்குப் போதியளவு ஆழமில்லாதவையாகவும் இருப்பதனால் இங்கு வரும் கப்பல்கள் தூரத்திலேயே கடலில் நிறுத்தப்பட்டுப் பின் சிறு படகுகளில் பொருத்தமான இடங்களுக்கு வந்து சேர வேண்டியிருந்தது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின் அவர்கள் அடிக்கடி வந்து போவதற்கு ஏற்ற இடமாக ஊர்காவற்துறையைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு ஒரு கடற்கோட்டையையும் நிர்மாணித்துத் தமது கப்பல்களையும் அங்கு நிறுத்தி வைத்தார்கள். இக்கப்பல்களில் யாழ்ப்பாணம் வர முடியாதிருந்ததால். யாழ்நகர் வருவதற்குச் சிறிய படகுகளைப் பாவித்துள்ளனர். இச்சிறிய படகுகள் நாவாய் என்று அழைக்கப்பட்டன. அவர்கள் இவற்றில் வந்து கரையில் கட்டி வைத்து விட்டு யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று வந்துள்ளனர். இச்சிறிய படகுகள் நாவாய்கள் என்றும், திமில் என்றும் அழைக்கப்பட்டமையால் இவை கட்டப்பட்ட கரையோரம் நாவாய்துறையெனவும் இவைகளை ஓட்டி வந்தவர்கள் திமிலர் எனவும் அழைக்கப் பட்டனர். மேலும் ஆழங்குறைந்த கடற்பகுதிக் குடிகளாக திமிலர் இருப்பதை பல இடங்களில் காணலாம். இதன் காரணமாக காலப்போக்கில் இவ்விடம் நாவாந்துறையென அழைக்கப்படத் தொடங்கியிருக்கலாம். நாவாந்துறையிலிருந்து யாழ்ப்பாண நகரை ஊடறுத்து நகருக்கு வெளியே சென்று யாழ் குடா நாட்டுக்கு வெளியே செல்லும் வீதியுடன் இணையும் வீதி முன்னர் நாவாய்த்துறை வீதியென்று அழைக்கப்பட்டு வந்தது என்றும் சொல்லப்படுகிறது. இவ்வீதி தற்போதைய அரியாலை மாம்பழம் சந்தியில் போய் இணைகிறது. பிற்காலத்திலேயே பிரபல சைவப் பெரியாராகிய ஆறுமுகநாவலர் பெயரில் இவ்வீதி நாவலர் வீதி என்று அழைக்கப்படத் தொடங்கியது. போர்த்துக்கேயரின் ஊடாட்டம் இவ்வூரின் வழியாக அடிக்கடி நிகழ்ந்தமையாலும், தீவுப்பகுதிகளுக்கும் குடாநாட்டுக்கு மிடையே பயணம் செய்யும் குருக்களும் இவ்வூரின் வழியாகவே பயணம் செய்து வந்தமையால் மற்றக்கிராமங்களிலும் பார்க்க விரைவாகவும், வேகமாகவும் கத்தோலிக்க சமயம் இங்கு வேர்விடுவதற்கு நிலைமைகள் மிகவும் சாதகமாக அமைந்திருந்தன எனலாம். அத்துடன் ஊர்காவற்துறையில் உள்ளவர்களில் சிலர் குறிப்பாகப் படகுப் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கும் நாவாந்தறையில் உள்ளவர்களுக்கும் பல தொ ர்புகள் பேணப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் கத்தோலிக்க மக்களின்

வதிவிடமாகவும் அவர்களதும் மற்றும் போர்த்துக்கேயரதும், குருக்களதும் போக்குவரத்தில் ஒரு இடைத்தங்கல் நிலையமாகவும் விளங்கியமையால் இக் காலத்திலேயே இங்கு ஒரு சிற்றாலயமாவது இருந்திருக்க வேண்டுமென்று கொள்ளலாம். அந்த நேரத்திலேயே இவ்வாலயம் புனித நீக்கிலாருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது என்பதை அறுதியிட்டு கூற முடியாது.

ஒல்லாந்தர் காலத்தில் நாவாந்துறையில் கத்தோலிக்க சமயம் புனித ஜோசப்வாஸ் அடிகளின் பணிக்காலத்தில் நாவாந்துறையில் கத்தோலிக்க சமயம் பேணப்பட்டமை (1688-1711)

ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பொறுத்தவரையில் நாவாந்துறையின் கேந்திரதன்மை இன்னும் கூடுதலாக உணரப்பட்டது எனலாம். ஏறக்குறைய 30 வருடங்கள் குருக்கள் எவரும் இலங்கையில் இராததால் நாவாந்துறை வாழ் கத்தோலிக்கரும் திருப்பலி, திருவருட்சாதனங்களின்றியேயிருந்தனர். பின்னர் 1687ம் ஆண்டு இலங்கையின் அப்போஸ்தலராகிய புனித ஜோசப் வாஸ் அடிகள் வந்து பின்னர் சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து ஏறக்குறைய 2 ½ வருடங்கள் பணியாற்றிய காலம் நாவாந்துறை சற்றுக் கூடுதலாகவே பயன் பெற்றதெனலாம். தீவுப் பகுதிகளுக்குச் செல்லும் படகுகளும் நாவாந்துறையிலிருந்தே செல்வதும் வருவதுமாயிருந்தன என்று பார்த்தோம். புனித யோசவாஸ் அடிகளாரும் சில்லாலை மூப்பரின் வழிநடத்துதலிலும், கண்காணிப்பிலும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் (தென்மராட்சி, வடமராமட்சி, பச்சிலைப்பள்ளி, வலிகாமம் கிழக்கு, யாழ்ப்பாண நகரம், தீவுப்பகுதி) ஆகிய இடங்களுக்கும் அவ்வப்போது சென்று இரகசியமாக வழிபாடுகளை நடாத்தி, திருவருட்சாதனங்களை நிறைவேற்றி, கத்தோலிக்க மக்களைச் சந்தித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி வந்தார்.

தீவுப்பகுதிக்குச் செல்லவென்று வரும் போது வாஸ் அடிகள் தமது உதவியாளர்களுடன் (மூப்பர், சங்கீஸ்தம்) வந்து நாவாந்துறையில் தங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் எனவே சில வேளைகளில் சில நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கலாம். அந்த நாட்களில் நாவாந்துறையிலுள்ள பொருத்தமான, பாதுகாப்பான வீடுகளில் அவர் தங்கி வழிபாடுகளை நடாத்தியிருக்கலாம். அங்குள்ளவர்களும் பயன் பெற்றிருப்பர்.

வாஸ் அடிகள் 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று இடம்பெற்ற குருமேட்டைக்குப் பின் சில வருடங்கள் யாழ்ப்பாணம் வராமலிருந்த பின்னர் வந்த போதும் 1696க்குப் பின்னர் மேலும் ஒரட்டோரியன் சபைக் குருக்கள் வரத்தொடங்கிய

பின்னரும் குருக்கள் கிரமமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வந்து பணியாற்றக் கூடியதாயிருந்தது.

- புனித ஜோசப் வாஸ் அடிகளுக்குப் பின் யாழ்ப்பாணத்திற்கு 1696ல் ஒரட்டோரியன் சபைக் குருவாகிய ஜோசப் டி மெனசெஸ் அடிகளும், பேட்றோ பெர்ராவோ (பின்னர் வந்த இவர் ஒரட்டோரியன் சபையில் சேர்ந்தார்). யாழ்ப்பாணம் வந்து மறைவாகப் பணியாற்றினர்.
- பின்னர் 1697ம் ஆண்டு ஒரு தடவை வாஸ் அடிகள் யாழ் குடாநாட்டுக்கு மாறுவேடங்களில் வந்து முன்னர் பணி செய்த இடங்களை முடியுமானளவிற்கு தரிசித்து திருப்பலியொப்புக்கொடுத்து, திருவருட்சாதனங்களை வழங்கிச் சென்றார். அதேயாண்டு யாழ் குடாநாடு உட்பட மன்னார், மாதோட்டம், வன்னி ஆகிய இடங்களைப் பராமரிக்க பெட்றோ பொராவோ அடிகளை வாஸ் அடிகள் நியமித்தார்.
- 1703ம் ஆண்டு மீண்டும் ஒரு முறை ஜோசப் டி மெனேசேஸ் அடிகள் மாதோட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்தையும், தீவகப்பகுதிகளையும் தரிசித்துப் பணியாற்றிச் சென்றார். 1704ம் ஆண்டும், 1705ம் ஆண்டும் மீண்டும் இவர் யாழ்ப்பாணம் வந்து பணியாற்றிச் சென்றார்.
- 1708ம் ஆண்டு பேட்றோ டி சல்டானா அடிகள் யாழ் குடாநாடு வந்து அதுவரை நீண்ட காலம் தரிசிக்கப்படாத இடங்களைத் தரிசித்து ஏறக்குறைய ஒரு வருடம் தங்கி ஆன்மீகப்பணியாற்றிச் சென்றார்.

இக்காலத்தில் மீண்டும் நாவாந்துறை முக்கியத்தும் பெறத்தொடங்கியது எனலாம். இந்நாட்களில் ஒரு குருவானவர் ஒரே நேரத்தில் வலிகாமம் மேற்கையும், தீவுப்பகுதியையும் அல்லது யாழ் நகரப்பகுதியையும், தீவுப்பகுதியையும் பராமரிக்க வேண்டியிருந்ததால் நாவாந்துறை வந்தே தமது மறைப்பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் இதனால் நாவாந்துறை மக்கள் கூடுதல் பயன் பெற்றனர்.

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிசெய்த 150 வருடங்களில் முதல் 100 வருடங்களும் அவர்கள் கத்தோலிக்க சமயத்திற்கெதிரான தடைச் சட்டங்களை (ஆலயங்கள் அமைத்தல் உட்பட) மிகவும் இறுக்கமாக நடைமுறைப் படுத்தினார்கள். தடைச்சட்டங்கள் இருந்த போதும் கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சியையும் குருக்கள் வருகையையும் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்த முடியாதிருந்தமையால் 18ம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து தடைச் சட்டங்கள் நீக்கப்படாதிருந்தாலும் ஒல்லாந்தர் அவற்றை இறுக்கமாக நடைமுறைப் படுத்தவில்லையென்று தான் சொல்லவேண்டும். கத்தோலிக்கர் படிப்படியாக பகிரங்கமாகவே தமது மதத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். குருக்களும் ஓரளவு பகிரங்கமாகவே நடமாடத் தொடங்கினார்கள். மறைவாக இயங்கிய களிமண்ணிலான ஆலயங்கள் பகிரங்கமாக இயங்கத் தொடங்கின. ஒல்லாந்தருடைய ஆட்சியின் இறுதித் தசாப்தங்களில்

களிமண் ஆலயங்களுக்குப் பதிலாகக் கல்லினால் ஆலயங்கள் கட்டப்படத்துவங்கின. 1789ம் ஆண்டு அத்திவாரமிடப்பட்ட கல்லினால் ஆன முதல் யாழ். பேராலயம் இதற்கு ஒரு சான்று.

நாவாந்துறையில் இருந்த ஆலயத்தில், பின் கட்டுமான சுவர்ப்பகுதியில் 1734ம் ஆண்டு என்று குறிப்பிட்டிருந்ததை சில முன்னோர் அவதானித்துள்ளனர். பழைய கல்லினால் ஆன ஆலயத்திற்கான அத்திவாரம் இவ்வாண்டுதான் இடப்பட்டது என்று ஏற்பது கடினம். எனினும் முன்னர் களிமண்ணினால் ஆன புனித நீக்கிலார் ஆலயம் 1734ல் தோற்றம் பெற்றிருக்கலாம். இதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம். பின்வரும் காலங்களில் கல்லினால் ஆன ஆலயம் போர்த்துக்கேய ஆலயக் கட்டுமான முறைகளை உள்வாங்கி தனித்துவமான சிங்காசனம் மற்றும் பல்வேறு அம்சங்களுடன் ஒரட்டோரியன் சபைக் குருக்களால் கட்டி முடிக்கப் பட்டிருக்க வேண்டும்.

முஸ்லீம் மக்கள் நாவாந்துறை வருகை

நாவாந்துறையில் உள்ள பழமைவாய்ந்த இந்து ஆலயம் மற்றும் இந்து மக்கள் குடியிருப்புக்கள் ஒருபுறம் அவ்வாறேயிருக்க, போர்த்துக்கேயர் காலத்தில் சிறுகச் சிறுக ஆரம்பித்த கத்தோலிக்க மக்களின் குடியிருப்பு மிகவும் அடர்த்தியான ஒரு குடியிருப்பாக வளர்ந்து வந்தது. பின் ஒல்லாந்தர் காலத்தில் தான் கத்தோலிக்க மக்களின் குடியிருப்புக்களின் பின்புலத்தில் ஒரு முஸ்லீம் மக்களின் குடியிருப்பும் தோற்றம் பெற்றது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் எனும் நூலில் அவர் இம் முஸ்லீம் குடியிருப்பு எவ்வாறு தோன்றியது என்று விளக்குகின்றார்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் காயற் பட்டிணத்திலிருந்து வந்த சில சோனகர் மிருசுவில் என்னுமிடத்தில் குடியேறினர். அவர்கள் குடிகொண்டவிடம் உசன் எனும் சோனகத் தலைவனுக்குச் சொந்தமாயிருந்ததால் உசன் என்று வழங்குகின்றது. அச்சோனகர்கள் அங்கிருந்து அகன்று சோனகன்புலவிலே சிறிது காலம் வாழ்ந்து அதுவும் வசதியாக அமையாததால் நல்லூர் கந்தசுவாமி கோவிலிருக்குமிடத்திற்கு மேற்பாகத்தில் குடிகொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாசலும் கட்டினார்கள். அப்போது முன் இடிபட்ட கந்தசுவாமி கோவிலை மீளவும் கட்டுவதற்கு தமிழர் முயன்று, சோனகரை அவ்விடத்தினின்றும் நீக்கித்தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பித்தனர். ஒல்லாந்த தேசாதிபதி ஆவன செய்வதாகக் கூறியும் காலம் தாழ்த்திய வண்ணமிருந்தான். இதுகண்டு தமிழர் சோனகரை இவ்விடத்தை விடும்படி கேட்டும், இரந்தும் பார்த்தனர். முடிவில் இந்நிலத்திற்குப் பெருவிலை தருவதாயும் கேட்டார்கள். சோனகர் அதற்கும் இசையாமை கண்ட தமிழர் ஒரு பன்றியைக் கொன்று அவர்களுக்கெல்லாம் பொதுவாயிருந்த கிணற்றிலிட்டார்கள். அதுகண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்று

விட்டு நாவாய்துறை (நாவாந்துறை) க்குக் கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக் கொண்டு அங்கே குடியேறினார்கள் அதுவே சோனகத் தெருவென வழங்குகின்றது. சோனகர்கள் அக்கால முதல் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கத்தோலிக்கருக்கு மிகவும் அருகாமையில் வாழ்ந்து வந்தாலும் அந்நாட்களில் கத்தோலிக்கருடன் எதுவித முரண்பாட்டுக்கும் போகாதிருந்தனர்.

- 1712-13 யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு ஈறாக உள்ள பகுதிகள் **பேட்றோ டி சல்டானா** அடிகள் பராமரிப்பில் இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து பணியாற்றினார். 1714ல் ஜோசப் வாஸ் (இவர் முன்பு தனியாக இலங்கை முழுவதிலும் 24 வருடங்கள் பணி செய்த புனித ஜோசவ் வாஸ் அடிகளாரின் மருமகன்) அடிகள் யாழ்ப்பாணத்திற்கு **பேட்றோ டி சல்டானா** அடிகளுக்குதவியாக அனுப்பப்பட்டார். 1715 இலும் இவர் இங்கிருந்தார். 1717ல் **ஜோசப் பரேற்றோ** அடிகள் யாழ்குடாநாட்டுக்குள் செல்ல எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.
- 1723-25ம் ஆண்டு காலப்பகுதியில் **யாக்கோமே கொன்சால்வெஸ்** அடிகள் யாழ்ப்பாணத்தையும் தமது தரிசிப்புக்களின் போது தரிசித்தார். பலருக்குத் திருவருட்சாதனங்களை வழங்கினார். விலகிச் சென்றோரை மீண்டும் கொணர்ந்தார்.
- 1723ம் ஆண்டு **அந்தோனியோ டி தவவோறா** யாழ்ப்பாண மறைத் தளத்தைப் பொறுப் பெடுத்தார். இவருக்கு உதவியாக **இக்னேசியோ டி மெஸ்கிற்றாவும்** யாழ்ப்பாணம் சென்றார்.

நாவாந்துறையில் கத்தோலிக்க ஆலயம்

1728ம் ஆண்டு **கஸ்ரோ டியோ டி அந்திராடோ** யாழ்ப்பாணம் சென்றார். 1734ம் ஆண்டிலும் பணியாற்றிய பின் 1735ல் மன்னாருக்கு அனுப்பப்பட்டார். 1737ல் கஸ்ரோ டியோ லெய்ராவோ யாழ்ப்பாணம் வந்து 1738 பெப்ரவரி வரை யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார். அதே வேளை **பிரான்சிஸ்கோ மொன்றோய்** அடிகளும் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார். இந்நாட்களில் யாழ்ப்பாணம் வந்த ஒல்லாந்த தளபதி வித்தியாசமானவராக இருந்தார். இவர் லூர்த்தரன் சபையைச் சார்ந்தவராக இருந்தாலும் இவரது பொறுமையான, அமைதியான நடவடிக்கைகளைப் பார்த்த சிலர் இவர் ஒரு வேளை கத்தோலிக்கராக இருப்பாரோ என்றும் கருதினர். எனவே இவர் பொறுப்பில் இருந்த குறுகிய காலத்தில் கத்தோலிக்கர் பகிரங்கமாகவும், ஆடம்பரமாகவும் தமது திருநாட்களை கொண்டாடக் கூடியதாக விருந்தது. 1734ம் ஆண்டு குறிப்பிட்ட ஒரு கல் நாவாந்துறையிலிருந்த பழைய புனித நீக்கிலார் ஆலயத்தின் பின்புற மேல் பக்கத்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டதை முன்னர்

பார்த்தோம். அநேகமாக இந்நாட்களில் இருந்த சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்த ஆலயத்திற்காக அத்திவாரம் இடப்பட்டிருக்கலாம்.

ஒரட்டோரியன் சபையினரின் 1733-1740 ஆண்டுப் பகுதிக்கான அறிக்கையைப் பார்க்கும் போது ஒல்லாந்தருடைய ஆட்சியின் முதல் 100 வருடங்களுக்கு கடைப் பிடிக்கப்பட்ட கத்தோலிக்க சமயத்திற்கெதிரான இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்த ஒல்லாந்த தளபதியின் குறுகிய பதவிக் காலப் பகுதியில் கத்தோலிக்கர் தமது சமயத்தைக் கடைப்பிடிக்கவும், திருநாட்களை ஆடம்பராமாகக் கொண்டாடக் கூடியதாயுமிருந்தது. இதுமட்டுமன்றிப் பல ஆலயங்களை முதலாகச் கட்டக் கூடியதாயுமிருந்தது. குறிப்பாக இக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தீவகப் பகுதியிலும் பணியாற்றிய **கஸ்ரோடியோ லெய்ற்றாவோ** அடிகள் பல ஆலயங்களைக் கட்டியுள்ளார். எனவே கேத்திர முக்கியத்துவம் வாய்ந்த நாவாந்துறையிலும் 1734ம் ஆண்டு இவரினால் ஆலயம் கட்டிப்பட்டிருந்த வாய்ப் புண்டு. இவர் மன்னார் பகுதியில் சில ஆலயங்களைக் கட்டுவித்தார். இவரால் கட்டப்பட்ட ஆலயங்கள் தீவகத்திலும், வலிகாமம் மேற்கிலும் அமைந்திருந்ததை அறிகின்றோம். எனவே நாவாந்துறையிலும் இவர் மேற்படி ஆலயத்தை கட்டியிருக்க வாய்ப்புண்டு.

- 1740-43 அறிக்கையின் படி **கஸ்ரோ டியோ லெய்ராவோ** யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்.
- 1741ம் ஆண்டு **கஸ்ரோடியோ டி அந்திராடேயும், பிரான்சிஸ்கோ டி மொன்றோய்** அடிகளும் யாழ்ப்பாணம் வந்து பணியாற்றினர். 1743ம் ஆண்டு வரை **பிரான்சிஸ்கோ டி மொன்றோய்** யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.
- 1744 – 45ம் ஆண்டு **அலெக்சாண்ட்ரே மனுவல்** அடிகளும் **பிரான்சிஸ்கோ டி மொன்றோய்** அடிகளும் யாழ்ப்பாணத்தையும், மாதோட்டப் பகுதியையும் பராமரித்தனர். 1745ம் ஆண்டு **ஜோவாவே பார்ரோஸ்** அடிகள் யாழ்ப்பாண, மன்னார் பகுதிக்குச் சென்றார்.
- 1749-50ம் ஆண்டு அறிக்கையின் படி அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திற்குப் பல குருக்கள் வந்து குறுகிய காலப்பணி ஆற்றிச் சென்றதை அறியக்கூடியதாயுள்ளது.
- 1752-1753ம் ஆண்டு **பிரான்சிஸ்கோ டி மொன்றோய்** யாழ்ப்பாணத்தில் ஓய்வுறக்கமின்றிப் பணியாற்றினார். 1754ம் ஆண்டு யாழ் குடாநாட்டில் பிலிப் டி மெல்லோ எனும் ஒல்லாந்த கல்வினிஸ்ட் போதகரின் தூண்டுதலால் பல கத்தோலிக்கர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தமது விசுவாசத்தில் உறுதியாயிருந்தமையால் பல சித்திரவதைக்குள்ளாகினர்.

- 1755-1756ம் ஆண்டுப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் **பேட்றோ பவுலோ** அடிகள் பணியாற்றினார்.
- 1756-1757ம் ஆண்டுப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் **இக்னேசியோ டி மவுறா** அடிகள் பணியாற்றினார்.
- 1759ம் ஆண்டு அறிக்கையின்படி **செபஸ்ரியாவோ டி நொரோன்ஹா** யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார்.
- 1760-1762ம் ஆண்டு செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளடங்கிய பகுதியை **லோப்போ டி அல்பர்குக்** அடிகள் பராமரித்தார்.
- 1763ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **பிரான்சிஸ்கோ டி மொன்றோய்** அடிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை உள்ளடங்கிய பகுதியை பராமரித்தார்.
- 1764ம் ஆண்டு அறிக்கையின்படி **லோப்போ டி அல்பர்குக்** அடிகள் மட்டக்களப்பு, பச்சிலைப்பள்ளி, வலிகாமம் பகுதிகளைப் பராமரித்துள்ளார். யாழ்ப்பாணம் உட்பட மாதோட்டம், வன்னி ஆகிய இடங்களை வேறு குருக்கள் பராமரித்துள்ளனர்.
- 1769ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின் படி யாழ்ப்பாண நகரை **லோப்போ டி அல்பர்குக்** அடிகள் பராமரித்துள்ளார்.
- 1770ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **எயுசேபியொ டொ றொசாறியோ** அடிகள் யாழ்ப்பாண நகரையும் தீவகப் பகுதியையும் பராமரித்தார்.
- 1771ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **றொட்றிகோ டுவார்த்தே** அடிகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார்.
- 1774ம் ஆண்டு அறிக்கையின்படி **லோப்போ டி அல்பர்குக்** அடிகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது இறைவனடி சேர்ந்தார்.
- 1775ம் ஆண்டு அறிக்கையின்படி **பேட்றோ பவுலோ அடிகள்** யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார். 1776ம் ஆண்டும் 1777ம் ஆண்டும் இவர் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார்.
- 1777ம் ஆண்டு **பாஸ்கால் பெரேய்ரா** அடிகள் தீவகப்பகுதியிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றினார்.
- 1778ம் ஆண்டு அறிக்கையின்படி யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதியில் **பேட்றோ பவுலோ** அடிகளும் **மனுவல் ஜோவாவோ** அடிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு நகர்களிலும் பணியாற்றினர்.
- 1779ம் அறிக்கையின்படி **பிரான்சிஸ்கோ பாஸ்குவால்** அடிகள் யாழ்ப்பாண நகரிலும் தீவகப் பகுதியிலும் பணியாற்றினார்.
- 1781ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **மிகுவேல் டி அல்பர்குக்** அடிகள் யாழ்ப்பாண நகரையும் தீவகப்பகுதியையும் பராமரித்தார்.

- 1784ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி தமிழிலும் சிங்களத்திலும் நன்கு பாண்டித்தியம் பெற்ற **கபிரியேல் பச்சேக்கோ** அடிகள் யாழ்ப்பாண நகரை பராமரித்தார்.
- 1785ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **தோமஸ் டி மிஸ்குயிற்றா** யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்துறைப் பகுதியைப் பராமரித்தார்.
- 1786ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **டோமிங்கோஸ் மொன்டேயிரோ** அடிகள் யாழ்ப்பாணத்தைப் பராமரித்தார்.
- 1787ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **பிரான்சிஸ்கோ றொட்சின்கஸ்** அடிகள் யாழ்ப்பாண நகரைப் பராமரித்தார். மீண்டும் 1788ம் ஆண்டும் 1789 தொடக்கம் 1793ம் ஆண்டு வரை பணியாற்றினார்.
- 1791ம் ஆண்டு அறிக்கையின்படி **லெயோனார்டோ றிபேய்ரோ** அடிகள் யாழ்ப்பாண நகருக்குப் பொறுப்பாக வந்தார். இவர் காலத்தில் தான் யாழ் பேராலயத்தில் கல்லினால் ஆன ஆலயத்திற்கு அத்திவாரமிடப்பட்டது.
- 1793ம் ஆண்டு ஜனவரி அறிக்கையின்படி **டோமிங்கோஸ் மொன்டேயிரோ** அடிகள் யாழ்ப்பாண நகரையும் சுற்றுப்புற இடங்களையும் பராமரித்தார்.
- 1794ம் ஆண்டு அறிக்கையின்படி மீண்டும் **லெயோணர்டோ ரிபேய்ரோ** அடிகள் யாழ்ப்பாணத்தைப் பொறுப்பேற்று முன்னர் முன்னெடுத்த பேராலயக் கட்டுமானப் பணியைத் தொடர்ந்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் - மத சுதந்திரம்

- 1796ம் ஆண்டு ஆரம்பித்த ஆங்கிலேயர் ஆட்சியுடன் கத்தோலிக்கருக்கு மத சுதந்திரம் கிடைத்தது. அதற்குச் சில வருடங்களுக்கு முன்னதாக ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதி வருடங்களில் நடைமுறையில் கத்தோலிக்கருக்கு நெருக்குவாரங்கள் இருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். 1790க்குப்பின் படிப்படியாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் களிமண்ணால் ஆன ஆலயங்களுக் குப் பதிலாகக் கல்லினால் ஆன ஆலயங்கள உருவாகின. திருநாட்கள் சிறப்பாக ஆடம்பரமாக இடம்பெற்றன. மற்ற கிறிஸ்தவ சபைகளுக்கு இருந்த உரிமைகள் எல்லாம் கத்தோலிக்கரும் பெறலாயினர்.
- 1797ம் ஆண்டு அறிக்கையின்படி யாழ். நகரையும் அதனைச் சூழவுள்ள இடங்களையும் **லியோனார்டோ ரிபேய்ரோ** அடிகள் பராமரித்துவந்தார். நாவாந்துறை உட்பட அவரது பராமரிப்பில் 16 ஆலயங்கள் இருந்தன.
- 1799ம் ஆண்டு பெப்ருவரி அறிக்கையின்படி **ஜோவாவோ வாஸ்** அடிகள் யாழ்ப்பாண நகரையும் சுற்றியுள்ள இடங்களையும் பராமரித்தார்.
- 1801ம் ஆண்டு 1802ம் ஆண்டு அறிக்கைகளின்படி மீண்டும் யாழ்ப்பாணத்தையும் அதன் சுற்றுப்புற இடங்களையும் **லெயோனார்டோ ரிபேய்ரோ** அடிகள் பராமரித்தார்.

- 1805ம் ஆண்டு அறிக்கையின்படி **லெயோனார்டோ ரிபேய்ரோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அதன் சுற்றியுள்ள இடங்களுடன் வடமராட்சியின் சில பகுதிகளையும் பராமரித்தார்.
- 1806ம் ஆண்டு அறிக்கையின்படி **றெடுசிண்டோ டெல்காடோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அதனை சுற்றியுள்ள இடங்களையும் பராமரித்தார்.
- 1807ம் ஆண்டு பெப்ருவரி அறிக்கையின்படி **ஜோவாக்கிம் டி மொன்றோய்** அடிகள் யாழ்ப்பாண நகரை பராமரித்தார். அதேயாண்டு டிசெம்பர் அறிக்கையின்படி **நிக்கோலா றொட்ரிகஸ்** அடிகளாருடன் **அந்தோனியோ பிரான்சிஸ்கோ** அடிகளாரும் **தோமஸ் டி மிஸ்குயிற்றா** அடிகளும் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினர்.
- 1809ம் ஆண்டு நவம்பர் அறிக்கையின்படி **றெடுசிண்டோ டெல்காடோ** அடிகள் யாழ்ப்பாண நகரைப் பராமரித்தார்.
- 1811ம் ஆண்டு அறிக்கையின்படி **ஜோஸ் டி சிக்குவெய்ரா** அடிகள் யாழ்ப்பாண நகர், ஊர்காவற்துறை மற்றும் வலிகாமத்தின் ஒரு பாதியையும் பராமரித்தார்.
- 1812ம் ஆண்டு நவம்பர் அறிக்கையின்படி **கமில்லோ பறேற்றோ** அடிகள் ஊர்காவற்துறை மற்றும் வலிகாமத்தின் ஒரு பகுதி (நாவாந்துறை உள்ளடங்கலாக) யையும் பராமரித்தார்.
- 1813ம் ஆண்டு டிசம்பர் அறிக்கையின்படி **றெடுசின்டேடா டெல்காடோ** அடிகள் மீண்டும் யாழ்ப்பாண நகரையும் ஊர்காவற்துறையையும் பராமரித்தார்.
- 1816ம் ஆண்டு டிசம்பர் அறிக்கையின்படி **செபஸ்ரியாவோ கொடீனோ** அடிகள் ஊர்காவற்துறையையும் மற்றும் வலிகாமத்தின் ஒரு பகுதி (நாவாந்துறை உள்ளடங்கலாக) யையும் பராமரித்தார். 1817ம் அண்டு ஆகஸ்டில் இவர் யாழ்ப்பாணம் மற்றும் சுற்றுப்புற இடங்களைப் பராமரிக்க நியமனம் பெற்றார்.
- 1818ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின்படி **ஜோஸ் சிக்குவெய்ரா** அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் சுற்றுப்புற இடங்களைப் பராமரித்தார். அதேயாண்டு டிசம்பர் அறிக்கையின் படி **பிரான்சிஸ்கோ சேவியர்** அடிகள் யாழ்ப்பாண நகரை பராமரித்தார்.
- 1819ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின்படி **ஜோஸ் டி சிக்குவெய்ரா, ஜெரோணிமோ மிக்கேல்** அடிகள் யாழ்ப்பாண நகர், நெடுந்தீவும் சூழ உள்ள இடங்களையும் அளவெட்டி வரையிலான வலிகாமத்தின் ஒரு பாதியையும் பராமரித்தார். 1819ம் ஆண்டு நவம்பர் அறிக்கையின்படி **செபஸ்ரியாவோ கொடீனோ** அடிகள் யாழ்ப்பாண மறைத் தளத்தை பராமரித்தார்.
- 1820ம் ஆண்டு டிசம்பர் அறிக்கையின்படி **ஜோஸ் டி சிக்குவெய்ரா** அடிகள் யாழ்ப்பாண மறைத் தளத்தை பராமரித்தார்.
- 1820ம் ஆண்டு ஆகஸ்டில் **கமில்லோ பறேற்றோ** அடிகள் யாழ்ப்பாண நகரை பராமரித்தார்.

- 1822ம் ஆண்டு பெப்ரவரி அறிக்கையின்படி **கொன்ஸ்ரான்சியோ கோமெஸ்** அடிகள் யாழ்ப்பாணத்தைப் பராமரித்தார். 1822ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின் படி **ஜோவாவோ பப்ரிஸ்டா** அடிகள் யாழ்ப்பாண நகர், சுற்றியுள்ள இடங்கள் மற்றும் நாரந்தனை வரையுள்ள இடங்களைப் பராமரித்தார். 1822 ஆண்டு நவம்பர் அறிக்கையின் படி **கொன்ஸ்ரான்சியோ கோமெஸ்** அடிகள் மீண்டும் யாழ்ப்பாண நகரையும் சுற்றியுள்ள இடங்களையும் பராமரித்தார்.
- 1823ம் ஆண்டு ஆகஸட் அறிக்கையின்படி **பிலிப் நேரி** அடிகள் யாழ்ப்பாண நகரை பராமரித்தார்.
- 1824ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின்படி **ஜோவாவோ பப்ரிஸ்டா** அடிகள் யாழ்ப்பாண நகர் மற்றும் தீவகப் பகுதியைப் பராமரித்தார்.
- 1825ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின்படி **பேட்றோ அலெக்சாண்ரீனோ** அடிகள் யாழ்ப்பாண நகர் மற்றும் சூழவுள்ள இடங்களையும் பராமரித்தார்.
- 1826ம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின்படி **அந்தோனியோ றிபேய்ரோ** அடிகள் யாழ்ப்பாண நகரையும் நெடுந்தீவு உட்பட சூழவுள்ள இடங்களையும் பராமரித்தார். 1826ம் ஆண்டு ஒக்டோபர் அறிக்கையின்படி **ஜோவாவோ பப்ரிஸ்டா** அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்துறைப் பகுதிகளைப் பராமரித்தார்.
- 1827ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனங்களின்படி **கேய்த்தானோ அந்தோனியோ** அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் நெடுந்தீவு உட்பட சுற்றியுள்ள இடங்களைப் பராமரித்தார். 1827ம் ஆண்டு டிசெம்பர் அறிக்கையின்படி **பேட்றோ அலெக்சாண்ட்ரீனோ** அடிகள் யாழ்ப்பாண நகரையும் சுற்றியுள்ள இடங்களையும் பராமரித்தார்.

1828ம் ஆண்டு தரப்பட்ட ஆலயங்களின் பட்டியலில் இலங்கை முழுவதும் உள்ள ஆலயங்கள் 284 என்றும் அதில் தற்போதைய யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் மட்டும் 63 ஆலயங்கள் என்றும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயமும் உள்ளடக்கம்.

- 1828ம் ஆண்டு பணிநியமனங்களின்படி மீண்டும் **கேய்த்தானோ அந்தோனியோ** அடிகள் யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள பகுதிகளையும் பராமரிக்க நியமனம் பெற்றார். 1828 நவம்பர் அறிக்கையின்படி **அந்தோனியோ றிபேய்ரோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அண்டியுள்ள பகுதிகளையும் பராமரித்துள்ளார்.
- 1829ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **சல்வடோர் பியடாடே** அடிகள் யாழ். நகரையும் ஊர்காவற்துறையையும் பராமரித்தார். 1829ம் ஆண்டு நவம்பர் அறிக்கையின்படி **அந்தோனியோ கேய்த்தானோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அண்டியுள்ள இடங்களையும் பராமரித்தார்.

- 1830ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **கேய்த்தானோ டொ றொசாய்ரோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அண்டியுள்ள இடங்களையும் பராமரித்துள்ளார்.
- 1831ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **ஜோவாக்கிம் அல்பேர்ட்டோ** அடிகள் யாழ்நகரையும் அண்டியுள்ள இடங்களையும் பராமரித்துள்ளார்.
- 1832ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **கேய்த்தானோ டயஸ்** அடிகள் யாழ்ப்பாணம், நெடுந்தீவு மற்றும் அண்டைய இடங்களைப் பராமரித்தார். 1832ம் ஆண்டு நவம்பர் அறிக்கையின்படி **கேய்த்தானோ டொ ரொசாறியோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் அண்டைய இடங்களையும் பராமரித்துள்ளார்.
- 1833ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **ஜோவாக்கிம் அல்பேர்ட்டோ** அடிகள் யாழ்நகர், சூழவுள்ள பகுதிகள் மற்றும் நெடுந்தீவையும் பராமரித்துள்ளார்.
- 1834ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **பேட்றோ டெ நோரோன்கா** அடிகள் யாழ்நகர், நெடுந்தீவு மற்றும் சூழ உள்ள இடங்கள் இலுப்பைக்கடவை வரைக்கும் பராமரித்துள்ளார்.
- 1835ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **பிரான்சிஸ்கோ மென்டோன்சா** அடிகள் யாழ்நகர், நெடுந்தீவு மற்றும் சூழ உள்ள இடங்களையும் இலுப்பக்கடவை வரைக்கும் பராமரித்துள்ளார்.
- 1836ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்திலும் **பிரான்சிஸ்கோ மென்டோன்சா** அடிகள் அதே இடங்களைப் பராமரித்தார் அத்துடன் மேலதிகமாக இரணைதீவையும் பராமரித்தார்.
- 1837ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **மத்தேயுஸ் கேய்த்தானோ** அடிகள் யாழ்நகர், சூழவுள்ள இடங்கள் இலுப்பைக்கடவை வரைக்கும் பராமரித்தார்.

1838ம் ஆண்டு இலங்கை பாப்பரசரின் கீழ் நேரடியாக இயங்கும் அப்போஸ்தலிக்க மறைவட்டமாக்கப்பட்டு அதன் முதல் பரிபாலகராக இலங்கையின் ஒரட்டோரியன் சபை முதல்வராக விளங்கிய **விசெந்தே டொ றொசாறியோ** ஆயராக்கப்பட்டார்.

- இவர் 1838ம் ஆண்டு வழங்கிய முதல் நியமனத்தின்படி **அந்தோனியோ பிரான்சிஸ்கோ** அடிகள் யாழ்ப்பாணத்தையும் சூழவுள்ள இடங்களையும் பராமரிக்க நியமனம் பெற்றார்.
- 1839ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **அந்தோனியோ பிரான்சிஸ்கோ** அடிகள் தொடர்ந்து யாழ்ப்பாண நகரில் பணியாற்ற நியமனம் பெற்றார்.
- 1840ம் ஆண்டு ஆகஸ்ட் பணி நியமனத்தின்படி **ஜோஸ் பேட்றோ** அடிகள் யாழ் நகருக்கும் சுற்றுப்புறத்திற்கும் பணிநியமனம் பெற்றார்.

- 1841ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **அந்தோனியோ பிரான்சிஸ்கோ** அடிகள் யாழ்நகரில் பணியாற்ற நியமனம் பெற்றார்.
- 1842ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **பிரான்சிஸ்கோ டயஸ்** அடிகள் யாழ்ப்பாணம், சூழவுள்ள இடங்கள், இரணைதீவுக்கும் பணிநியமனம் பெற்றார்.
- 1843ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதிய இலங்கை அப்போஸ்தலிக்க பரிபாலகர் வழங்கிய நியமனத்தின்படி **ஜோவாக்கிம் கபிரியேல்** அடிகள் யாழ்ப்பாணம் சுற்றுப்புற இடங்கள் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களை பராமரிக்க நியமிக்கப்பட்டார்.

1844ம் ஆண்டு யாழ்ப்பாண நகர மறைத் தளத்தில் உள்ள 10 ஆலயங்களில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயமும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- 1844ம் ஆண்டு செப்டெம்பர் பணிநியமனத்தின்படி தொடர்ந்து **ஜோவாக்கிம் கபிரியேல்** அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் கௌதாரி முனையிலிருந்து இலுப்பைக்கடவை வரையுள்ள இடங்களைப் பராமரிக்கலானார்.
- 1845ம் ஆண்டு ஆகஸ்ட் பணிநியமனத்தின்படி **பிரான்சிஸ்கோ ஜோஸ்** அடிகள் யாழ்ப்பாணம், சூழவுள்ள இடங்கள் மற்றும் இரணைதீவு ஆகிய இடங்களைப் பராமரிக்கலானார்.
- 1846ம் ஆண்டு இலங்கை அப்போஸ்தலிக்க முதல்வருக்கு இணை உதவி ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டபின் அதேயாண்டு ஆகஸ்ட் மாதம் வழங்கப்பட்ட பணிநியமனத்தில் ஆயர் **ஒறாசியோ பெற்றக்கீனியும் செவரீனோ கொடீனோ** அடிகளும் யாழ்ப்பாணம் சூழ உள்ள இடங்களையும் நெடுந்தீவையும் பராமரிக்கலாயினர்.
- 1847ம் ஆண்டும் **செவரீனோ கொடீனோ** அடிகள் தொடர்ந்து அதேயிடத்தில் பணியாற்றினார். ஆயினும் அதேயாண்டு ஆகஸ்டில் வழங்கப்பட்ட பணிநியமனத்தின்படி **மிகுவேல் பிலிப்** அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் சுற்றுப்புற இடங்களைப் பராமரிக்க நியமனம் பெற்றார்.

அதேயாண்டு இலங்கை வடக்கு தெற்கு அல்லது கொழும்பு யாழ்ப்பாணம் என்று இரு அப்போஸ்தலிக்க மறைமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆயர் பெற்றக்கீனிக்கு யாழ்ப்பாணத்தில் பொறுப்பு வழங்கப்பட்டது.

1848ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் சபையினர் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மறைமாவட்டத்திற்கு ஆயர் **பெற்றக்கீனியின்** வேண்டுகோளுக் கிணங்க அச்சபையின் நிறுவுநர் புனித யூஜின் டி மசனட்டினால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

- 1848ம் ஆண்டு செப்டெம்பர் ஆயர் **பெற்றக்கீனியின்** நியமனத்தின்படி அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் குழுவின் தலைவராக வந்த **செமேரியா அ.ம.தி.** அடிகள் ஆயரின் செயலராகவும் அவேளையில் **கீற்றிங் அ.ம.தி.** அடிகளுடன் யாழ்ப்பாண நகர ஆலயங்களைப் பராமரிக்க நியமனம் பெற்றார். அடுத்த வருடமும் இந்த நியமனம் தொடர்ந்தது. 1849ம் ஆண்டு **கீற்றிங் அ.ம.தி.** க்குப்பதிலாக **லெபெஸ்கோ அ.ம.தி.** அடிகள் நியமனம் பெற்றார். நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம் இவர்களது பராமரிப்பில் இருந்தது.
- 1850ம் ஆண்டு தகவலில் யாழ்ப்பாண மறைத்தளத்தில் **செமேரியா அ.ம.தி. லெபெஸ்கோ அ.ம.தி.** அடிகளுடன் **சீசர் மோலா அ.ம.தி.** அடிகளாரும் பணியாற்றி வந்தனர். 1850ம் ஆண்டு செப்ரெம்பர் நியமனத்தின்படி **சீசர் மோலா அ.ம.தி.** அடிகள் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம் உட்பட அடைக்கலமாதா ஆலயம், நவாலி புனித பேதுருவானவர் ஆலயம் மற்றும் சுன்னாகத்திலுள்ள ஆலயத்தையும் பராமரிக்கலானார். 1851ம் ஆண்டும் 1852ம் ஆண்டும் அதே நியமனம் தொடர்ந்தது.
- 1853ம் ஆண்டு **செமேரியா அ.ம.தி.** அடிகளும் **கீற்றிங் அ.ம.தி.** அடிகளும் யாழ்ப்பாண மறைத் தளத்தைப் பராமரித்தனர். அதேயாண்டு செப்ரெம்பர் நியமனத்தின்படி **செமேரியா** அடிகள் **மவறா** அடிகள் **லக்கோம்** அடிகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் வரைக்கும் கரையோரமாயுள்ள ஆலயங்களைப் பராமரிக்கலாயினர். 1854ம் ஆண்டும் 1855ம் ஆண்டும் இதே நியமனம் தொடர்ந்தது.
- 1856ம் ஆண்டு **செமேரியா** அடிகள், **மவுறா** அடிகள், **பெல்லிசியர்** அடிகள் ஆகியோர் யாழ்ப்பாணம், சுற்றிலுமுள்ள இடங்கள், நெடுந்தீவு ஆகிய இடங்களைப் பராமரித்தனர். அதேயாண்டு **செமேரியா** அடிகள் ஆயர் பெற்றக்கீனிக்கு இணை உதவி ஆயராக நியமனம் பெற்றார்.
- 1857ம் ஆண்டு அமலமரிதியாகிகள் சபையின் யாழ்ப்பாண முதல் ஆயராக **செமேரியா** அடிகள் அப்போஸ்தலிக்க பரிபாலகராக பொறுப்பேற்றார். **மௌக்கல்** அடிகளும் **மவுறா** அடிகளும் யாழ்ப்பாணம் சுற்றிலுமுள்ள இடங்கள் நெடுந்தீவு ஆகிய இடங்களைப் பராமரித்தனர். அதேயாண்டு செப்ரெம்பர் மாதப்பணி நியமனத்தின்படி **மவுறா** அடிகளும் **பூசின்** அடிகளும் யாழ்ப்பாண மறைத்தளத்தில் பணியாற்றினர். இவ்விருவரும் தொடர்ந்து 1858ம் ஆண்டும் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினர்.

1860ம் ஆண்டு யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மாவட்டக் குறிப்புகளின் படி யாழ்ப்பாண நகர மறைத் தளத்திலுள்ள 6 ஆலயங்களும் (நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம் உட்பட பல்வேறு புனிதர்களின் பெயரில் உள்ளன. இவற்றின் வாரந்தோட் திருப்பலிகள் இடம்பெற்றன என்று எளிது கூறமுடியாது. ஆயினும் ஒவ்வொரு

ஆலயத்திலும் அந்தந்த ஆலயத் திருநாள் நாட்களில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவது வழக்கம். இந்த ஆலயத்தில் பணிபுரிய ஆயருக்கு உதவியாக 6 குருக்கள் இருந்தனர். இவ்வாலயங்களில் உள்ள கத்தோலிக்கரின் எண்ணிக்கை 7358 ஆகவுமிருந்தது. மூன்று குருக்கள் தான் இவ்வாலயங்களில் பணிகளுக்கென நியமிக்கப்பட்டிருந்தாலும் மற்ற மூவரும் இவர்களுக்குத் தேவையேற்படும் போது குறிப்பாக திருநாட் காலங்கள் உதவி வந்திருக்க வேண்டும்.

- 1861ம் ஆண்டு குறிப்புகளின்படி முன்னர் பணியாற்றிய **மவுறா** அடிகள் **மோலா** அடிகள், **புளூரீன்** அடிகள் ஆகினோர் தொடர்ந்து இங்கு பணியாற்றினர்.
- 1863ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் **மௌக்கல்** அடிகள், **மவுறா** அடிகள், **மோலா** அடிகள் **பொன்ஜீன்** அடிகள் ஆகிய நால்வர் பணியாற்றினர்.
- 1873ம் ஆண்டு ஆயர் **பொன்ஜீன்** 1868ல் அப்போஸ்தலிக்க பரிபாலகராக இருந்தபோது ஜோடெயில் (Fr. Joard'heil) அடிகள் யாழ் மாவட்ட பங்குத் தந்தையாக இருந்துள்ளார். இவரது பணியில் **புலிக்கானி** அடிகள் (குருமுதல்வர்) மற்றும் ஆயரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உதவியாக இருந்துள்ளார்கள் எனக் கொள்ளலாம்.
- 1883ம் ஆண்டு **பூசின்** அடிகள் யாழ்ப்பாணத்தில் பங்குத் தந்தையாக இருந்துள்ளார். மற்றும் குருமுதல்வர் **மவுறா** அடிகளும் நிர்வாகத்திலும், நிறுவனங்களிலும் உள்ள குருக்களும் அவருக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களில் வழிபாடுகள் நடத்த உதவியிருக்கலாம்.

நாவாந்துறை வதிவிடக் குருவைக் கொண்ட தனிப் பங்காதல்

நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலிருந்தே இயங்கி வந்த ஆலயமாக இருந்தாலும் குறிப்பாகப் 19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கரைக் கொண்டிருந்தாலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் ஒரு வதிவிடக் குருவானவரைக் கொண்ட பங்கானது எனலாம். இதற்குரிய துணை ஆலயங்களையும் பராமரித்து அந்தந்த ஆலயங்களிலும் ஆலயத் திருநாள் மற்றும் முக்கிய நாட்களில் வழிபாடுகளை நடத்த வேண்டியிருந்ததால் யாழ். நகரில் இருந்த புனித பத்திரீசியார் கல்லூரியில் பணியாற்றிய குருக்கள் தேவையேற்படும் போது வந்து உதவுவதுண்டு.

பங்குக்குரு தங்கும் புனித நீக்கிலார் ஆலய அறைவீடு தொடர்ந்து தங்குவதற்கு ஏற்புடையதாக இல்லாதிருந்தது. **லூயிஸ் அறுக்காஞ்சிப்பிள்ளை பூலோகசிங்கம்** எனும் மறை மாவட்டக்குரு பங்குத் தந்தையாக 1891ல் வந்தார். அப்போதும் ஆனைக் கோட்டையில் தான் இவர் தங்கியிருந்தார் 19ம் நூற்றாண்டின் இறுதி வருடங்களில் காற்றோட்டமுள்ள விசாலமான ஒரு அறைவீட்டுப் பணியை நாவாந்துறையில் ஆரம்பித்தார். இப்பணி 1905ம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது. 1898ம் ஆண்டு **நீக்கிலாப்பிள்ளை சந்தியாகோ அ.ம.தி.** இங்கு பங்குத் தந்தையாக

வந்தார். இவரும் ஆனைக்கோட்டையில் இருந்த வண்ணமே நாவாந்துறையையும் பராமரித்தார் இவரது காலத்தில் அருகிலுள்ள முஸ்லிம்களால் பல பிரச்சினைகளை இவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக கிறிஸ்தவ அடக்கச்அசடங்குகளை நடத்துவதில் பல முட்டுக் கட்டைகள் போடப்பட்டன. இங்கிருந்த கத்தோலிக்கரில் இரு முக்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தமையால் அவ்வப்போது பிரச்சினைகள் ஏற்பட்டன. இப்பிரச்சினைகளைத் தீர்க்க எடுத்த முயற்சிகள் தற்காலிகத் தீர்வையே தந்தன.

- 1902ம் ஆண்டு **வின்சென்ற் டோராற் அ.ம.தி.** அடிகள் பங்குத்தந்தையாக வந்தார். ஒருவருடம் தான் இவர் பங்குத்தந்தையாக இருந்தாலும் முஸ்லீம்களால் ஏற்பட்ட பிரச்சனைக்கு அரச சட்ட அமுலாக்கல் துறையினரின் துணைகொண்டு தீர்வு கண்டார்.
- 1904ம் ஆண்டு **செலஸ்ரின் மார்கரிற் அ.ம.தி.** அடிகள் வந்து நாவாந்துறையில் ஒரு வருடம் பங்குத்தந்தையாக பணியாற்றினார்.
- 1907ம் ஆண்டு பங்குத்தந்தையாக வந்த **வில்லியம் ஓவென் அ.ம.தி.** அடிகள் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்திற்கு மெருகூட்டினார். கூரைக்குத்தட்டையோடுகள் போடப்பட்டன. பீடத்திற்கு சீமெந்து நிலம் போடப்பட்டது. பல இடங்களிலிருந்தும் இளம் தாய்மார் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக புனித நீக்கிலாரின் பரிந்துரையை வேண்டி வருவது அதிகரித்தது.
- 1910ம் ஆண்டு பங்குத்தந்தையாக வந்த **பிரான்சுவா பிசியன் அ.ம.தி**. அடிகள் யாழ்ப்பாண நகருக்கு வெளியே முதல் முதலாக நாவாந்துறையில் புனித வின்சென்ற் டி போல் சபையை ஆரம்பித்தார்.

நாவாந்தறை பரலோக மாதா ஆலயம் தோற்றம் பெறல்

நாவாந்துறையில் முதல் ஆலயம் புனித நீக்கிலார் ஆலயம் ஆரம்பித்த காலம் முதல் 2ம் நூற்றாண்டுகளுக்கு மேலாக மூன்று முக்கிய சமூகங்கள் இவ்வாலயத்தில் சேர்ந்திருந்தனர். மூன்று ஆண்டுகளுக்கொரு தடவை ஒரு சமூகம் புனித நீக்கிலாரின் கூட்டைக் காவும் உரிமை பெற்றிருந்தனர். ஆலயம் மக்களின் மையமாக இருந்தது. எல்லா ஆலய செயற்பாடுகளிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு ஆன்மீகத்திலும் வளர்ந்து தமது விசுவாசத்தையும் பல நெருக்குவாரங்கள் மத்தியிலும் பேணிப்பாதுகாத்து வந்தனர். மூன்றில் ஒன்றாக தீவகத்திலிருந்து போர்த்துக்கேயர் காலத்தில் இங்கு கொண்டு வந்து குடியமர்த்தப்பட்ட குழுவினரும் ஒன்றிணைந்து செயற்படடனர். சில சிறிய உரிமை கொண்டாடாத சமூகங்களும் இணைந்திருந்தன.

காலப்போக்கில் ஆங்கிலேயர் ஆட்சியில் மத சுதந்திரம் வழங்கப்பட்டு பங்கு மக்கள் தங்களுடைய செயற்பாடுகளைக் குறிப்பாக மதம், ஆலயம் சம்பந்தமான செயற்பாடுகள், திருநாட்கள் போன்றவற்றையும் விரிவுபடுத்தி வந்தனர். ஒல்லாந்தர்

காலத்தில் இருந்தது போல ஆங்கிலேயர் காலத்திலும் குறிப்பாக 20 நூற்றாண்டு ஆரம்பம் வரை குருக்கள் பற்றாக்குறை இருந்து வந்தது. பின்னர் குருக்கள் பற்றாக்குறை சுதேச குருக்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க நீங்கத் தொடங்கியது. மற்றக் கிராம மக்களுடன் சேர்ந்து பராமரிக்கப்பட்ட நாவாந்துறை ஓர் தனிப்பங்கானது அப்போது படிப்படியாகச்சிறுகச்சிறுக ஆரம்பித்த இம் மூன்று சமூகங்களுக்கிடையிலான போட்டிகள் குறிப்பாக ஆலயத்திருநாள் வேளைகளில் ஏற்பட்ட போட்டிகள், யாருக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது என்பதில் ஏற்பட்ட முரண்பாடுகள் வளர்ந்து கொண்டிருந்தன. குருக்கள் இந்த சமூகங்களுக்கிடையே ஏற்பட்டு வந்த முரண்பாடுகளைச் சீர்ச்செய்ய முயன்றும் அம்முயற்சிகள் நீடித்த பயனைத் தரவில்லை என்று முன்னர் பார்த்தோம். பிற்பட்ட காலங்களில் போர்த்துக்கேயரால் குடியிருத்தப்பட்டவர்களின் பலம் குறைந்து போக இரு சமூகங்களுக்கிடையிலான உரிமைப் பிரச்சினையாக மாறியது.

இந்தப் பின்னணியில் தமக்குச் சமஉரிமை தரப்படவில்லையென்று கருதிய ஒரு சமூகத்தினர் 1936ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி தமது சமூகத்தினரின் சமய, சமூக செயற்பாடுகளில் தமது முழுமையான இடையூறில்லாத முயற்சிகளால் முன்னேற்றமடையவும் கலை, கலாச்சாரங்களை வளர்த்தெடுத்துப் பேணிக்காக்கவும் குறிப்பாகச் சொல்வதானால் சமய, சமூக, கல்வி, கலாச்சார விளையாட்டு அம்சங்களை அடங்கிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காண்பதனை நோக்காகக் கொண்டு சென் மேரீஸ் ஐக்கிய, வாலிப சன்மார்க்க விருத்திச் சங்கம் என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி செயற்படத் தொடங்கினர். இதில் இளைஞர்களே பெரும்பாலும் இருந்தமையால் ஆரம்பத்திலிருந்தே வினைத் திறனுடன் இவர்கள் இயங்கினர்.

புனித நீக்கிலார் ஆலயத்தில் அடிக்கடி இரு சமூகத்தாரிடையே ஏற்படும் குழப்ப நிலை தொடர் கதையாக இருந்து வந்ததால் இக்குழப்ப நிலையைத் தவிர்க்க தமக்கென்று ஒரு ஆயலம் அமைத்தால் என்ன என்ற வினாவை முன்வைத்தனர். இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த ஒரே ஆலயம் என்ற நிலைப்பாடு இரண்டு ஆலயம் என்று மாறுவதற்கு பல எதிர்ப்புக்கள் எழுந்தன. இரு புறத்திலிருந்தும் பல பெரியோர்களால் இது ஏற்றுக் கொள்ள முடியாத மாற்றமாக இருந்தது. எனினும் இளைஞரின் முயற்சிக்கு ஆரம்பத்திலிருந்து சில பெரியோர்கள் தமது ஆதரவை மறைமுகமாகத் தெரிவித்து வந்தனர். எனவே துணிந்தவர்களாக 1940ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் அன்னை மரியாளின் விண்ணேற்புத் திருநாளன்று கிராமத்தின் வடக்குப் பக்கமாக அமைந்திருந்த வயல்வெளியில் சிறிய ஓலைக்கொட்டில் ஒன்றைக் கோவிலாக அமைத்து தமது சன்மார்க்க சங்கப் பணிமனையில் இருந்த பரலோக மாதா சுரூபத்தை அங்கு வைத்தனர்.

இந்தக் கொட்டில் கோயில் அமைந்துள்ள நூறு ஏக்கர் வயற்காணி இந்த மக்களின் உழைப்பினால் இருந்து பெறப்பட்டு பெரியோர்களினால்

பொதுத்தேவைக்கென்று சேமித்து வைக்கப்பட்ட பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டிருந்தது. படிப்படியாக மக்கள் இங்கு வந்து தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் வந்து செபித்து அருள் பெற்றுச் சென்றனர். இவ்விடம் பிரபல்யம் அடைந்து வந்தமை பங்குமட்டத்தில் மட்டுமன்றி மறைமாவட்டத்திலும் பல்வேறு உணர்வலைகளை ஏற்படுத்தியது.

யாழ். திருச்சபையின் தலைமைப்பீடம் புதிய ஆலயம் உருவாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியை வரவேற்கவில்லையென்றே தோன்றுகின்றது யாழ். மறைமாவட்டத்தில் ஆலயங்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துக் கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் முன்னதாக குருக்கள் பற்றாக்குறை பற்றி முறையிட்ட போது திருச்சபைத் தலைமைப்பீடம் ஆலயங்களின் எண்ணிக்கையை அத்தியாவசிய தேவையில்லாமல் அதிகரிக்க வேண்டாம் என்ற அறிவுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் அப்போதைய ஆயரின் பணிப்பின்படி அன்னையின் திருச்சுரூபம் பாதுகாப்பற்ற நிலையில் ஒரு வயல்வெளிக் கொட்டிலில் இருப்பது நல்லதல்ல என்று காரணம் காட்டி சுரூபம் ஆயர் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டமை மக்களைச் சோக வெள்ளத்தில் ஆழ்த்தியது. உடனடியாகப் பெரியோர் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டினர். இச்சபை முதலாளிமார் சபை என்றும் அழைக்கப்பட்டது. இம்மக்கள் எல்லோரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆறு பேரைக் கொண்ட இச்சபை இயங்கத் துவங்கியது. இவர்கள் இளைஞர் சங்கத்தின் முடிவை ஏற்றுக்கொண்டு, கோவிலை அமைக்க வேண்டிய ஏற்பாடுகளை முன்னெடுக்க ஆயர் கியோமர் அ.ம.தி. ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடி அவரது அனுமதியைப் பெற்றனர். பின்னர் இந்தக் கொட்டில் கோவில் அமைந்துள்ள காணியின் மேற்குப் பக்கம் காரை நகர் வீதியை அண்டி ஆறு கற்தூண்களைக் நட்டுக் கோப்பிசமிட்டுச் சிறிய கோவில் ஒன்று தயாரானது.

இந்தச் செயற்பாடுகளுக்கு இக்காலத்தில் இங்கு பங்குத்தந்தையாக இருந்த **சூசைதாசன் நல்லையா அ.ம.தி** (1939-1942) அவர்களின் ஆலோசனையும் வழிகாட்டலும் உறுதுணையாயிருந்தன. அந்நாட்களில் இருந்த குருக்களில் சிறந்த கட்டிடக்கலை நிபுணரும், சிறந்த ஆசானுமாக விளங்கிய பிரெஞ்ச் நாட்டவரான அருட்திரு ஜீன் சியோன் (Jean Sion) அ.ம.தி. அவர்களின் வடிவமைப்பைக்கொண்டு தயாரிக்கப்பட்ட படத்தைக்கொண்டே இவ்வாலயம் கட்டப்படலாயிற்று. அந்நாட்களில் இந்தக்கட்டுமான இலங்கையில் இருந்த ஆலயக் கட்டுமானங்களில் ஒரு தனித்துவ சிறப்பைக் கொண்டதாகக் கருதப்பட்டது. சில்லாலை ஆலயம் மற்றும் கொழும்பு, மருதானை பற்றிமா ஆலயம் ஆகியவற்றையும் வடிவமைத்தவர் இவரே.

அதன் பின் பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற வில்லியம் யேசுதாசன் (1942 மே – 1943 செப்ரெம்பர்) அடிகளாரின் பெரு முயற்சியினால் (M.J. மரியாம்பிள்ளை உதவிப் பங்குத் தந்தையாக இருந்தார், 1942 – 1943.) பெரியதொரு கோவில் கட்டுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு 1942ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் யாழ் ஆயர் **J.A. கியோமார் அ.ம.தி** ஆண்டகையினால் அடிக்கல் நாட்டப்பட்டது முன்னதாக அகற்றப்பட்டிருந்த திருச்சொரூபம் மீண்டும் கொண்டுவரப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட சிறு கோயிலில் வைக்கப்பட்டு பக்திப் பரவசத்துடன் திருநாள் கொண்டாடப்பட்டு திருச்சொரூபப் பவனியும் இடம் பெற்றது.

V.R. தார்சீசியஸ் அ.ம.தி (1943 செப்ரெம்பர் – 1953 யூலை வரை) அடிகள் தொடர்ந்து முன்னதாக இங்கு அமைக்கப்பட்ட குருமனையில் தங்கியிருந்து ஆலயக் கட்டுமானப் பணிமுடியும் வரை பணியை மேற்பார்வை செய்ய வேண்டுமென்று மக்கள் விரும்பினர். இருசமூகத்தினரிடையே ஏற்படும் முரண்பாடுகளைக் குறைப்பதற்கு இப்புதிய ஆலயம் உதவும் என்று இவர் நம்பியதால் ஆலயக் கட்டுமானப் பணிக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். இவரது பணிக் காலத்தில் ஆலயக் கட்டுமானப்பணி நிறைவுறாத போதும் இவரைத் தொடர்ந்து வந்த குருக்களின் பணிக்காலத்தில் கட்டுமானப்பணி தொடரப்பட்டது.

- 1953-1955 வரை **அல்பிரட் உத்தீன் அ.ம.தி.** அடிகள் பணியாற்றினார்.
- 1955ம் ஆண்டு **டீவிற் அ.ம.தி.** அடிகள் பணியாற்றினார்.
- 1955-1961 வரை **A. சார்வே அ.ம.தி.** அடிகள் பணியாற்றினார் இவரது காலத்தில் ஆலய பீடப்பகுதி வளைவுகள் போடப்பட்டு மற்றப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.
- 1961-1965 வரை **Y. கரோவ் அ.ம.தி.** அடிகள் காலத்தில் ஆலயப்பணியின் முக்கால்வாசி நிறைவுக்கு வந்தது. கோப்பிசமிட்டு கூரை வேலைகளும் முடிந்து வழிபாடுகளும் இடம்பெறலாயின.
- 1965ம் ஆண்டு **கிங்ஸ்லி சுவாம்பிள்ளை** அடிகள் (தற்போது ஆயர்).
- 1966-1967 வரை **பெனற் கொன்ஸ்ரன்ரைன்** அடிகள்.
- 1967ம் ஆண்டு **மகேந்திரன் இராசநாயகம்** அடிகள்.
- 1967-1972 வரை **மேரி ஜோசப்** அடிகள். இவரது காலத்தில் ஆலயத்தின் பூச்சுவேலைகள், நிலமிழுத்தல், மின்விளக்குகள் அமைத்தல், கதவு, யன்னல், கண்ணாடி அமைத்தல், தீந்தை பூசுதல் ஆகியவை இடம்பெற்றன. பாரிய பாடுபட்ட சுரூபமும் வேறு பெரிய சுரூபங்களும் வைக்கப்பட்டன.
- 1974-1977 வரை பங்குத்தந்தையாக இருந்த **A.P. தேவசகாயம்** அடிகள் காலத்தில் ஆலயத்தைச்சூழவுள்ள முழுவழவையும் சுற்றி மதில் கட்டப்பட்டது.
- 1977 – 1981 வரை பங்குத்தந்தையாக இருந்த **R..G.M நேசநாயகம்** அடிகள் காலத்தில் 1978இல் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டதோடு

அருட்தந்தை **A. ஸ்ரீபன் மரியதாஸ்** அவர்களின் முதற் திருப்பலி 2.5.1980இல் இடம்பெற்றது.

- 1981-1987 வரை பங்குத்தந்தையாகவிருந்த **P.M. இம்மானுவேல்** அடிகள் காலத்தில் ஆலத்தின் முன் போர்ட்டிக்கோ மண்டபம் கட்டப்பட்டது. அருட்தந்தை **செபஸ்ரி நீக்கிலஸ் அ.ம.தி.** அடிகளின் முதல் திருப்பலி இடம்பெற்றது.
- 1988-1990 வரை பங்குத்தந்தையாக இருந்த **சார்ள்ஸ் செந்தில்வேல் அ.ம.தி.** அடிகள் காலத்தில் சேதமடைந்திருந்த ஆலயம் திருத்தப்பட்டு, பீடப்பகுதி (டோம்) கூரைக்கு உள்சீற்போடப்பட்டு, போட்டிக்கோப்பகுதிக்கும் உள்சீற் அடிக்கப்பட்டது.
- 1990-1993 வரை பங்குத்தந்தையாக இருந்த **பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி.** அவர்கள் சேதாரமடைந்திருந்த ஆலயப்பீடப்பகுதியும் பின்அறையும் புதிய சீற் போடப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டன.

குறிப்பாக அண்மைக்காலத்தில் ஆலயம், ஆலயம் சம்பந்தமான பணிகள், திருத்தவேலைகளுக்கு இப்பங்கின் புலம்பெயர் பங்கு மக்களின் பங்களிப்புக் கணிசமாக இருந்தாலும் ஆரம்பகால முக்கிய கட்டுமானப்பணியில் இறைவனின் அருளால் அன்னை மரியாளின் பரிந்துரையால் திருச்சபைத்தலைமைப் பீடம் மற்றும் பங்கில் பணியாற்றிய குருக்களின் வழிகாட்டுதல்களுடன் சிறுவர், பெரியோர், இளையோர் எல்லோருடைய உடல் உழைப்பும், சிந்திய வியர்வையும், தம்மை ஒறுத்து வழங்கிய நன்கொடைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனால்தான் இறையருளாலும் எமது உழைப்பாலும் உருவான ஆலயம் என்று பெருமைப்படக் கூடியதாயிருக்கிறது.

நிறைவாக

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயம் அத்திவாரம் இடப்பட்டதிலிருந்து இவ்வருடம் (2017) ஆகஸ்ட் 15ம் நாள் 75 ஆண்டுகளை நிறைவு செய்தாலும் நாவாந்துறையில் கத்தோலிக்க சமயம் பரவத்துவங்கி 400 வருடங்களை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாவாந்துறையில் உள்ள குறுகிய நிலப்பரப்பில் பின்புலத்தில் முஸ்லீம் மக்களின் குடியிருப்பும் இன்னுமொரு பக்கத்தில் வில்லூன்றிப்பிள்ளையார் கோவில் ஆகியவற்றுக்கிடைப்பட்ட பகுதியில் மிகவும் அடர்த்தியாக 100% கத்தோலிக்கரைக் கொண்ட பிரதேசமாக உள்ளது. போர்த்துக்கேயர் காலத்திலிருந்து நாவாந்துறை சில தனித்துவ சிறப்புக்களை கொண்டிருந்தமை கத்தோலிக்கர் இங்கு அடர்த்தியாகவும் விசுவாசத்தில் உறுதியுடன் வாழவும் வழிவகுத்ததெனலாம்.

போர்த்துக்கேயர் காலத்தில் ஊர்காவற்துறையில் வந்திறங்கும் போர்த்துக் கேயர் சிறு படகுகளில் அங்கிருந்து நாவாந்துறை வந்து யாழ்நகருக்கும் குடாநாட்டின் பிற பகுதிகளுக்கும் செல்வதும் பின்னர் நாவாந்துறை ஊடாக ஊர்காவற்துறை செல்வதும், தமது உதவிக்காக ஊர்காவற்துறையிலிருந்து சில குடிமக்களை நாவாந்துறையில் கொணர்ந்து குடியமர்த்தியமையாலும் இம்மக்கள் கத்தோலிக்கருக்கு உதவியிருக்க வேண்டும். அத்துடன் இவ்வூர் நகருக்கருகாமையில் இருந்தமையால் நகரில் உள்ள எல்லாத் துறவற சபைகளின் தலைமைப்பீடங்கள், பாடசாலைகள், அங்குள்ள குருக்களின் பராமரிப்பு எல்லாம் நாவாந்துறை மக்களுக்குத் தாராளமாகக் கிடைத்திருக்கவேண்டும்.

ஒல்லாந்தர் காலத்தில் முதல் 30 வருடங்கள் (1658-1687) குடாநாட்டின் மற்ற இடங்களில் இருந்த கத்தோலிக்கர் குருக்களின் பராமரிப்பு, திருப்பலி, திருவருட் சாதனங்கள் இன்றி இருந்தது போன்று நாவாந்துறை மக்களும் இருந்தார்கள். புனித ஜோசப் வாஸ் 1887 வந்து பின் 1688ல் இருந்து சில்லாலையைத் தலைமைப் பீடமாகக் கொண்டு பணியாற்றியகாலம் முதல் ஒல்லாந்தரின் இறுதிக்காலம் வரை (1796) கத்தோலிக்க சமயத்தைப் பொறுத்தளவில் நாவாந்துறைக்கிருந்த கேந்திர முக்கியத்துவம் காரணமாக வடபகுதியிலிருந்த மற்றக் கத்தோலிக்கரிலும் பார்க்க குருக்களின் பராமரிப்பும், திருப்பலி, திருவருட்சாதனங்களால் பயன் பெறும் வாய்ப்புக்களும் இம்மக்களுக்குக் கூடுதலாகவேயிருந்தன என்று பார்த்தோம். பண்ணை – ஊர்காவற்துறை வீதி அமைக்கப்பட்ட முதல் புனித யோசவ் வாஸ் அடிகள் ஏனைய மக்களுடன் குருசடித் தீவு வழியாகவே தீவுப் பகுதிகளுக்குச் சென்று வந்திருப்பார் என்றும், வழமையாகத் தான் செல்லும் இடங்களில் சிலுவை நாட்டும் பழக்கத்தைக் கொண்டிருந்த படியால் இத்தீவில் நாவாய்களுக்காகக் காத்திருக்கையில் சிலுவையை நாட்டிச் செபித்திருக்கலாம் என்றும் எண்ண இடமுண்டு.

ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலம் முடிந்து ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக 19ம் நூற்றாண்டு முடிவு வரைக்கும் குருக்களின் பற்றாக்குறை இருந்தபோதும் அவர்களுடைய எண்ணிக்கை கூடிக்குறைந்தமைக்கேற்ப அவர்களுடைய பராமரிப்புப் பிரதேசமும் கூடிக் குறைந்தது. உ+ம் சில வேளைகளில் குடாநாடு முழுவதையும் பராமரித்த குருவின் பராமரிப்பில் நாவாந்துறை இருந்தது, சிலவேளைகளில் யாழ்நகரையும் அண்டியுள்ள பகுதிகளையும் பராமரித்த குருவின் பராமரிப்பிலும் இன்னும் சில சர்ந்தப்பங்களில் தீவகப் பகுதியையும் வலிகாம மேற்குப் பகுதியையும் பராமரித்த குருவின் பராமரிப்பிலும் நவாந்துறை வந்தது. எப்படியிருந்தாலும் குறிப்பாக ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் யாழ் நகரில் ஆயர் இல்லத்திலும் புனித பத்திரீசியார் கல்லூரி மற்றும் கத்தோலிக்க நிறுவனங்களிலும் கணிசமான குருக்கள் இருந்தமையால் நாவாந்துறை மக்களுக்குரிய ஆன்மீக பராமரிப்புக்கு குறைவிருக்கவில்லையென்று தான் சொல்ல வேண்டும்.

பக்திச் சபைகள்

திருப்பாலர் சபை

பீடப்பணியாளர் சபை

மறையாசிரியர் குழு

திருவழிபாட்டுக் குழு

திருப் பொருளி அறை, ஒலி, ஒளி பொறுப்பாளர்கள்

ஆலய அருட்பணிச் சபை

திரு இசைக் குழு

வின்சன் டி போல்

மரியாயின் சேனை (மகா அன்புக்குப் பாத்திரமான மாதா)

மரியாயின் சேனை (பரலோகத்திற்கு ஆரோகணமான மாதா



இளைஞர் மன்றம்

மகளிர் மன்றம்

றோஸ் வேர்ஜினி

நல்லாயன் பொது நிலையினர்

நல்லாயன் அருட்சகோதரிகள் அன்றும் இன்றும்

1974.01.11ல் நாவாந்துறைப் பங்கில் நல்லாயன் சபையினர் பணி தொடங்கியபோது பணியாற்றிய அருட்சகோதரி மேரி கிறிசோஸ்றம் பெரேரா, பங்குத்தந்தை பெனற் கொன்ஸ்ரன்ரையின், அருட்சகோதரிகள் அசும்தா மரியா முருகுப்பிள்ளை, மேரி பாஸ்கல் பெர்னாண்டோ, மேரி பெற்றில்டா பெனார்ண்டோ, மேரி அஞ்சலா பெர்னாண்டோ,

தற்போது நாவாந்துறைப் பங்கில் நல்லாயன் சபையில் பணியாற்றும் அருட்சகோதரிகள் மரியா அல்போனசா பெர்னாண்டோ, மேரி கமலா சிறிநாதன், மேரி சுகிர்தா குரூஸ்

வலயங்கள்

முதலாம் வலயம் - பனித அசிசியார்

இரண்டாம் வலயம் - புனித இஞ்ஞாசியார்

மூன்றாம் வலயம் - புனித யஸ்ரின்

நான்காம் வலயம் - புனித கென்றி

ஐந்தாம் வலயம் - புனித சூசையப்பர்

ஆறாம் வலயம் - புனித அகுஸ்தினார்

ஏழாம் வலயம் - புனித இயூஜீன்

எட்டாம் வலயம் - புனித கிறகோரியார்

முதியோர்

யூபிலிக் குழுக்கள்

செயற்பாட்டுக் குழு

நிதிக் குழு

மலர்க்குழு

கலைக் குழு

மறைக்கல்விக் குழு

வழிபாட்டுக் குழு

கட்டடக் குழு

கல்விக் குழு

விளையாட்டுக்குழு

சமூக அமைப்புக்கள்

சனசமூக நிலையத்தினர்

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர்

கிராமிய கடற்றொழில் சங்கத்தினர்

மரியே
வாழ்க!

AVE MARIA

INRI

ஒல்லாந்தர் காலத்திலும் குருக்கள் அடிக்கடி சில வேளைகளில் வருடத்திற்கொருமுறை அல்லது இருமுறை முதலாக மாற்றவேண்டியிருந்தது. அதுபோலவே ஆங்கிலேயர் காலத்தில் 19ம் நூற்றாண்டின் இறுதிவரை குருக்களை 2 வருடத்திற்கொருமுறை அல்லது 3 வருடத்திற்கொருமுறை மாற்றவேண்டியிருந்தது என ஆயர் பொன்ஜீன் அவர்கள் 1871ம் ஆண்டு குறிப்பிட்டுள்ளார். ஆயினும் காரணங்கள் வித்தியாசமானவை. ஒல்லாந்தர் காலத்தில் குருக்களின் பாதுகாப்புக்காக அவர்கள் அடிக்கடி ஒரு பயண நிலையிலேயே இருக்க வேண்டியிருந்தது. இடையிடையே தற்காலிகமாக நிலவிய பாதுகாப்பான காலப்பகுதியில் சற்றுக்கூடுதலான காலம் (ஒருவருடத்திற்கு மேற்படாதளவுக்கு) பணிபுரியக் கூடியதாயிருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் குறிப்பாக 19ம் நூற்றாண்டு முடிவு வரைக்கும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பணியாற்றிய குருக்கள் அனேகமாக ஐரோப்பியர்களாகவும் அமல மரித்தியாகிகள் சபையைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர். மன்னார், மாதோட்டம், கல்பிட்டி, வன்னி, முல்லைத்தீவு ஆகிய மறைத்தளங்கள் உடல் ஆரோக்கியத்திற் கேற்றதல்லாததாகவும் குறிப்பாக ஐரோப்பிய குருக்களால் சமாளிக்க முடியாத சுவாத்தியமுள்ள, மருத்துவ வசதிகள் போதுமானளவு இல்லாத இடங்களாகவு மிருந்தன. துறவற சபையைச் சேர்ந்த இங்குள்ள குருக்கள் குழும வாழ்வில்லாது நீண்ட காலம் இருப்பது போன்ற பல்வேறு காரணிகளால் இவர்களது உடல், உள பாதிப்புக்கள் சீரமைக்க முடியாதளவுக்கு மோசமடைய வாய்ப்புண்டு என ஆயர் பொன்ஜீன் ஆண்டகை குறிப்பிடுகிறார். எனவே குருக்களை 2, 3 வருடங்களுக் கொருமுறை மாற்றப்படுவதால் கடினமான மறைத்தளங்கள் மட்டுமல்ல குடா நாட்டிலுள்ள ஓரளவுக்கு இருப்பிட வசதி, மருத்துவ வசதி, குழும வாழ்வுக்கான வசதியுள்ள யாழ் குடாநாட்டு மறைத்தளங்களும் பாதிப்புக்குள்ளாயின என்று தான் சொல்ல வேண்டும்.

19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலிருந்து சுதேச குருக்களின் வருகை (ஒரு சில மறைமாவட்டக் குருக்களும், பல அமலமரித்தியாகிகள் சபைக்குருக்களதும் வருகையுடன்) மறைமாவட்டப் பணிக்கள நிலைமைகள் மாற்றமடையத் துவங்கின. குருக்கள் ஒரு பங்கின் பணியாற்றும் பணிக் காலம் அதிகரித்துக் காணப்பட்டது. நாவாந்துறையிலும் 19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலிருந்த 20 நூற்றாண்டு நடுப்பகுதி வரைக்கும் ஐரோப்பிய குருக்களுடன் சுதேச குருக்களும் பங்கில் அரைக்கரைவாசியாக இருந்து அரும்பணியாற்றி வந்தனர்.

வரலாற்றில் அதிலும் குறிப்பாகத் திருச்சபை வரலாற்றில் கலாபனைகளும், நெருக்குவாரங்களும், மற்றும் ஆட்சியாளரின் நெருக்கடிகளும் திருச்சபையில் இருக்கும் போது கத்தோலிக்கர் விசுவாசத்தில் உறுதியாக இருந்து ஒற்றுமையாக இந்நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வழிபாடுகளில் அச்சமின்றி ஈடுபட்டு திருவருட்சாதனங்களையும் பயனுடன் பெறுவது வழக்கமாகவிருந்தது. அது போலவே 16, 17ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர் காலத்தில் வந்த பல்வேறு துறவற சபைக் குருக்கள் வழியாகப் பெற்ற விசுவாசத்தை ஒல்லாந்தரால் கட்டவிழ்த்து விடப்பட்ட கலாபனைகள் மத்தியிலும் குறிப்பாக 17ம் நூற்றாண்டில் பிற்பகுதியில்

வந்த புனித ஜோசப்வாஸ் அடிகளதும் அவரது ஒரட்டோரியன் சபைக் குருக்களினதும் வீரம் செறிந்த பணியினால் தமது விசுவாசத்தையும் காத்து வளர்த்தனர். திருவழிபாடுகள், திருவருட்சாதனங்களில் ஈடுபாட்டுடன் பங்கேற்றனர். தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் காலத்தில் கிடைத்த (19ம் நூற்றாண்டின் துவக்கத்தில் மத சுதந்திரத்திலும் 19 நூற்றாண்டின் இறுதிவரை குருக்கள் பற்றாக்குறை போதிய மறையறிவின்மை ஆகிய பிரச்சினைகளிருந்தாலும் நாவாந்துறை மக்கள் தமது பங்கு என்ற உணர்வுடன் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாகவும், வழிபாடுகளை அனுகுகின்றவர்களாகவும் இருந்தனர். ஆயினும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து குருக்களின் பற்றாக்குறை படிப்படியாக நீங்க ஆலயம் மேலும் அழகாகப் புனரமைப்புச் செய்யப்பட, திருநாட்கள், அதற்குரிய ஆயத்த நவநாட்கள் ஆகியவை பல்வேறு கொண்டாட்டங்கள், வெளியாடம்பரங்களுடன் முன்னெடுக்கப்பட, இங்குள்ள முக்கிய சமூகங்களிடையே போட்டிகள், முன்னுரிமை, யாருக்கென்பதில் மோதல்கள் போன்றவை தலைதூக்கத் தொடங்கின. ஒற்றுமைப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கைகூடாமல் போகவே இறுதியில் ஒரு சாரார் பிரிந்து சென்று தமக்கென ஒரு ஆலயத்தை ஆரம்பிக்க 1940களில் முற்பட்டனர். இதுதான் சிறந்த முடிவாக திருச்சபைத் தலைமை கருதாவிட்டாலும் புதியதோர் ஆலயம் சில விரும்பத்தகாத நற்செய்தி விழுமியங்களை உதாசீனம் செய்யும் செயற்பாடுகளை ஓரளவுக்காவது தடுக்க உதவலாம் என்ற நோக்குடன் அனுமதி வழங்கியது. வில்லியம் யேசுதாசன் அ.ம.தி அடிகளின் கருத்துப்படி புதிய ஆலயம் முரண்பாடுகளைக் குறைக்க உதவியிருக்கலாம். ஆயினும் நற்செய்தி மதிப்பீடுகளின் படியும் அவ்வப்போது யாழ் மறைமாவட்ட மேய்ப்புப் பணி பணித்தீர்மானங்களின் படியும் மக்களிடையே ஆலயத்துக்குள்ளேயும், வெளியேயும் நட்புறவையும், புரிந்துணர்வையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும் கூட்டு முயற்சிகளையும் வளர்த்தெடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும்போது இவை இன்னும் வேகமாகவும் அர்ப்பண சிந்தையுடனும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்று உணரப்படுகிறது. இப்பணி நாவாந்துறை மண்ணில் ஓப்பீட்டளவில் குடாநாட்டில் அனேகமான மற்ற இடங்களிலும் பார்க்கக் கூடுதலாக கால் பதித்துப் பணியாற்றிய புனித ஜோசப் வாஸ் எங்கள் மூதாதையரின் விசுவாசத்தை அழியவிடாது காக்க அனுப்பிய இறைவனுக்கும் பரலோக அன்னையின் பரிந்துரைக்கும் நாம் வழங்கும் நன்றிக்கடனாகும்.

அருட்பணி **S.V.B. மங்களராஜா**
புனித பிரன்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயமும் மக்களும்

- யோ.பிரான்சிஸ்

மக்களின் கலைத்திறனும் புலமைத்துவமும்

மேலும் இந்த மக்கள் மத்தியில் இயல்பாகக் கவிபாடும் திறனமைந்த புலமைத்துவம் வாய்ந்த புலவர்களும் இருந்திருக்கிறார்கள். இவர்களது திறமைமிக்க படைப்புக்கள் பல இருந்திருக்கின்றன. இவர்களது இந்தக் கலைப்படைப்புக்களை வெளிக்கொணர்ந்து நூல் வடிவாக்கும் தன்மை இல்லாது இவர்களது வறுமைநிலை தடையாக இருந்ததால் குடத்துள் விளக்காக இவர்களது திறன் மங்கி மறைந்துவிட்டது. இவர்களது படைப்புக்கள் சிலவற்றை வேறு சிலர் தங்களது பெயரில் வெளியிட்டுள்ளதாக எமது பெரியார்கள் கூறுகிறார்கள். என்றாலும் இதற்கு எம்மால் ஆதாரம் கூற முடியாத நிலையில் உள்ளது.

இவர்களது கலைப்படைப்புக்கள் சில இங்கு மேடையில் நடிக்கப்பட்டுள்ள தென்பதை இங்கு குறிப்பிட வேண்டும். மேலும் பிந்திய காலப்பகுதியில் இங்குள்ள எமது இளைஞர்களால் உருவாக்கப்பட்ட பல சமய சமூக நாடகங்களும் நடிக்கப்பட்டு பாராட்டப்பட்டன. இவற்றில் நூற்றுக்கணக்கானோர் இளைஞர், யுவதிகளை உள்ளடக்கி 1978ம் ஆண்டில் பங்குத்தந்தையாக இருந்த வண. R.M.G. நேசநாயகம் அவர்கள் தலைமையில் N.M. பாலச்சந்திரனின் நெறியாள்கையில் இறைவனின் படைப்பு உட்பட யேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு வரையான முழுமையான சரித்திரம் பரபாஸ் என்ற பெயரில் மிகப்பெரிய மேடை அமைத்து சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டது. இரண்டு நாள்கள் இக்காட்சியை பல்லாயிரக்கணக்கானோர் கண்டுகளித்துப் பாராட்டிச் சென்றனர். இதனை மறக்கமுடியாத சாதனையென்று மக்கள் இன்றும் பேசிக்கொள்கின்றனர்.

விளையாட்டுத் துறையும் இளைஞர் வளர்ச்சியும்

விளையாட்டுத் துறையில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் காட்டிவரும் ஆர்வமும் பாராட்டுக்குரியது. இக்கழகம் பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து வெற்றி விருதுகளைப் பெற்று யாழ் மாவட்டத்திலே சிறந்த கழகங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இவற்றுக்கெல்லாம் இவர்களது ஒற்றுமையும், துணிந்த மனநிலையும் அன்னை பரலோகத்தாயின் அருள்மிகு வரங்களும் அவளது பாதுகாப்புமே காரணங்களாகும். நன்றிப் பெருக்கோடு அன்னையின் திருவடிகளை வணங்கி அவளது திருப்பாதக் கமலங்களில் எம்மைக் காணிக்கையாக்குகிறோம்.

இவ்வாலயம் உருவாக மக்கள் பட்ட கஷ்டங்கள்

எமது மக்கள் காற்றையும் கடலையும் எதிர்த்துப் புறங்கண்டு கடலின் அடியிலே அகழ்ந்தெடுத்த முருகைக் கற்களைக் கலத்திலே ஏற்றிவந்து அந்தக் கற்களைத் தீயிட்டுச் சூளைசெய்து சுண்ணாம்பாக்கி அத்தோடு சீமெந்தும் மணலும் கலந்து கற்றாளைச் சாற்றில் பனை வெல்லம் கலந்த கரைசலிலே கலவை சேர்த்துப் பலமாக அத்திவாரமிட்டதையும், அந்த அத்திவாரத்தை மண்போட்டு நிரப்புவதற்கு ஆலயத்தின் வடக்குப் பக்கம் ஓர் குளம் வெட்டி அக்குளத்திலிருந்து மண்ணெடுத்துச் தலைச்சுமையாக ஆண் பெண் இருபாலாரும் சிறுவர் சிறுமியரும் கூட ஐந்தடி உயரமான ஆலய அத்திவாரத்தையும் குருமனை அத்திவாரத்தையும் நிரப்பியுள்ளதையும், இதற்காகத் தமது ஒத்துழைப்பைக் கொடுத்துத் தியாகம் புரிந்ததையும் அவர்களின் தியாகப் பணியால் உருவான அன்னையின் ஆலயத்தின் ஒவ்வொரு கல்லும் பேசும் திறனமைந்தால் அந்த உன்னத வரலாற்றைக் கதை கதையாகக் கூறும்.

இந்த வல்லமை கொண்டோரின் தியாகப்பணியின் வரலாற்றை எழுத்துருவில் விளக்க முடியாவிட்டாலும் 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி சொன்ற மகற்கு' என்ற வள்ளுவப் பெருந்தகை வார்த்தைக்கொப்ப இப்படியொரு கலைப் பொக்கிஷத்தை உருவாக்கி எமக்குத் தந்த பெரியார்களுக்கு நன்றியாக இச்சிறிய முயற்சியைச் செய்கிறோம். இம்முயற்சியின் செயல் வடிவத்தில் குறைகள் தவறுகள் ஏற்படலாம். அவற்றையெல்லாம் நல்ல உள்ளத்தோடு மன்னித்து நிறைவையேற்று மகிழ்வீர்களென நம்பி பணிவோடு தொடர்கிறோம்.

யாழ் மறைவட்டத்திலேயே புதிய உருவ ஆலயம்

எமது ஈழத்திரு நாட்டிலே எத்தனையோ கத்தோலிக்க தேவாலயங்கள் அழகொளிரக் காட்சியளிப்பதைக் காண்கிறோம். ஆனால் எமது அன்னையின் இந்த ஆலயம் உருவ அமைப்பில் மிகவும் மாறுபட்டதாக விளங்குவதைக் காணலாம். சிறந்த சிற்ப ஆசானும் கட்டிடக் கலை நிபுணருமான அருள்திரு. சியோன் அ.ம.தி. அவர்களின் ஆலோசனையின்படி அவரால் செய்து கொடுக்கப்பட்ட வடிவமைப்பைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் உள் வளைவுகள், வளைவுகளை இணைக்கும் நீள் தூண்கள் மிகவும் பலமாகவும் பாதுகாப்பாகவும் அமைந்துள்ளன. அவை ஒரு பெரிய வளைவையும் அதன் இருபுறமும் சிறிய வளைவுகளையும் கொண்டதாக குருசு வடிவத்தில் அமைந்திருப்பது கட்டிடக் கலைக்கே ஒரு புதுமையைத் தோற்றுவிப்பதாக அமைந்துள்ளது. மேலும் இவ்வாலயத்தின் பக்கச் சுவர்கள் ஆறு அங்குலக் கொங்கிறீட் கற்களைக் கொண்டு மூன்றங்குல இடைவெளி சுவரின் நடுவாக விட்டு குறுக்காகவும் கற்கள் பொருத்தி ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெறுகின்ற வேளைகளில் வெளியிலிருந்து வருகிற வேறு சத்தங்களோ சந்தடிகளோ ஆலயத்தின் உட்புகுந்து குழப்பாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் முகப்புத்தோற்றம் சாதாரணமாக அமைந்திருப்பதும் இடது பக்கம் மணிக்கூட்டு கோபுரமாக 60 அடி உயரத்திற்கு மேல் அமைந்திருப்பதும் ஒரு மாறுபட்ட வடிவத்தைக் காட்டுவதாக இருப்பதையும் நாம் காணலாம்.

இறையழைத்தலும், துறவிகளும், பணிகளும்

நாநூறு வருடங்களைத் தாண்டிய கத்தோலிக்கர் என்று சொன்னபோதிலும் எம் மத்தியிலிருந்து இறையழைத்தல்கள், பலகாலம் இல்லாதிருந்தது பெரும் குறையாகவே இருந்து வந்தது. இருப்பினும் 1912ஆம் ஆண்டிலேயே தங்களை துறவற பணிக்கு அர்ப்பணித்த அருட்சகோதரர் பீலிக்ஸ். அருட்சகோதரர் தொம்மையுவாம், அருட்சகோதரர் அலோசியஸ் ஆகியோர் பிரான்சிஸ்கன் சபையிலும் அருட்சகோதரர் மாற்கு அமிர்தநாதர் செபமாலை தாசர் சபையிலும் தங்களை இணைத்து பல தசாப்தங்களாக இறைபணியாற்றியுள்ளர். எமது பாதுகாவலியாம் புனித அன்னை மரியின் வேண்டுதலினாலும் இறைவன் எம்மக்களின் மன்றாட்டைக் கேட்டருளினார். இதன் பயனாக செபமாலைத்தாசர் சபையிலிருந்த எமது மூத்த துறவி அருட்செல்வர் மா. அமிர்தநாதர் அவர்களின் முயற்சியின் காரணமாக அருட்தந்தை ஸ்ரீபன் மரியதாஸ் (செபமாலைத்தாசர் சபை) அவர்கள் எமது பங்கின் முதற்கனியாக, எமது மூத்த குருவாக 01.05.1980ல் திருநிலைப்படுத்தப்பட்டார். இது எமக்கு இறைவன் தந்த கொடைகளிலெல்லாம் பெருங்கொடையாக எண்ணி மகிழ்கிறோம்.

இதனைத் தொடர்ந்து 19.06.1986இல் இரண்டாவது குருமணியாக எம்மத்தியிலிருந்து அருட்திரு செபஸ்தி நீக்கிலஸ் அ.ம.தி. இறைவன் திருமுன் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர்களை நாம் குருவாக அடைந்தது எமக்குப் பெருமையும் மகிழ்ச்சியுமாகும். இன்னும் எமது பங்கில் நல்லாயன் சபைக் கன்னியர்கள் பணியாற்றிவருவதும் இவர்களது மதிப்பிடற்கரிய சேவையால் வழிபாடுகள் சிறப்புற்று விளங்குவதும் இவர்களது முன்மாதிரியான பணியால் எமது பிள்ளைகள் பலர் இவர்களது சபையில் சேர்ந்து அருட்சகோதரிகளாக இறை பணியோடு சமூகப் பணிகளிலும் சிறப்புற்று விளங்குவதும் பெருமைக்குரியதே. மேலும் இரட்சகரின் கன்னியர் சபையிலும் பலர் அருட்சகோதரிகளாக இறை பணியாற்றி வருவதும் குறிப்பிட வேண்டும். அமலமரி பரித்தியாகிகள் சபையில் எமது பிள்ளைகள் சிலர் குருத்துவக் கல்வியைத் தொடர்ந்து வருகிறார்கள்.

யுத்த அனர்த்தங்களும் சேதங்களும்

1987 – 1989 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத அனர்த்தங்களாலும் வான் தாக்குதல், செல் குண்டுவீச்சு போன்ற பயங்கர நெருக்கிடைகளின் காரணமாகவும் எமது அன்னையின் ஆலயம் பெரும் சேதத்திற்குள்ளாகியது. இந்த சேதங்களையும் சிதைவுகளையும் எண்ணி நாம் பட்ட வேதனை துன்பங்கள் கொஞ்சமன்று. இந்த நிலையில் எமது முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு சாள்ஸ் செந்தில்வேல் அவர்களும் எமது ஆலயச்சபையும் எடுத்த பெருமுயற்சியின் பயனாக எமது பங்கின் மைந்தர்களாக வெளிநாடுகளில் இருப்போர் பலர் இலட்சக்கணக்கான

ரூபாய்களை எமது ஆலயத் திருத்த வேலைகளுக்காக மனமுவந்து அனுப்பிவைத்துள்ளார்கள். இவர்களை நாம் நன்றிப்பெருக்கோடு நினைவிற் கொள்ளுகிறோம்.

1992ம் ஆண்டு அன்னை பரலோக மாதாவின் ஆலயத்தின் பொன்விழா ஞாபகமாக 50 ஆண்டு நிறைவு வளைவு ஒன்றைக் கட்டும் முகமாக ஆரம்ப வேலைகள் தொடங்கி அடிக்கல் நாட்டி உருவாக்க முயர்ச்சித்தவேளை யாழ். மாநகர சபையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ்வேலை கைவிடப்பட்டதன் பின் அமைக்கப்படவிருந்த வளைவின் வடிவமாக ஐந்தரை அடி உயரமான ஒரு குத்துவிளக்கிகைச் செய்து அதனை பீடத்தின் முன்பகுதியில் வைத்து சுடரேற்றி வருவது குறிப்பிடவேண்டியதொன்றாகும். எனினும் பல வருடங்களின் பின் அருட்தந்தை P.F. இராஜசிங்கம் அடிகளாரின் பணிக்காலத்தில் 2011ம் ஆண்டு 50ம் ஆண்டு யூபிலி ஞாபகார்த்த அழகிய வளைவு அமைக்கப்பட்டு நிறைவு செய்து 2011ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி அன்னை பரலோகத் தாயின் விணேற்பு பெருவிழாவின்போது குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இத்தோடு போட்டிக்கோ மண்டபமும் புனரமைக்கப்பட்டு போட்டிக்கோ முன்பகுதி அழகிய கிறாதியும் அதனைச் சுற்றிக் கற்கள் பதிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. இதற்கொன நிதியினை எமது பங்கு மக்களாக வெளிநாடுகளில் உள்ள எமது உறவுகளின் உதவியோடு செய்யப்பட்டது.

இவை அனைத்திற்கும் மேலாக ஓட்டுக்கூரையாக இருந்த அன்னையின் ஆலயத்தை மென்மேலும் அழகுபடுத்த கூரைத் தகடுகளால் வேயப்பட்டு ஆலயத்தின் உட்புறம் லெவல் சீற் பொருத்தி அழகுபடுத்தப்பட்டதோடு ஆலயத்தின் பீடப்பகுதி அழகிய சிற்ப வேலைகளால் மெருகூட்டப்பட்டுள்ளதும் ஆலயத்தின் வெளிமுற்றங்கள் தரை முழுவதும் கற்கள் பதிதது அழகுபடுத்தப்பட்டுள்ளதும், அழகுக்கு அழகு செய்யும் அற்புதக் கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

அன்னை பரலோகத் தாயின் ஆலயத்தை அழகுபடுத்தியமை இறைவன் அன்னை பரலோகத் தாயின் மூலம் தங்களுக்குச் செய்த அரும்பெரும் நன்மைகளுக்கு நன்றியாக செய்தார்கள் என்பதும் இதை யார் செய்தார் என்று இங்கு குறிப்பிடவேண்டியதில்லை. ஆனால் இவையாரால் செய்யப்பட்டதென்பது மக்கள் அனைவருக்கும் தெரியும்.

யாழ். மறை மாவட்டத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் எதிலும் இப்படிச் சிறப்பும் அழகும் பொருந்திய ஒரு வடிவம் நாவாயூரின் நாயகி பரலோக அன்னையின் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதென்பதையும் அதன் அழகுத் தோற்றத்தைப் பார்த்து மக்கள் வியப்புறுவதையும் காணக்கூடியதாக உள்ளதென்பதை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

இன்னும் அன்னையின் ஆலயத்தை மென்மேலும் அழகுபடுத்த மக்கள் பலர் தங்கள் பங்களிப்பை அவரவர் தகுதிக்கேற்ப செய்து கொண்டிருக்கிறர்கள். இந்தவகையில் ஆலயத்தின் பீடத்தின் முன்பகுதியில் இரண்டு எட்டடி உயரமான இறை தூதர் சிலைகள் (சம்மனசுகள்) சிறந்த வடிவமைப்புடன் செய்து நிறுத்தியிருப்பதும் குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

அற்புத அன்னைக்கோர் அழகான அருங்காட்சி மையம்

பாரீஸ் நகரின் லூர்து அன்னையின் அழகான கெபியைப் பிரதிபலிக்கும் அமைப்புடன் ஓர் கலையழகு துலங்கும் மலைத்தொடர் போன்ற அழகான கெபி பரலோகத் தாயின் ஆலய தென் மேற்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தை மறைக்காத வண்ணமாக ஆலய வடகிழக்கில் மடத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் பரவலாக நிலவுகின்றது.

பரிசுத்த அன்னை பரலோக மாதாவின் பரிந்துரையின் மூலம் இறைவன் தங்களுக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றியான ஒரு குடும்பத்தினர் இதனைப் பூர்த்தி செய்து அழகுபடுத்தி அன்று மேன்மை தங்கிய யாழ். புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் 14.02.2016ல் திறந்து வைத்து ஆயர் அவர்களால் கெபியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதும் ஒரு சிறப்பு மிகு நிகழ்ச்சியாகும். இந்தக் கெபியின் தோற்றம் இயற்கை மலையின் அழகைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதும் அன்னையின் ஆலயத்தின் தென் மேற்குப் பகுதியில் கம்பீரமாக அமைந்துள்ள இந்தக் கெபியினது இங்கு வருகைதரும் அருங்காடசி மையமாகவும் அழகொளிரக் காட்சியளிப்பதைப் பார்த்து பக்தியோடும் பணிவோடும் மக்கள் அன்னைமரியாளோடு அன்புறவு கொண்டு செபித்து வேண்டுதல் செய்வதும் மனமகிழ்வைத்தரும் காட்சியாகும் இந்தக் கெபியில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள லூர்து அன்னையின் திருச் சொரூபம் பிரான்ஸ் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டதென்பதும் இந்தக் கெபியில் லூர்து பதியின் புனித கெபியில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு கல் புனிதப் பண்டமாக இக் கெபியில் பேளையில் வைத்துள்ளதும் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

இந்த யூபிலி ஆண்டாகிய 2017ஆம் ஆண்டில் இந்தியாவின் தமிழ் நாட்டில் பல ஆலயங்களில் காணப்படுவதுபோல் நிரந்தரமான கொடித்தூண் கட்டடம் 65 அடி உயரம் கொண்டதாக சீமெந்தால் அமைக்கப்படுவதோடு அதைச் சுற்றிவர திருச்சிலுவைப்பாதை நிலைகளும் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஆலயத்திற்கு வர்ணம் தீட்டப்படும் வேளை புதிதாக ஒலி ஒளி அமைப்பும் சீர்படுத்தப்படுவதோடு ஆலயத்தின் மேல் டோம் பகுதி கூரை பழுதுபார்க்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டு, சுற்றிவர இருந்த 12 வெளிகளில் மரியன்னையின் வாழ்வின் மறைநிகழ்வுகள் கண்ணாடியில் பதிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளமையும் பீடத்தில்

முன்தெரியும் வகையில் ஆண்டவரின் இறுதி இராவுணவு நிகழ்வு காட்சிப் படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைக்கப்பட்டது பீடத்தின் பின்பக்க சிம்மாசனமாகும். மர சிற்ப வேலைப்பாடாலான இச்சிம்மாசனத்தின் இரு புறமும் அன்னை மரியா, சூசையப்பர் திருச் சொரூபங்கள் நடுவே பல வருடங்களின் முன்பு அருட்தந்தை G.E. மேரி யோசப் அடிகளார் காலத்தில் வைக்கப்பட்ட எட்டடி உயரமான திருச்சிலுவையின் கீழ் சம்மனசுகளின் மத்தியில் அழகான நற்கருணைப் பேழை காட்சிதருகின்றது. அன்னை மரியாள் யாரை எமக்குத் தந்தாளோ, அந்த மகன் இயேசு நற்கருணை ஆண்டவராக இப் பேழைக்குள் இருந்து எம் எல்லோர்க்கும் ஆறுதல் தருவது பவளவிழா நினைவாகக் குறிப்பிடக்கூடிய மாபெரும் அன்பின் அடையாளமாகும். இவையெல்லாம் ஆலயத்தோடும் ஆலய வளவோடும் எமது குடும்பங்களோடும் கிறிஸ்தவ வாழ்வு மட்டுப்படுத்தப்படாமல் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற். 16:16) என்னும் இயேசுவின் வார்த்தைக் கேற்பப் பணி செய்யுமாறு எம்மையும் உந்தித் தள்ளட்டும்.

அன்னை மரியாவின் புதுமைகள் நம் ஆலயத்தில்

புதுமை ஒன்று

2014ம் ஆண்டு முற்பகுதியில் ஒருநாள் பகல் 12ஆம் மணி நேரம். ஆலயத்தின் உள்ளே 4, 5 வயதுடைய சிறார்கள் சிலர் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டு நின்றார்கள். இவர்களது சத்தம் பலமாக ஒலித்துக்கொண்டிருந்ததாம். அவ்வேளை பரலோகத்தாயின் சுரூபத்தில் இருந்து பிரகாசமான ஒளிக்கீற்று இவர்களை நோக்கி வந்ததாகவும் இதனைக் கண்ட சிறார்கள் அச்சத்தால் பயந்து பிரமித்து நின்றார்களாம். அவ்வேளை அந்த ஒளிக்கீற்றின் நடுவே பரலோக அன்னை நடந்து வந்து சிறார்கள் அருகில் நின்று அவர்களை நோக்கி சத்தம் போட வேண்டாம். இது ஆண்டவரின் இல்லம். இதனை மாசு படுத்தக் கூடாது என அவர்களை அன்போடு எச்சரித்து நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்று அவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைத்தாராம். அச்சத்தோடும், பயத்தோடும் தங்களது வீடுகளுக்குச் சென்ற சிறார்கள் தங்கள் தங்கள் வீடுகளில் இருந்தவர்களுக்குச் சொல்ல வீடுகளில் இருந்த பெரியவர்களும் தாய்மாரும் ஆலயத்தை தேடி ஓடிவந்து மாதாவைப் பர்ர்த்து வேண்டுதல் செய்த வேளை சிலர் மாதா நடந்து வந்ததாகச் சொல்லப்பட்ட ஆலயத்தின் நிலப்பகுதியைப் பார்த்து மாதாவின் காலடி அடையாளங்கள் இருப்பதாகக் கூற ஆலயத்தில் நின்ற அனைவரும் இதனைப் பர்ர்த்து ஆச்சரியப்பட்டார்களாம். அவ்வேளை அன்னை மரியாளைக் கண்டதாகச் சொல்லப்பட்ட சிறுமிகளும் மாதா இங்குதான் எங்களோடு கதைத்தார் என்று சொல்லி அங்கு நடந்தவற்றை நின்ற அனைவருக்கும் கூறினார்கள்.

இந்த அன்னை பரலோகத் தாயின் கால் அடையாளங்கள் என்று கூறப்பட்ட அடையாளங்கள் பலகாலம் அழியாமல் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

புதுமை இரண்டு

2014ம் ஆண்டு சிறார்கள் காட்சி கொடுத்ததாகச் சொல்லப்பட்ட அதே திகதியில் மாலை வேளை ஒரு தாயும் மகளும் அன்னையின் ஆலயத்திற்கு வருகை தந்தார்கள். வருகை தந்த அவர்கள் வந்த வாகனத்தில் இருந்து இறங்கிய அந்தத் தாய் சுகவீனமான தனது மகளையும் வாகனத்தில் இருந்து இறக்கி கைத்தாங்கலாக நடக்க முடியாத மகளை அணைத்து ஆலயத்தின் உட்பகுதிக்குள் அழைத்துச் சென்று அங்கே ஆலயத்தின் உள்ளே போடப்பட்டிருந்த வாங்குகளில் ஒன்றில் மகளை இருத்திவிட்டு ஆலய பீடத்தின் கிறாதி அருகே சென்று அன்னை பரலோகத் தாயை நோக்கி அழுது புலம்புகின்றார். அவ்வேளை ஆலயத்தில் இருந்த மக்கள் பலர் இந்த அன்னையின் உருக்கமான வேண்டுதல்களைப் பார்த்து என்னவோ ஏதோ என்று வியந்து நிற்கும் வேளை பின் வாங்கில் இருந்த இந்த இயலாத பிள்ளை எழும்பி நடந்து சென்று தனது தாயின் அருகில் நின்று அம்மா வாங்கோ நாங்கள் போவோம். மாதா எனக்கு நல்ல சுகத்தைத் தந்துள்ளார். என்னால் நடக்க முடிகின்றது என்று நடந்தவற்றை விபரித்தாராம்.

அம்மா நான் வாங்கில் இருந்தபோது காற்று எனது முகத்தில் வீசுவதுபோல் இருந்தது. அந்த உடனே காலிலே யாரோ பலமாக அடித்தது போலவும் நீ எழுந்து உனது அம்மாவிடம் போவென்று சொல்லுவது போலவும் இருந்தது என்று நடந்தவற்றைத் தாய்க்கு விபரித்தாராம். உடனே அந்தத் தாயானவள் உரத்த சத்தமாக எனது பிள்ளைக்கு சுகத்தைத் தந்த தாயே பரலோக மாதாவே உமக்கு நன்றி அம்மா என்று சொல்லி அன்னையின் திருச்சொரூபத்தை அணைத்துக் கண்ணீர் விட்ட காட்சி அங்கு கூடி நின்ற அத்தனை மக்களினதும் மனங்களில் எல்லாம் அன்னையின் மீது அளவு கடந்த பக்தியையும் நம்பிக்கையும் உண்டாக்கியது.

இவை அத்தனையும் பல மக்களின் முன்நிலையில் நடந்த சம்பவங்களாகும். இவை நடந்த அடுத்த நாள் காலை அந்தத் தாயும் மகளும் ஆலயத்திற்கு வந்து அன்னையை வணங்கி நன்றி செலுத்தி அங்கு நின்ற மக்களுக்கு நேற்று நடந்த சம்பவத்திற்குப் பின் தான் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றதாகவும் மருத்துவர்கள் பிள்ளையைப் பரிசோதித்து பிள்ளைக்கு எந்த வருத்தமும் இல்லையென்று கூறி வியந்ததாகவும் அந்த அம்மா கூடிநின்ற சனங்கள் முன்னிலையில் சாட்சி பகர்ந்தார் என்று மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு சொன்னார்கள். இந்தச் சம்பவங்களெல்லாம் அன்னையின் அற்புதங்களாகவும் அருங்குறி அடையாளங்களாகவும் மக்களின் மனங்களிலெல்லாம் பதிந்து மேலும் மேலும் அன்னை பரலோக மாதாவின் பக்தியை அதிகரிக்கச் செய்துள்ளன.

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய பங்குத் தந்தையர்கள்

அருள்திரு. M.S.நல்லையா அ.ம.தி. 1939 -1942
அருள்திரு. வில்லியம் யேசுதாசன் அ.ம.தி. 1942 மே – 1943 செப்ரெம்பர்
அருள்திரு M.J.மரியம்பிள்ளை (உதவி) 1942 - 1943
அருள்திரு. V.R. தார்சீசியஸ் அ.ம.தி. 1942 செப்ரெம்பர் - 1953 யூலை
அருள்திரு. அல்பிறட் குத்தீன் அ.ம.தி. 1953 யூலை – 1955 ஜனவரி
அருள்திரு. டிவிற் அ.ம.தி. 1955 மாசி - 1955 - புரட்டாசி
அருள்திரு . A.சார்வே அ.ம.தி. 1955 ஐப்பசி - 1961 வைகாசி
அருள்திரு. Y.கறோவ் அ.ம.தி. 1961 வைகாசி -1965 புரட்டாசி
அருள்திரு. கிங்ஸிலி சுவாம்பிள்ளை 1965 புரட்டாசி - 1966 ஆடி
அருள்திரு. பெனற் கொன்ஸ்ரன்ரைன் 1966 ஆவணி-1967 சித்திரை
அருள்திரு. மகேந்திரன் இராசநாயகம் 1967 சித்திரை-1967 வைகாசி
அருள்திரு. G.E. மேரி யோசப் 1967 ஆனி - 1972 சித்திரை
அருள்திரு. இரெம்சி குரூஸ் அ.ம.தி.1972 புரட்டாசி - 1973 தை
அருள்திரு. பெனெற் கொன்ஸ்ரன்ரைன் 1973 மாசி - 1974 கார்த்திகை
அருள்திரு. A.P.தேவசகாயம் 1974 கார்த்திகை -1977 சித்திரை
அருள்திரு. R.M.G.நேசநாயகம் 1977 சித்திரை - 1981 தை
அருள்திரு. P.M. இம்மனுவேல் 1981 தை - 1987 ஆவணி
அருள்திரு. A.பிரான்சீஸ் குலாஸ் அ.ம.தி. 1987 ஆவணி - 1988 வைகாசி
அருள்திரு. சாள்ஸ் செந்தில்வேல் அ.ம.தி. 1988 வைகாசி-1990 கார்த்திகை
அருள்திரு. S. யூஜின் பிரான்சிஸ் (உதவி) 1990 - 1991
அருள்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி. 1990 கார்த்திகை – 1993
அருள்திரு. சாள்ஸ் கொலின் (உதவி) 1992 - 1993
அருள்திரு. J.X.பேனாட் றெக்னோ 1993 - 1996
அருள்திரு. M.றெஜி இராஜேஸ்வரன் 1996 - 1997
அருள்திரு. R. பீற்றர் துரைரட்ணம் 1997 - 2003
அருள்திரு. M.X.கருணாரட்ணம் 2003 - 2005
அருள்திரு. A.P.திருமகன் (உதவி) 2004 - 2005
அருள்திரு. J.மதி இளம்பருதி (உதவி) 2005 – 2006 யூன்
அருள்திரு. C.J.அன்ரனிபாலா 2006 தை - 2006 யூன்
அருள்திரு. M.V.R.இரவிச்சந்திரன் 2006 யூலை - 2009
அருள்திரு. A. ஜேம்ஸ் நாதன் (உதவி) 2008 - 2009
அருள்திரு. P.F. இராஜசிங்கம் 2010 - 2014
அருள்திரு. C.G. ஜெயக்குமார் 2015 ஜனவரி – 2015 ஏப்பிரல்
அருள்திரு. S. விமலசேகரன் (வசந்தன்) 2015 மே – 2015 யூலை
அருள்திரு. M. சோபன் றூபஸ் 2015 ஆகஸ்ட்- 2016 பெப்ருவரி
அருள்திரு. C.J. அன்ரனிபாலா 2016, மார்ச், 01ல் இருந்து இன்றுவரை

பங்குத் தந்தையர்களும் ஆலயப் பணிகளும்

1940ம் ஆண்டு அருட்தந்தை சூசைதாசன் (நல்லையா) சுவாமி அவர்களின் காலத்தில் ஓலைக்கோவில் அமைக்கப்பட்டு வாலிபர் சங்கத்தின் பணிமனையில் இருந்த மாதா சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது. இது இவ்வாலயத்தின் ஆரம்பமுமாகும்.

1942ம் ஆண்டு அருட்தந்தை வில்லியம் யேசுதாசன் அ.ம.தி. (1942 மே – 1943 செப்ரெம்பர்) அவர்களது காலத்தில் (அருட்தந்தை M.J. மரியாம்பிள்ளை உதவியாக இருந்தார்) மிகவும் கோலாகலமாக மகாமேன்மை தங்கிய யாழ். ஆயர் அதிவண J.A. கியோமர் அ.ம.தி. அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ந்து அத்திவார வேலைகள் நடைபெற்றதோடு பங்குத்தந்தைக்கு ஒரு குருமனையும் அமைக்கப்பட்டு ஆலயத்தின் வேலைகளோடு மக்களின் வழிபாட்டிற்கு உகந்த வகையில் சிறிய கோவிலும் அமைக்கப்பட்டது. இதன்பின் சிறிது காலம் தவிர்க்க முடியாத காரணங்களினால் கோவில் வேலைகள் தடைப்பட்டிருந்தன. 1943 செப்ரெம்பர் - 1953 யூலை வரை அருட்தந்தை V.R தார்சீசியஸ் அமதி காலத்தில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டது.

1955ம் ஆண்டு வணக்கத்துக்குரிய A.சார்வே அ.ம.தி. அவர்கள் பங்கைப் பொறுப்பேற்ற வேளை ஆலய வடிவமைப்பின்படி ஆலய பீடப் பகுதி வளைவுகள் போடப்பட்டு தொடர்ந்து வேலை நடைபெற்றன.

இவரைத் தொடர்ந்து வணக்கத்துக்குரிய Y.கறோவ் அ.ம.தி. 1961ம் ஆண்டு பங்கிற்கு வருகை தந்து கட்டிட வேலைகளில் முக்கால் பகுதியைச் செய்து கோப்பிசமிட்டு கூரை வேலைகளையும் முடித்து புதிய ஆலயத்தில் வழிபாடுகளும் நடைபெற்று வரலாயின.

இக்காலத்தில் எமது ஆலய வளவில் ஓர் பீடித் தொழிற்சாலை அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான யுவதிகள் அதில் வேலைவாய்ப்பு பெற்றனர். அன்றைய நிலையில் எமது கிராமத்தில் இது ஓர் வரப்பிரசாதமாயிருந்தது.

1967ம் ஆண்டு எமது பங்குக் குருவாக வருகை தந்த அருட்தந்தை G.E. மேரி யோசேப் அவர்களது காலத்தில் ஆலயத்தின் பூச்சு வேலைகள் நிலமிழுத்தல், மின்விளக்கமைத்தல், கதவு, யன்னல், கண்ணாடி அமைத்தல், தீந்தை பூசுதல் வேலைகளும் அத்தோடு எட்டடிக்குக் கூடுதலான நீளமுடைய பாடுபட்ட சுரூபத்தையும் வேறு பெரிய சுரூபங்களை செய்து வைத்தமையும் குறிப்பிடத் தகுந்ததே.

இதனைத் தொடர்ந்து பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்ட A.P. தேவசகாயம் அடிகளார் (1974 – 1977) வழமைபோலவே தமது பணிகளை மேற்கொண்டு வந்தார். அவரின் காலத்தில் ஆலயத்தின் நான்கு பக்கமும் வேலியின்றி அவலமாயிருந்தது. முழு வளவுக்குமே மதில் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பணிகளும் ஆரம்பித்து வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன.

அருட்தந்தை R.M.G. நேசநாயகம் (1977 – 1981) அடிகள் இங்கு பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வேளையில் 1978ம் ஆண்டு தவக் காலத்தில் 'பரபாஸ்' என்னும் திருப்பாடுகளின் காட்சி நாவாந்துறை மண்ணில் முதற் தடவையாக இவ்வாலய வளவில் மேடையேற்றப்பட்டது. 1980.05.01இல் யாழ். மரியன்னை பேராலயத்தில் இம்மண்ணின் முதற்குருவாக அருட்தந்தை ஸ்ரீபன் மரியதாஸ் செ.தா. ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்பட்டார். பங்குத் தந்தையின் தலைமையில் மிகவும் ஆடம்பரமான வரவேற்புடன் நாவாந்துறை மரியன்னை ஆலய வளவில் மேடை அமைக்கப்பெற்று 1980.05.02இல் தனது முதல் திருப்பலியை புதிய குரு நிறைவேற்றினார். விளையாட்டுக் கழகம் புனரமைக்கப்பட்டு பல வெற்றிகள் குவிக்கப்பட்டதோடு, பக்திச் சபைகளும் ஊக்குவிக்கப் பட்டது.

P.M.இம்மானுவேல் அடிகளார் (1981 – 1987) பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டபோது சமயப் பணியோடு, சமூகப் பணிகளையும் மேற்கொண்டு மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றார்.

இவரது காலத்தில் தான் எமது ஆலயத்தின் அருட்தந்தை செபஸ்தி நீக்கிலால் (கமலன்) O.M.I. இரண்டாவது குருவின் முதல் திருப்பலி எமது ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்விழாவின் ஞாபகார்த்தமாக ஆலயத்தின் முன் போட்டிக்கோ மண்டபம் குறுகிய காலப்பகுதியில் இரவு பகலாக முழு மக்களினதும் ஒத்துழைப்போடு 21 நாட்களில் கட்டி முடிக்க வழிகாட்டியாகப் பணிபுரிந்தார். சென். மேரிஸ் ச. ச. நிலையக் கட்டிடம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. ச.ச.நிலைய வளவில் வண. Y.கறோ O.M.I அவர்களின் நினைவாக சிறுவர் பூங்கா ஒன்றும் நிர்மாணித்துத் தரப்பட்டது. வண. சாள்ஸ் செந்தில்வேல் O.M.I. அவர்களுடைய காலத்தில் 1988ல் ஆலயம் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. ஆலய மக்கள் வேதனையடைந்திருந்த வேளை பங்குச் சபையின் தீர்மானத்தின்படியே வெளிநாடுகளிலுள்ள எம் பங்கு மக்களின் நிதியுதவி கோரப்பட்டது. இதற்கு மதிப்பளித்த பலர் போதுமானளவு நிதியை பங்குத் தந்தைக்கு அனுப்பிவைத்தனர். எனவே திருத்த வேலைகளுடன் பீடப் பகுதி (டோம்) கூரைக்கு உள் சீற் அடிக்கப்பட்டது. போட்டிக்கோ பகுதிக்கும் உள் சீற் அடிக்கப்பட்டது. அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அடிகளாரும் அந்நாட்களில் உதவிப் பங்குக் குரவராகப் பணியாற்றினார். பொன்விழா ஆயத்தங்கள் தொடங்கப்பட்டது.

அருட்தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் (1990 - 1993) அடிகளார் பொறுப்பேற்ற காலத்தில் ஆலயத்தில் பீடப்பகுதிக்கும், பின் அறைக்கும் அடிக்கப்பட்ட சீற்கள் சேதாரமடைந்து மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. பொருட்கள் பெறமுடியாததால் பெரும் தொகை செலவாயிற்று. 1992இல் பொன்விழா இடம்பெற்றது. இவ்வாறாக எமது ஆலயம் இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது.

இடம் பெயர்வின் பின் மீள்வருகை அனுபவம்

1995ம் ஆண்டு இடம்பெயர்வின் பின் 1997ம் ஆண்டு மீள் வருகையின் பின் நாங்களும் எங்கள் ஆலயமும் என்ற மறக்க முடியாத அனுபவத்தை உங்களுடன் பகிர்கின்றேன். 1997ம் ஆண்டு பங்குனிக்கு பின்னால் சில குடும்பங்கள் வன்னிப் பகுதியில் இருந்து பலவிதமான துன்பங்கள் மத்தியில் யாழ் நகரை வந்தடைந்தோம். வந்த வேளையிலும் எமது பகுதியான நாவாந்துறை வடக்கை சென்றடைய முடியவில்லை. காரணம் வலுவாய்ந்த இராணுவக் கட்டுப்பாடும் காட்டுப் பிரதேசமுமாய்க் காணப்பட்டதினால் உட்செல்ல முடியாமல் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் வசித்தோம். சுமாராக 36 குடும்பங்கள் ஒரு பங்காக வாழ்ந்தோம். அப்போது அருட்சகோதரி அசுந்த மேரியும் அவருடன் இணைந்த இரு அருட்சகோதரிகளும் எங்களுக்கு பணியாற்றி வந்தார்கள். எங்களுடைய ஆலயத்தை பார்க்க வேண்டுமென்ற ஆசை எங்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் எழுந்து விட்டது. உடனடியாக அருட்சகோதரி அசுந்த மேரியை நாங்கள் விடாப்பிடியாக நாடிச் சென்றோம். அப்போது எங்கள் பகுதியில் இராணுவ அதிகாரியாக இருந்தவர் மனித நேயம் கொண்ட ஒரு நல்ல மனிதன், அருட்சகோதரி அவரை நாடிய போது அருட்சகோதரிக்கு கீழ்ப்படிந்தவராய் எங்களை ஆலயம் பார்க்க அனுமதித்தார். ஆண், பெண், சிறுவர் என்ற பேதமின்றி அடர்ந்த பத்தைகளின் ஊடாக ஆலயத்தை கண்டோம். கண்டவுடன் எல்லா மக்களும் "அம்மா அம்மா" என்று கதறி அழுது புரண்டு எங்கள் மனப்பாரங்களை குறைத்தோம். அதன் பின் ஆலயத்திற்குள் காலடி பதித்த போது நாங்கள் கண்ட காட்சி காற்றோட்டமான மிகவும் வசதியான படுக்கை இடமாகக் காணப்பட்டது. கட்டில்கள், துணிமணிகள், சப்பாத்து போன்ற நாளாந்தம் தேவையான பொருட்களினால் ஆலயம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தாங்கமுடியாதவர்களாக இராணுவ அதிகாரியிடம் மன்றாடிக் கேட்டோம் எங்கள் தாயாரின் ஆலயத்தை பரிசுத்தப்படுத்த எங்களுக்கு தரும்படியாக. அவரும் அனுமதித்து ஒத்துழைத்தார். 'அந்த மனிதனை இந்த நேரத்தில் நன்றியோடு நினைக்கின்றேன்'. சிரமதானப்பணியில் ஈடுபட்டோம். அப்போது தேவதாயின் கிருபையினால் காலம் சென்ற சகோதரன் செபஸ்ரியாம் பிள்ளை அன்ரன் அவர்கள் எங்களுடன் வந்து சேர்ந்தார். பல அரசு சார்ந்த அதிகாரிகளுடன் கதைத்து பல வசதிகளை செய்து தந்தார். சிரமதானப் பணியை இப்போது நினைக்கும்போதும் கண்ணீர் மல்கின்றது. மிகவும் கஸ்ரப்பட்டோம். நச்சுப் பிராணிகளிடமிருந்து எப்படி எல்லாம் காப்பாற்றப்பட்டோம். மறக்க முடியாது. ஆவணி வந்தது. திருவிழா கொண்டாட வேண்டுமென்று முடிவெடுத்தோம். சகோதரன் அன்ரனவர்களின் முயற்சியுடனும் எம் குடும்பங்களின் ஒத்துழைப்புடனும் 'புதிய புனித மரியாள் கடல் தொழிலாளர் சங்கம்' ஏற்படுத்தப்பட்டது. அதன் ஊடாக உழைப்புக்கள் எடுக்கப்பட்டு ஆலயத்திற்கு தேவையான உபகரணங்கள் எடுக்கப்பட்டன. இயன்றளவு நிறம் தீட்டி

தண்ணீரை விட கண்ணீராலே ஆலயம் கழுவப்பட்டு வளாகம் தூய்மையாக்கப்பட்டு ஆவணி 15ம் திகதி அருட்தந்தை றெஜி ராஜேஸ்வரன் அவர்கள் ஆயரின் உத்தரவுடன் திருவிழா திருப்பலி கோலாகலமாக கொண்டாடினோம். பரலோக அன்னையை தோழிலே வைத்து சுமந்து அன்னையின் ஆசிபெற்ற நாளை மறக்கவும் முடியுமோ? திருவிழாவை தொடர்ந்து கிராமத்திற்குள் உட்புகுந்தோம். எம் ஆலயத்தை சீரமைக்க 36 குடும்பங்களிலும் இருந்து ஒத்துழைத்து இறந்து போன உள்ளங்களையும் நன்றியோடு நினைவு கூரும் நான்

திருமதி வின்சன் பிரான்சிஸ்கம்மா (கோமதி)

புலம் பெயர்ந்தோரின் ஏக்கப்பெருமூச்சு

புலம்பெயர்ந்து மேல் நாடுகளுக்குச் சென்ற ஈழத்தமிழர்களுள் நாவாயூர் மக்களும் பெரிதும் அடங்குவர். பல்லாயிரம் மைல்களுக்கப்பால் சென்று நீண்ட காலங்களாகிய போதிலும் எம் அன்னையின் மண்ணின் சிறுபராய நினைவுகளோடேயே வாழ்ந்து வருபவர்கள் நாங்கள். "புலத்தைப் பெயர்தல் கொடுமையிலும் கொடுமை என்பேன்" என ஒரு கவிஞரின் வரிகள் உண்டு. நெஞ்சுள் கனத்த வலிகளுடன் எமது மண்ணைப் பிரிந்து வாழ்க்கை நடாத்தி வருபவர்கள் நாங்கள்.

நாவாந்துறை ஒரு சிறிய ஊர். யாழ்ப்பாணத்தின் முதல் சிறிய கோட்டையினைக் கட்டிய போர்த்துக்கேயருக்கும் (ஒல்லாந்தர் காலத்தில் தற்போதுள்ளபடி பெருப்பிக்கப்பட்டது) நாவாந்துறைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்ததாக வரலாற்றுப் பதிவு கூறுகின்றது. இந்த சிறிய ஊரிலே பிறந்து, ஊர்ந்து, வளர்ந்து, நிமிர்ந்து நின்ற நாட்கள் நெஞ்சுள் பசுமையாய் செழித்த வயல்போல் எம்முள் இதமாய்ப் பதிந்து கிடக்கின்றது.

மிகவும் வேகமாகப் பூமிப்பந்து சுற்றிக் கொண்டிருக்கின்றது. அதனது சுழற்சியை விடவும் நாங்கள் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறோம். இவ்வாறான இயந்திரமயம் மற்றும் வேதனையும் சோதனையும் சுமைகளும் இழப்புக்களும் நிறைந்த வாழ்தலுக்குள் எப்போதாவது மனதுள் மகிழ்ச்சிப்படும் கணங்கள் கிடைக்கின்றது தென்றால் அது எமது தாய்க் கிராமத்தின் நினைவுகள் பற்றிப் பேசும் போதும் நினைக்கும் போதும் மட்டுமே

எமது நாவாந்துறையூரும் எனைய பல கிராமங்கள் கொண்டுள்ள முக்கிய தலங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் தலை சிறந்ததாக நிமிர்ந்து நிற்பது பரலோக அன்னையின் ஆலயமாகும். ஆலயத்தின் தோற்றம், செயற்பாடுகள் மரியன்னையின் அற்புதங்கள் பற்றிப் பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் இம் மலரில் பதியப்பட்டிருக்கலாம். இவ் விடயத்தில் எம் முன்னோர்களின் உறுதியும் விடாமுயற்சியும் உழைப்பும் அர்பணிப்பு பற்றியே வியந்து பார்க்கின்றோம். அவர்களது நிதியுதவி தொழிலுதவி உடலுதவிகளுக்கு கப்பால் அவர்கள் நான் பெரியவன் நீ பெரியவன் என்ற எண்ணப்பாடுகள் இல்லாமல் மிகவும் ஒற்றுமையாக செயற்பட்டார்கள். அக்காலத்து ஊர் முதலாளிமார், பெரியவர்களுக்குக் கட்டுப்பட்ட வாழ்க்கை முறைமைதனை ஊர் மக்கள் ஏற்று வாழ்ந்தார்கள். சிறந்ததொரு கட்டுக்கோப்பான வாழ்க்கைமுறை இருந்ததாக பெரியோரின் வாய்மொழித் தகவல்கள் தெரிவிக்கின்றன. என் வீட்டு முற்றத்தில் மரங்களை நட்டவர் எமது பாட்டனார். அதிலே கிடைக்கும் பலனை அனுபவிப்பவர்கள் நாம். அதுபோலவே நம் ஆலயத்தினையும் கருத முடிகிறது. ஒரு பலமான சிறந்த அருள்மிகு ஆலயத்தினை கட்டிய எம் முன்னோர் மரணித்துப் போயினர். ஆனால் நாங்கள் அவ்வாலயத்தினை அனுபவித்து வருகிறோம்.

தற்போதய சூழலில் நாவாயூரில் வாழ்ந்து வருகின்ற மக்களும், புலம் பெயர்ந்து வாழும் இம்மண்ணைச் சேர்ந்த மக்களும் இணைந்து இக்கிராம அபிவிருத்திகாக பொதுநல சிந்தனை நோக்கில் செயற்படுதல் அத்தியாவசியமாகப் படுகிறது. வளர்ந்த பல நாடுகளில் வாழும் எம் மக்கள் அங்குள்ள கட்டட திட்டங்களையும், கல்வி, கலை, விளையாட்டுத் திறன்களை முன்னேற்றும் திட்டங்களையும் நன்கு உள்வாங்கி எம் கிராம அபிவிருத்திக்காக அவற்றினை ஒற்றுமையோடு செயற்படுத்துதல் அவசியமென எண்ணத்தோன்றுகிறது.

இன்று பரலோக அன்னையின் ஆலயம் கட்டப்பட்டு 75 ஆண்டுகளைக் கடந்து பவளவிழா கொண்டாடுகின்றோம். புலம்பெயர்ந்து வாழுகின்ற ஏராளமான நமது ஊரைச்சேர்ந்த மக்கள் இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்து வருகின்றனர். பரலோக அன்னை எமக்கு செய்த அருள் வளங்கள் எத்தனை என்று வடிக்க முடியாது. அன்னையின் அருளினால் எமது ஊரும், மக்களும் அடைந்த நன்மைகளுக்கு நன்றி கூறுவதற்கான மிகப்பெரும் சந்தர்ப்பமாகவே இவ்விழா கோலாகாலமாகக் கொண்டாடப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் பரலோக அன்னை நாவாயூர் மக்களை காத்து எமக்கு வேண்டிய அருள் வளங்களைப் பொழிய வேண்டுமென வேண்டி நிற்கிறேன்.

யூலியஸ் அந்தோனிப்பிள்ளை (நிமல்)

குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம்

நாவாந்துறை மரியன்னை ஆலய மக்களுக்குக் கிடைத்த அருள்வளம் குருசடித்தீவு தவக்கால யாத்திரைத்தலம்.

புனிதருக்கு ஓர் ஆலயம்

புகழ் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டையின் அருகில் ஊர்காவற்றுறை – பண்ணை வீதியின் வலப்புறம் மண்டைதீவுச் சந்தியிலிருந்து 300மீ. தொலைவில் தென்கிழக்குத் திசையில் அழகுற அமைந்துள்ளதுதான் குருசடித்தீவு. இத்தீவு கண்ணா மரங்கள் சூழப் பசுமை நிறைந்து காணப்படுகிறது. கிட்டத்தட்ட 4 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகவும் இருக்கின்றது. யாழ். பண்ணை வீதி அமைக்கப்படுவதற்கு முன் மக்கள் தீவகப் பகுதிக்கு பயணத்தை மேற்கொள்ள இடைத்தங்கல் துறையாக இத்தீவைப் பயன்படுத்தினர். பண்ணை வீதி அமைக்கப்பட்ட பின்பு மீனவர்கள் தங்கித் தொழில் செய்யும் இடமாக அமைந்தது.

ஒல்லாந்தர் கெடுபிடிகள் குறைந்த காலத்தில் ஓரளவு மதச் சுதந்திரம் கிடைத்தபோது மக்களோடு மக்களாகப் புனித யோசவ் வாஸ் அடிகளாரும் தீவகத்திற்குச் செல்லும் வழியில் தங்குமிடமாக நாவாந்துறையைப் பயன்படுத்தி மக்களுக்கும் பணியாற்றி இத்தீவு வழியாகச் சென்றுவந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. புனித யோசவ் வாஸ் செல்லுமிடமெல்லாம் தனது தியான சம்பிரதாய சபையில் பெற்ற இறையனுபவம் அச் சபையின் பெயர் கொண்ட திருச்சிலுவையை நாட்டும் வழக்கம் கொண்டிருந்ததால் இங்கு ஒரு சிலுவையை நாட்டியிருக்கலாம் என்று அருட்தந்தை S.V.B. மங்களராஜா அடிகள் இந்நூலில் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். இதன் தொடர்ச்சியாகவே 1943ஆம் ஆண்டு நாவாந்துறை மக்களால் இத் தீவில் சிலுவை ஒன்று நாட்டப்பட்ட சம்பவம் மிகவும் துல்லியமான வரலாற்றுச் சான்று மிக்கதாகும் என எண்ணப்பட இடமுண்டு.

இவ்வாறு திருச்சிலுவை தியான சம்பிரதாய சபையில் இணைந்திருந்த காலத்திற்கு முன்பே ஒல்லர்தர் கால இறுதியில் புதுமையாக அத் தீவு குருசடித் தீவென அழைக்கப்பட்டிருக்கலாம். அத்தோடு இப்பெயரை மீளவும் வலுவூட்டும் வகையில் காலப்போக்கில் அமைக்கப்பட்ட கொட்டில் ஆலயத்தில் 1947 பங்குனி மாதம் 16ஆம் திகதி ஞாயிறு காலையில் புனித அந்தோனியாருக்கு முதல் முறையாக விழா எடுக்கப்பட்டு அருட்பணி லூயிஸ் யோசப் அடிகள் நிறைவேற்றினார். காலப்போக்கில் ஓலையினால் வேயப்பட்ட ஆலயம் சேதமடைந்த பின்பு கற்களால் கட்டப்பட்ட பாதுகாப்பான ஆலயமும் 1967ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய சூறாவளியில் தரைமட்டமாகியது. பின்னர் கட்டப்பட்ட ஆலயமும் 1982இல்

தொடங்கிய உள்நாட்டுப் போர் காரணமாகச் சேதமாகியது. மண்டதீவுச் சந்தியில் முகாமிட்ட இந்திய இராணுவத்தினர் இவ் ஆலயத்தின் ஓடுகள், மரங்கள், கற்களினால் தமது முகாமைப் பலப்படுத்தி அமைத்ததோடு தீவில் மிதிவெடிகளும் விதைக்கப்பட்டன.

போரின்பின் புதிய ஆலயம்

27 வருடங்களின் பின்பு அருட்தந்தை P.F. இராசசிங்கம், 2011இல் தீவைத் தரிசித்தார். முதலில் கண்ணிவெணகள் அகற்றப்பட்ட பின்பு, நாவாந்துறை இளைஞர்கள் பெரியோரினால் சிரமதானப் பணிகள் இடம்பெற்று 20.03.2012 அன்று புதிய அந்தோனியார் சொரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒரு வருடத்தின் பின் 17.02.2013 அன்று பரலோக அன்னை ஆலய மக்கள் பங்குத்தந்தையுடன் பொதுக்கூட்டத்தில் கலந்தாலோசித்து பழைய ஆலயத்தை புனரமைப்பது என்று முடிவெடுத்து ஓர் கட்டடக் குழுவும் அமைக்கப்பட்டது. 10 நாட்களின் பின்பு பங்குத்தந்தையின் ஆசீருடனும் அவர் தலைமையிலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஒவ்வொரு ஞாயிறுதினமும் இளைஞர்கள் பெரியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி பங்குத் தந்தையின் தலைமையில் மணல், சல்லி, கல் என்பவற்றைச் சிறிய முடிச்சுகளாகக் கட்டிப் படகுகளில் ஏற்றித் தீவுக்கு எடுத்துச் சென்றனர். பெண்களும் சரிநிகராக நின்று எடுத்துச் செல்வதநற்கு உதவி செய்தனர். அன்பியக் குடும்பங்கள் மதிய உணவுகளைப் பொதிகளாகச் செய்து அனுப்பினர். புலம் பெயர்ந்தும், உள்நாட்டிலும் வாழும் நாவாந்துறை மரியன்னை ஆலய மக்கள் தங்கள் உடலுழைப்பாலும் பண உதவியாலும் இவ்வாலயத்தைக் கட்டிமுடித்து தெட்டத் தெளிவாக பண்ணை வீதியில் தெரியுமாறு பாரியதொரு சிலுவையையும் இத்தீவில் அமைத்தனர். இவ்வாலயம் 23.02.2014ல் தற்போதைய யாழ். ஓய்வு நிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரம் ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டு திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தவக்காலத்தில் நான்காம் ஞாயிறு இவ்வாலயத்தில் விழாக் கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கு மக்களின் வரலாற்றுப் பதிவு

முன்னுரை

இலங்கையின் வடபுலத்து யாழ் குடாநாட்டின் மிக முக்கிய துறைமுக நகராக விளங்குகின்ற நாவாந்துறை என்று வழங்கப்படும் நாவாய்துறை என்னும் துறைமுக நகரைப் பற்றியும் அதன் தோற்றுவாய் தொன்மை பற்றியும் கல்வி கலை விளையாட்டு பண்பாடு சமயம் பேச்சுவளக்கு உணவு உடை பொழுதுபோக்கு பாரம்பரிய விளையாட்டுக்கள், கடல் விளையாட்டுக்கள் மற்றும் அமைவிடம் சார்ந்த வரலாற்று விடயங்களையும் ஆவணப்படுத்தல் நிலையிலே விபரிக்க விளைகின்றேன்.

அரச நிர்வாக நிலை

நாவாய்த்துறை என்பது யாழ். நகரை அண்டிய யாழ். பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவுகளில் J/84, J/85, J/86 மூன்றையும் உள்ளடக்கிய மிகப்பெரிய பிரதேசமாகும். கிறீஸ்தவ றோமன் கத்தோலிக்கம் இந்துசமயம் இஸ்லாம் ஆகிய மதங்களைப் பின்பற்றுகின்ற; இன ஐக்கியத்திற்கு முன்னுதாரணமாக மக்கள் செறிவாக வாழ்கின்ற வளமான பிரதேசமாகும். வடக்கே ஓட்டுமடம் காரைதீவு வீதியினையும் தெற்கு மேற்காக ஆஸ்பத்திரி வீதி காரைதீவு வீதியினையும் எல்லையாகக் கொண்டமைந்த பிரதேசமாகும். மாம்பழம் சந்தியிலிருந்து நாவாந்துறைச் சந்தைச் சந்தி வரையான தற்பொழுது நாவலர் வீதி என்று அழைக்கப்படும் வீதியானது முன்பு நாவாய்த்துறை வீதியாகும். இவ்வீதியினை நடு எல்லையாகக் கொண்டு வடக்காக அமைந்துள்ள பிரதேசமே நாவாந்துறை வடக்கு பிரதேசமாகும். இதனை வண்ணார்பண்ணை தென்மேற்கு என்று பிரதேச நிர்வாக எல்லையாகக் குறிப்பிடுகின்றார்கள்.

அந்நியருடைய வருகைக்கு முன்பும் பின்பும்

1505ல் போர்த்துக்கேயருடைய வருகையின் போது இலங்கையின் கண்டி கொழும்பு வன்னி யாழ்ப்பாண தமிழ் சிங்கள அரசுகளின் வரலாற்றுக் காலங்களும் இவைகட்கு முன்னைய வரலாறுகளும் இந்திய தமிழ்நாட்டு மூவேந்தன் ஆட்சிக்காலத்தில் இலங்கை மீதான படையெடுப்புகளும் இவர்களது இலங்கை மீதான படையெடுப்புகளும் இவர்களது இலங்கை மீதான ஆட்சியும் சான்றுகளும் சிங்கள பௌத்த வரலாறு கூறும் மகாவம்சமும் சரித்திர காலமும் சான்றாக அமைகின்றன.

எம்மவரின் குடிப் பரம்பல்

யாழ். மாவட்டத்தில் நகரப்பகுதியில் நாவாய்த் துறை, கொக்குவில் மேற்கு, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், அராலி, வட்டுக்கோட்டை, நாத்தலடி, தீவகம், நயினாதீவு, புங்குடுதீவு, மெலிஞ்சிமுனை, கரம்பொன், ஊர்காவற்றுறை,

பரித்தியடைப்பு, தம்பாட்டி வடக்கு, கிளிநொச்சி மாவட்டம், பூநகரி, கறுக்காத்தீவு, கல்முனை, தட்டுவன்கொட்டி, நாச்சிக்குடா, குமுளமுனை, மன்னார் பட்டணம், அரிப்புத்துறை, சிலாபத்துறை, விடத்தல் தீவு, கள்ளியடி, வவுனியா, ஈரப்பெரியகுளம், வீரபுரம் ஆகிய பிரதேசங்களில் கிராமிய சமூக அமைப்பில் வாழ்ந்து வருகின்றார்கள்.

அந்நியர் வருகையும் மாற்றங்களும்

போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் தமிழ் மன்னர் காலத்து இந்துக்களான இவர்கள் பின்னாளில் போர்த்துக்கேயரின் சமயம் கல்வி நிர்வாகம்சார் நடவடிக்கைகளால் மதம் மாறித் தமது சைவப் பெயர்களைத் துறந்து கிறீஸ்தவ பெயர்களைச் சூட்டிக் கொண்டார்கள். தீவகம், ஊர்காவற்றுறை துறைமுகத்தை அண்டியுள்ள பரித்தியடைப்பு திமிலரும் தற்பொழுது ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்தைச் சார்ந்த பள்ளிவில்லியர் என்றும் அழைக்கப்படும். முன்னோர்கள் அந்நாட்களில் சிறந்த கடலோடிகளாகவும் மாலுமிகளாகவும் இந்தியா போன்ற கடல் கடந்த நாடுகளுக்கு கடற் பயணம் மேற்கொள்பவர்களாகவும் இருந்தார்கள். தீவகத்தினைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் இவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட இந்திய பாய்க் கப்பல்களின் கடற்பாதையினை இவர்கள் மூலமாகப் பயன்படுத்தி யாழ் நகரை வந்தடைந்தார்கள். இவர்கள் வந்து இறங்கிய துறைமுகம் தான் நாவாய்த் துறைமுகம் ஆகும். இத்துறைமுகமே இன்று நாவாந்துறை என்று அழைக்கப்படுகின்றது. இதன் முக்கியத்துவம் கருதியே இங்கு வருவதற்காக முன்பு வண்ணை பெருமாள் கோவிலடியில் அமைக்கப்பட்ட நாவாந்துறை புகையிரத நிலையமாகும்.

அந்நியரும் நம்மவரும்

தீவகத்திலிருந்து நம்மவரோடு இங்கு வந்த போர்த்துக்கேயர், நம்மவர்க்காக தமது றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றை புனித நீக்கிலார் பெயரால் உருவாக்கினார்கள். நம்மக்களின் கல்வித் தேவைக்காக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையினையும் உருவாக்கினார்கள். இம்முன்னேற்றகரமான மாற்றங்கள் தீவகத்திலிருந்து கடல் வழிகாட்டிகளாக வந்த மக்களின் தேவைகள் கருதியே நிறைவேற்றப்பட்டன. இதன் முதற்பங்குதாரராக பள்ளி விலியரும் மற்றும் அடுத்த நிலையில் திமிலரும் முக்குவரும் பின்னாளில் கோவியரும் பள்ளரும் பங்காளிகளாக இணைந்துகொண்டனர்.

புனித நீக்கிலாரின் நவநாட்களையும் திருநாளையும் எல்லோரும் இணைந்து கொண்டாடியவர்கள் மத்தியில் திருநாட் காலங்களிலும் விசேட நாட்களிலும் வழிபாடுகளில் பங்குபற்றவதிலும் பாடல்கள் கவிகள் பாடுவதிலும் சோடனை அலங்காரங்களிலும் கூடு தூக்குவதிலும் மன்னுரிமைப் பிரச்சனை ஏற்பட்டதினால் இவை கைகலப்பாக மாறி சாதிச் சண்டைகளாக உருவெடுத்த வேளை ஊர் அமைதி கருதி திமிலர்கள் பிரிந்து சென்று தாங்கள் வாழ்ந்த வடக்குப் பகுதியில்

தமக்கென்று சிறிய முருகைக்கல் ஆலயம் ஒன்றை புனித பரலோக மாதா பெயரால் அமைத்துக் கொண்டார்கள். இவர்களுக்க தற்பொழுதும் புனித நீக்கிலார் ஆலயத்தில் பங்கு இருக்கின்றது. 2017.08.15ல் பவள விழாக்காண ஆயத்தமாகின்றார்கள். மேலும் கிறீஸ்துவில் கொண்ட பக்தியினாலும் அன்பினாலும் எண்ணிக்கையில் பலவாறாக அருட் பணியாளர்களும் அருட்சகோதரிகளும் உருவாகி இருக்கின்றார்கள். மரியாயின் சேனை, புனித வின்சென் டி போல், டோமினிக் சாவியோவும் புனித செசீலியா பக்திச் சபையினரும் தங்கள் மறைப் பணியை ஆற்றி வருகின்றார்கள். இம்மக்களால் இலங்கையில் மிகப்பெரியதும் இயற்கையாக அமைந்திருந்தது போலதுமான பிரான்சின் புனித தூர்து அன்னையின் கெபி 2016 பெப்ரவரியில் கட்டப்பட்டு யாழ். ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு முன்னதாக குருசடித் தீவின் பழமையான புனித அந்தோனியார் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு 2014ல் ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையமும் அமைப்புகளும்

சென். மேரிஸ் சன்மார்க்க வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சென் மேரிஸ் விளையாட்டுக் கழகமும் முத்தமிழ் மன்றமும் இதனோடு இணைந்து செயற்பட்டு வருகின்றன. இக்கால கட்டத்திலேயே இரவுப் பாடசாலையும் தொடங்கப்பட்டது. இவற்றோடு இணைந்து மக்கள் மன்றம், இளைஞர் ஒன்றியம் ஆகியனவும் செயலாற்றி வருகின்றன.

தொழில் முயற்சிகள்

முன்பு மருதமும் நெய்தலும் குழ்ந்த இம்மக்கள் பட்டணத்தை அண்டி வாழ்ந்த போதிலும் காலங்காலமாக கடற்தொழிலையே முதன்மைத் தொழிலாகச் செய்கின்றார்கள். நவீன காலத்தில் கட்டட மரவேலை வர்ணம் பூசுதல் மின் இணைப்பாளர்கள், நீர்க்குழாய் பொருத்துனர்கள், வியாபாரிகள், புகைப்படை ஒளிப்படக் கலைஞர்கள், ஓவியர்கள், எழுத்தோவியர்கள், வீடியோ ஓடியோ ஒலிப்பதிவு தொழில்நுட்பம் மற்றும் ஒலி ஒளியமைப்பு மற்றும் கடலுணவு ஏற்றுமதி போன்வற்றிலும் ஈடுபடுகின்றார்கள்.

கல்வி

ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பட்டணத்தின் பெயர்பெற்ற கல்லூரிகளிலும் சென் பற்றிக்ஸ் சென் ஜோன்ஸ் சென்ரல் கொலிஜ் இந்துக் கல்லூரி மற்றும் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கற்றவர்கள் உயர் கல்வி பட்டப்படிப்பினை யாழ் பல்கலைக் கழகத்திலும் சட்டக் கல்லூரியிலும் கற்று சிலர் விரிவுரையாளராகவும் வைத்தியராகவும் சட்டவாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் பல்வேறு அரச உள்ளூராட்சி அமைப்புக்களிலும் பணியாற்றுகிறார்கள். கல்வித்துறையில் ஆரம்பக் கல்வியை 5% ம் இடைநிலைக் கல்வியை 85% ம்

உயர் கல்வியை 7%ம் பட்டப்படிப்பு 3% ம் பூர்த்திசெய்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளுக்காக சென் மேரிஸ் இரவுப் பாடசாலை 1936ல் தனது பணியை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி இடைநிலை உயர் கல்விக்காக முன் முயற்சிகளையும் பட்டப் படிப்போருக்கான நிதிப் பங்களிப்பினையும் வழங்கி வருகின்றது.

கலை பண்பாடு

மிகப் பழைமையான கலைப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இம்மக்கள் சமூகமானது தங்கள் முன்னோர்களின் வழித்தோன்றல்களாால் நின்று வாய்மொழி பரம்பரைக் கதைகள் மூலமாகவும் பின்நாளில் கடந்த கால வரலாற்றுப் பின்னணிகளோடும் எழுத்துரு வடிவிலே தங்களை நிலைநிறுத்துகின்றார்கள். இம்மானுவேல், யாகப்பர் அல்லது சந்தியோகுமையோர் நொண்டி நாடகம் ஊசோன் பாந்தை அலசு கற்பலங்காரி தேவசகாயம்பிள்ளை எஸ்தாக்கியார் மத்தேசு மகிறம்மா அலங்காரரூபன் ஞானசவுந்தரி செபஸ்தியார் சங்கிலியன் பண்டாரவன்னியன் ஆகிய கூத்துக்கள் மேடையேற்றப்பட்டவைகளாகும்.

விளையாட்டுத்துறை

2017ல் பவள விழாக்காணும் இவ்வேளையில் நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டுள்ள இத்துறையானது பாடசாலைக் காலத்திலும் வேறு கழகங்கள் மட்டத்திலும் பிரதேசம் மாவட்டம் மாகாணம் தேசியம் என்கின்ற எல்லைகளைத் தாண்டி கடல் கடந்த நாடுகளிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்ற சமகால நிலையினைக் காண்கின்றோம். எமது சென் மேரிஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமானது பின்நாட்களில் கடல் கடந்த நாடுகளில் வாழும் எம் உறவுகளின் நிதி அமைப்புகளின் பங்களிப்பு ஊடாகவும் தனி நபர்களின் அன்பளிப்புகளின் உந்துதலாலும் தன்னை வளர்த்து மைதான விளையாட்டுக்கள் கடல் விளையாட்டுக்களின் போட்டிகளில் பங்கு பற்றி மாவட்ட மட்ட வெற்றிகளை பெற்றிருக்கின்றார்கள். உதைபந்தாட்டத்தில் பல வெற்றிகளை தொடர்ந்தும் நிலைநாட்டி வருகின்றார்கள். யாழ் மாவட்டம் மட்டுமல்லாது மன்னார் வவுனியா தலைநகர் மலையகம் கடல் கடந்தும் கழகத்தின் மதிப்பினைக் காப்பாற்றி வருகின்றார்கள்.

எமது ஆலயத்தின் பிரமாண்டமான கலைப்படைப்பு

புனித பரலோக மாதா ஆலயத்தின் இறைமக்களின் பாரம்பரிய கலை வடிவங்களில் பெருங்காட்சி நாடகமான பாஸ் (passion play) என்று அழைக்கப்படுகின்ற இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியானது மிகப் பிரமாண்டமான மேடையில் நூற்றுக்கணக்கான நடிகர்களினதும், ஒலி ஒளி அமைப்பு, பாடல், இசை, உடை, ஒப்பனை, மேடை அலங்காரம், விளம்பரம் ஆகியவைகளின் உள்ளடக்கத் தோடு பல்லாயிரக் கணக்கான பார்வையாளர்களை பரவசப்படுத்தும் நிலையில் மேடையேற்றப்படுவதாகும். இம்மக்கள் முதல் முறையாக 1978ம் ஆண்டு பங்குனித்

திங்கள் 16ம், 17ம் நாட்களில் பங்குத்தந்தை அருட்தந்தை R.M.G. நேசநாயகம் அடிகளாரின் தலைமையில் 'பரபாஸ்' என்னும் பெயரில் நூற்றுக்கணக்கான கலைஞர்களின் பங்களிப்புடன் பிரமாண்டமாக மேடையேற்றப்பட்டது.

இரண்டாவது தடவையாக இருபத்தாறு ஆண்டுகளின் பின்பு 2004ம் ஆண்டு பங்குனித் திங்கள் 27ம், 28ம் நாட்களில் பங்குத்தந்தை அருட்தந்தை அமரர் M. X. கருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில், அவர் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலும் கூட தான் எடுத்த முயற்சியைக் கைவிடவேண்டாம் என்று ஆலய மக்களை உற்சாகப்படுத்திய நிலையில் 'கல்வாரி கண்ட கடவுள்' என்னும் நிகழ்வு முந்நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட கலைஞர்களின் பங்களிப்பில் பல பின்னணிக் கலைஞர்களின் முயற்சியில் 175 அடி அகல மேடையில் ஆலய மைதானம் நிறைந்த பார்வையாளரின் முன்னால் அளிக்கை செய்யப்பட்டது.

மூன்றாவது தடவையாக பதின்மூன்று வருடங்களின் பின்பு 'இயேசுவின் பின்னால் பரபாஸ்' தொடர் சாதனையாக 2017ம் ஆண்டு பங்குத்தந்தை அருட்பணி C.J. அன்ரனிபாலா அடிகளாரின் தலைமையில் சித்திரைத் திங்கள் 4ம், 5ஆம் நாட்களில் 235 அடி அகண்ட மேடையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்களிப்பில் மிகப் பிரமாண்டமாக மேடையேறியது. இவை அனைத்தும் பங்கு மக்களின் பெருவிருப்புடனும், பங்குத் தந்தையினதும் ஆலய அருட்பணிச்சபையினதும் வழிநடத்தலிலும், பொதுக்கூட்டத் தீர்மானத்தின் படி அருளப்பட்டு இறை சித்தத்தின்படி இனிதாக நிறைவேறியவைகளாகும். இம்மூன்று நிகழ்வினையும் எழுத்துரு, நெறியாள்கை, தயாரிப்பு ஆகியவை களை நிறைவு செய்தவர் மண்ணின் மைந்தர் கலைஞர் கலாபூஷணம் N.M. பாலச்சந்திரன் அவர்களாகும். இந்நிகழ்வகளை நிகழ்த்துவதற்கு இரவும் பகலும் பக்க பலமாக முன்னின்று அருட்தந்தை A.M. ஸ்ரீபன் செ.தா. அவர்கள்.

கலைஞர் N.M.பாலச்சந்திரன்
கலாபூஷணம்

தாய் மண்ணில் நான் கண்ட அன்னையின் தேர்த் திருவிழா

கதிரவனை ஆடையாய் அணிந்த பன்னிரு விண்மீன்கள் சென்னியில் மகுடமாய் சூடிநிற்க சர்ப்பத்தின் தலையை மிதித்த பாதத்தை வெண்ணிலா தாங்கியபடி ஞாயிறு போல் பேரெளி வீசி விண்ணக மண்ணக பேரரசியாக புனித கன்னிமரியாள் விண்ணகம் சென்ற நாளை விண்ணேற்பு விழாவாக அகிலமனைத்தும் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வது ஆவணிமாதம் பதினைந்தாம் நாள்.

ஆழிசூழ் உலகனைத்தும் ஆண்டவனின் புகழ்பாட வங்கக்கடலலை தாலாட்டும் வங்கத் தமிழ் முழங்கும் தங்கத் தமிழ் ஈழத்தில் யாழ். நகர் படுதிசைதிகழும் போத்துக்கீசரின் துறைமுகத்தில் வன்னிம சிந்துகுல மக்கள் ஏலேலோம் சிந்து கவிபாடி தொழில் துறை நாடிச் செல்லும் நாவாந்துறையில் கடல்முகம் நோக்கி வானுயர்ந்த மணிக்கோபுரம் வானவில் வடிவமைந்த அழகுமிகு ஆலயத்தில் கோவில்கொண்டெழுந்தருளி அழகோவியமாய் மாட்சியோடு காட்சிதரும் புனித பரலோக அன்னையின் வருடாந்த தேர்த் திருவிழா ஆவணி மாதம் பதினைந்தாம் நாள். நறுமணம் கமழும் மல்லிகை, முல்லை, ரோசா, வெண்ணிற லீலி மலர்களாலும் மின் ஒளிகளாலும் அலங்கரிக்கப்பட்ட அழகுமிகு சித்திரத்தேரில் மாலை நேரம் இளந்தென்றல் காற்றில் வேதம் முழங்க பண்ணிசைப் பாக்களோடு புனித பரலோக அன்னை வீதிஉலா புறப்பட்டுப் பக்தி விமரிசையுடன் தேர் ஆலயத்தை வந்தடையும் அன்னையின் திருச்சுரூப ஆசீர் அருளுமுன் "அடைக்கலமே அடைக்கலமே தாயே" என்ற வெண்கலநாதம் தேனருவியாகச் செவிகளில் பாயும் ஆலயவளாகம் அமைதிப்பூங்காவாகிவிடும். விண்ணையும் பக்திப் பரவசத்திலாழ்த்தி எண்களைக் குளமாக்கி மெய் சிலிர்க்க தானறியாத் தசையாட நாத்தழும்பி தாயேயென்று கரம் கூப்பிக் கருணைமழை பொழியும் அன்னையின் வதனத்தை ஏறெடுத்துப் பார்க்கவைத்த வெண்கல நாதம்தான் காலஞ்சென்ற மரிசால் அருமைராசாவின் இனியநாதம். இவ்விசையின் எழுச்சி கண்டு அருட்சி பெருகி மகிழ்ச்சி பொங்கிட புனித பரலோக அன்னைக்கு செபம் வாசிக்கப்படும். பங்குத்தந்தையால் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டதும் கரஒலி எழுப்பப்படும். விழிகளில் ஆனந்தக்கண்ணீர் மல்கியபடி புன்முறுவல் பூத்து ஒருவரை ஒருவர் கைகொடுத்து அரவணைத்து மகிழ்ச்சி பொங்கிடத் திருவிழா நிறைவேறும்.

அமிர்தநாதர் கொண்சலாமேரி
(பிரான்ஸ்)

இறையடியார் வண. தோமஸ் அமதி (1886 – 1964)

அடிகளாரை இறைவன் புனிதராக்கும் படி செபிப்போம்.

வண. தோமஸ் அடிகளாரின் இறை அர்ப்பண வாழ்வு அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களின் சாட்சியத்திற்கு ஏற்ப புனித வாழ்வாக அமைந்தது என்பதை யாழ். மறைமாவட்ட ஆயரினதும் செபமாலைத் தாசர் துறவு சபையினதும் பரிந்துரைக்கேற்ப றோமை நாட்டில் வத்திக்கான் நகரில் புனிதர்களுக்கான ஆய்வு மையமானது இதை ஏற்றுக்கொண்டு இவரை இறை அடியானாகப் பிரகடனப்படுத்தி தொடர்ந்து வத்திக்கானில் ஆய்வுகளைத் தொடர்ந்து வருகிறது. வத்திக்கானில் இப்பணியை அமலமரித் தியாகிகள் சபையின் உயர் தலைவர் பொறுப்பேற்று இதற்கென அங்கு பணியாற்றும் குருவின் வழியாக செயல் படுத்தி வருகிறார்.

இந்த வத்திக்கான் நகரின் ஆய்வுகள், வெற்றி பெறவும், விரைவில் இறையடியார் தோமஸ் அடிகளார் புனிதராக வரவும் நாம் செபிப்போம். இதற்கான முயற்சிகளைச் செய்வோம்.

வாழ்வும் பணியும்

வண. தோமஸ் அடிகளார் இலங்கை நாட்டில் உள்ள பாண்டியந்தாழ்வு என்னும் அமைதியான சிற்றூரில் 07.03.1886ம் ஆண்டு பிறந்தார். புனித சாள்ஸ் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றார். 1904ம் ஆண்டு அமதி குருமட மாணவனாக இணைந்து 06.01.1912ம் ஆண்டில் குருவாக யாழ். பேராலயத்தில் மேதகு அமரர் யூலன் அமதி ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டார். உடல் நோயால் துன்பப்பட்ட அவர் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஓய்வு எடுக்கும்படி அனுப்பப்பட்டார். ஆனால் இறைவன் எதுவுமே முடியாமல் இருப்பவர்களையும் தனது மகிமை விளங்க, தனது பணிகளுக்காக அழைக்கின்றார். அதுபோல சில ஆண்டுகளிலேயே இறந்துவிடுவார் என்றிருந்த தோமஸ் அடிகளாரைத் தேர்ந்தெடுத்து தனது உன்னதமான பணிகளை நிறைவேற்ற வைத்தார். புனித பத்திரிசியார் கல்லூரியிலிருந்த இந்து மாணவர் விடுதியின் பொறுப்பாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிய தந்தை தோமஸ் அடிகளாரை தியான யோக துறவறசபையை அமைக்க அன்றய ஆயர் மேதகு J.A. கிமோமர் அடிகளார் கேட்டுக் கொண்டார். ஆயரின் ஆணையை ஏற்று செபத்தில் பற்றுக் கொண்டிருந்த தோமஸ் அடிகளார் 02.02.1928ம் ஆண்டில் யாழ் மறைமாவட்டத்தில் தோலகட்டி என்ற இடத்தில் செபமாலைத் தாசர் சபையை ஏற்படுத்தினார். தொடர்ந்து கடினமான பணிகளை எல்லாம் மேற்கொண்டு சபையை சிறப்பாக வளர்த்தெடுத்து 78 வயது வரை வாழ்ந்து 26.01.1964ல் இறையடி சேர்ந்தார்.

செபமாலைத் தாசர் துறவற சபை நமது இலங்கை நாட்டிற்கும் ஆசிய நாடுகளிற்கும் உலகத் திருச்சபை முழுவதற்குமே இறைவனின் மாபெரும் கொடையாகும். இந்தத் தியான யோக துறவற சபையானது 1926ல் திருத்தந்தையால் வெளியிடப்பட்ட நேறும் எக்கிளேசியே (Rerum Eccliesise) என்ற சுற்று மடலின் வேண்டுதலுக்கேற்ப சுதேச அழைத்தல்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த தியான யோக சபையின் நோக்கம்

இறைவனுக்கு நிறை மகிமையைக் கொடுப்பது, புனித மரியாவிற்கு நிறை புகழ்ச்சியைக் கொடுப்பது, நற்கருணை நாதர் முன் செபமாலை செபித்து அனைத்து உலகிற்காகவும் குறிப்பாக நமது நாட்டிற்காகவும் மன்றாடுவது, அனைத்து உலக மக்களின் பாவங்களுக்குச் செபத்தாலும், தவத்தாலும் பரிகாரம் செய்வது, திருச்சபையின் எல்லாப் பணிகளுக்கும் குறிப்பாக மறைபரப்புப் பணிகளுக்காகவும் திருத்தந்தை, அனைத்து ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரின் பணிகள் சிறக்கவும் நாளாந்தம் மன்றாடுவது.

சமூகத்துடன்

- நற்கருணை நாதரின் பிரசன்னத்தில் மக்கள் செபிப்பதற்கு ஆவன செய்வது.
- தியானம் (ஞான ஒடுக்கம்) செய்ய விரும்புவோருக்கு எமது மடங்களிலேயே உதவி செய்வது.
- பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தை எமது மடங்களில் எப்போதும் வழங்குவது
- நாளாந்தத் திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பதும் மாலை வேளைகளில் திருச்செபமாலை நற்கருணை நாதர் முன் செபித்து நற்கருணை ஆசீர் வழங்குவது.
-

சபையின் உயிர் நாடி

புனித மரியாவின் தியான யோக வாழ்வைப் பின்பற்றி தாழ்ச்சியில் வேரூன்றி அன்பு வாழ்வையும் பரிகார வாழ்வையும் வாழ்வது.

விருது வாக்கு

இறைவனுக்கு நிகர் யார்!

இந்தச் சபையானது தற்போது இலங்கை, இந்தியா, கனடா ஆகிய நாடுகளில் 25 ஆச்சிரமங்களையும், பெண்களுக்கு 20 மடங்களையும், கொண்டு பணியாற்றி வருகிறது. இந்தச் செபமாலைத்தாசர், செபமாலைக் கன்னியர் சபைகளில் பணியாற்ற விரும்புவோர் அதன் அதிகாரிகளை அணுக அழைக்கப்படுகின்றனர்.

"அடைக்கலமே அடைக்கலமே" தாயே பாடல் வரலாறு

"1948இல் மருதமடு அன்னையினதும், 1950இல் உலக நாடுகள் வழியாக எடுத்துவரப்பட்ட போர்த்துக்கல் பத்திமா அன்னையினதும் திருச்சொரூபங்கள் யாழ் மண்ணில் பவனியாக எல்லாப் பங்குகளுக்கும் கொண்டுவரப்பட்டன. அவ்வேளை யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த ஜோசவ் அன்றூ, 'மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே', பாத்திமா நாயகியே', 'மருதமடுத் தாயே, அடைக்கலமே அடைக்கலமே தாயே, மாமடு வாழும், அடைக்கலத் தாயே போன்ற இனிய பாடல்களைப் புதிதாக இயற்றினார். இவரது திறமைக்குச் சான்றாக 'மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே', அடைக்கலமே அடைக்கலமே தாயே போன்றவை இன்றும் நிலைத்திருக்கின்றன. இவற்றோடு நவீன கீர்த்தனா சங்கீர்ணத்தின் பாடல்களையும் சேர்த்து 1958இல் ஜோசவ் அன்றூ 'அடைக்கல நாயகி கீர்த்தனா சங்கீணம்'என்னும் இசைநூலை வெளியிட்டார்."

ஆதாரம்:- அன்ரனிபாலா சி. ஜே. சீர்சமைத்த சிற்பி, யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறைமாவட்டத் திருச்சபையில் ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை (1901-1972)அ.ம.தியின் வாழ்வும் பணியும், யாழ் கத்தோலிக்க இலக்கியக் கழகம். ஆயர் இல்லம் யாழ்ப்பாணம். முதல் பதிப்பு 2005, இரண்டாம் பதிப்பு 2012 பக். 90-91

குறிப்பு: இந்த "அடைக்கலமே அடைக்கலமே" என்னும் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த காலம் சென்ற யோசவ் அன்று அவர்களால் இயற்றப்பட்ட பாடலைத் தான் இறக்கும் வரையும் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் பாடியவர் காலம் சென்ற மரிசால் அருமைராசா என்பது இவ்வாலய மக்கள் அறிந்த உண்மையாகும்.

அருட்தந்தை செபஸ்ரி நீக்கிலஸ் அ.ம.தி

பார் போற்றும் பேரழகே
நீ வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

பொங்கும் கடலருகே கோவில் கொண்டாய்
பங்கம் கழைந்து எம்மைப் பாதுகாத்தாய்
வானகத்துப் பேரொளியே பார்போற்றும் தாயே
கோன் குலத்துக் கொடிமலராய்
குவலயத்தில் உதித்து வந்து
வானும் உலகும் வடிவமைத்துத் தந்த
வல்ல தேவன் மைந்தனுக்குத் தாயாகி
மாசடைந்த மனுக்குலத்தை மீட்டெடுத்தாய்.

நாவாயூரின் நாயகியாய் நீ இருந்து
நாளும் பொழுதும் எம்மைக் காத்து
நல்வழிப்படுத்தும் பரம்பொருளே அம்மா
நாவாய்கள் நகர்த்தி நடமாட வைத்து
வலைவீசி வளம் சேர்க்கும் எம்மவற்கு
காவலாய் இருந்து கருணை மழை பொழியும்
கார்முகிலே பரலோக மாதாவே நீ வாழ்க
என் நாளும் உம்மை வாழ்த்தி
போற்றி வணங்குகின்றேன்

பரலோக மாதாவே பவள விழா நாயகியே
புதுமைகள் பல புரிந்து பூரிக்கவைத்த தாயே
புன்மைகள் கழைந்தெமக்கு புதுவழிகாட்டியாய்
வல்லமையோடு எம்மை வழிநடத்தும் மாதாவே
பொன்னும் பொருளும் பூமியும் எமக்கு வேண்டாம்
புண்ணியன் யேசுபாதம் புகலிடம் கிடைத்தால் போதும்
வல்லமை கொண்ட உந்தன் திருமகன் யேசுவிடம்
பாவிகள் எமக்காய் பரிந்துரை செய்வாய் அம்மா

யோ. பிரான்சிஸ்

மண்ணிலே மனிதம் இன்று

தந்தானே தனதன தானானே
தந்தானே தனதன தானானே
தந்தானான தனதன தானா தானானே
தந்தானான தனதன தானா தானானே

பல்லவி
மண்ணிலே மனிதம் இன்று மலர்ந்தது – அது
மரியாளின் மகனாலே வளர்ந்தது
விண்ணிலே வானவர்க்குத் திருவிழா – அது
பரலோக மாதாவின் பெருவிழா
விண்ணக மண்ணக அரசியாய்
மூவொரு இறைவனும் முடிசூடினார்

தந்தானே தனதன தானே
தந்தானே தனதன தானானே
தந்தானான தனதன தானே பாடுவோம்
தாளம் போட்டு எல்லோரும் ஒன்றாய் ஆடுவோம்

விண்ணவர் வாழ்த்தி வணங்கும் அன்புத் தாயே
மண்ணவர் மாண்புபெற வந்த தாயே
வந்தோம் உம் பாத நிழல் தாகத்தோடு
வற்றாத அன்புச்சுனை ஜீவநதியே
வருபவர்களெல்லாம் நீ வரமருள்வாயே
வாடிய பயிருக்கு வான்மழை நீயே
அம்மா உன் அன்பிற்கு ஈடேதும் இல்லை

பவளத்தில் விழா எடுத்தோம் பாரினில் நீயே
பரிசுத்த கன்னியாய் கோவில் கொண்டாயே
வாழையுடன் தோரணமும் விளக்குகளும்
வருவாயே ஊர்வலம் தருவாயே ஊர்வலம்
சரவெடி முழங்கிடவே வானத்தில் வண்ணக்கோலம்
பூவதிரும் உம்புகழை ஒளியாக ஏற்றினோம்

கலைஞர் N.M.பாலச்சந்திரன்

அன்னையே வாழ்க

அரவணைத்து எம்மைக் காத்திட்டீர் தாயே
ஆறுதல் தந்து எம் துயர் தீர்த்தீர் தாயே
இடர்பல மத்தியில் எம் சார்பானீர் தாயே
ஈசனிடம் எமக்காய் வேண்டினீர் தாயே

நம்பியோரை என்றும் கைவிடாதவளே வாழ்க
ஊக்கமுடன் உம்மைப் போற்றுகின்றோம் வாழ்க
நின்பதம் எம் வேண்டல் வைத்தோமே வாழ்க
யேசுவிடம் பரிந்துரைப்பீர் மரியே நீ வாழ்க

பயம் போக்க எம்முடன் இருப்பவளே அம்மா
ஒருநாளும் உமைப்பிரியா வரம் தாரும் அம்மா
அன்னையேயும் பிள்ளைகள் நாமன்றோ அம்மா
உடல்உள நோய்களுக் கௌடதம் நீயம்மா

பிறன்சன் பவுலினா
சூரியவெளி, 7ஆம் வலயம்

பவளவிழா நாயகி

ஆவணியில் ஆலயத்தோர் விழாவெடுக்க
அழகுமிகு தேவ அன்னை பவனிவர
அண்டிவந்தோர் குறைதீர்த்து அருள்செய்பவள்

துன்பங்கள் பல சூழ்ந்த எம் ஊரில்
சுகம் தேடும் பல மாந்தரின் பாரச்
சுமைகள் குறைத்திட வருவாள்

பாவத்தில் வீழ்ந்துள்ள இம்மானிடரை
பரமனின் பாதம் சேர மனம்மாறப்
பரமனிடம் பரிந்து பேசுவாள்

தேரேறி வருவாள் - எம்
குறை தீர்த்தருள்வாய் - எம்
இனம் நலமாய் வாழ்ந்திட
எமக்கருள் செய்திடுவாள்

சாந்த மண்ணில் ஆலயம் தேடிக்
கடல் கடந்து வருவோர்க்கு
வாழ்ந்திட வழிகாட்டுவாள்
அவள்தான் எம் பவளவிழா நாயகி

கிறிஸ்ரன் சோவா
நாவாந்துறை

விண்ணக அரசியே

விண்ணக அரசியின் மண்ணக ஆலயம்
விண்மீன்கள் பிறைசூடும் சூரிய ஒளிவிண் அரசிக்கு
மண்ணவர் நாவாயோர் அமைத்திங்கு தந்திட்ட
மரிமைந்தன் இயேசுவையே தாங்கிடுமோர் ஆலயம்
தந்தையின் குமாரத்தி அன்னை மரி பெயரிலாகும்.

நாளாந்த ஊதியத்தில் தரும்பத்தி லொருபங்கும்
கற்றாழைச் சாற்றுமுரு கைக்கல்சுண்ணம் சக்கரையும்
நம்முன் னோர்களின் வியர்வையோடு குருதிசேர்ந்து
எம்மரி ஆலயமுறு தியாய் விளங் குதோபாரில்

ஆவணி மாத்தில் அன்னையின் பெருவிழாவரும்
அலைகடல் தாலாட்ட ஆனந்தப் பெருவிழாதரும்
உவகையுடன் உறவுகள்கூடியே மகிழ்ந்து கொஞ்சும்விழா
பகமைகள் மறந்துபுது வாழ்வுபெறும் அன்பியவிழா

ஊர்களொன்று கூடிவந்து மகிழ்ந்துநிற்கும் பவளவிழா
மயிலாட்டம் கணவாயோடு மின்னும்மீன் சேர்கூட்டம்
நடனமாடும் நண்டினமெம் நாயகியின் புகழ்பாட
நாங்களுமே ஆர்ப்பரிப்போம் கைதட்டி நடனமாடி

வென்சிலாஸ் அனுரா
கனடா

நாவாய் பதியின் நாயகியே

விண்ணகத் தாயே பரலோக மாதாவே
நாவாய் பதியின் நாயகியே – எம்
நாவாய் பதியின் நாயகியே

உம் வரம் வேண்டி வந்தோம் அம்மா
உன் அருள் தந்தெமை காப்பாயம்மா

கடல்வளம் சூழும் நாவாந்துறையிலே
கல்வி வளம் பெருக வேண்டுமம்மா
கலையிலும் இசையிலும் கரை ஒன்றுகாணவே
கலைமதியே நீ வாழ்க
ஒழுக்கம் பண்பிலும் சிறந்து விளங்க
அருள் பொழிவாயே தாயே

தினம் தினம் எம்மை காப்பவளே – உம்
திருவடி அமர்வோம் நாளுமே
தொழில் வளம் பெருகிட
துணைநின்று காக்க
உம் அருள் வேண்டும் தாயே
நிம்மதி வாழ்வை நிறைவுடன்காண
அருள் புரிவாயே தாயே

வறுமையில் வாழ்வோர் துயர் துடைக்க
வானில் நின்றே அருள் பொழிவாய்
அன்பில் பகிர்ந்து மகிழ்வில்வாழ
அருள் புரிவாயே தாயே
உறவின் உயிராய் வாழ்ந்திடவே
துணைபுரிவாய் தாயே

இன்னாசியஸ் ரவிசங்கர்

பார் போற்றும் பரலோகத் தாய்

கடல் பாடும் நாவாயின் கரையோரம்
அலையோடு நுரை வந்து அணிசேர்க்கும்
வலையோடு வள்ளங்கள் துறைசேரும்
சிறு நண்டு சித்திரம் பல கீறும்

கலையோடு காற்பந்தும் புகழ் சேர்க்க
மலையாக திரக்கோவில் வான் முட்ட
நிலை பேறு தருவாள் நிமலன் தாய்
அலை மோதும் பக்தர்க்கு அளவுண்டோ

நிலையாக நிற்குமெம் ஆலயத்தின்
சிறுகல்லும் எம் முன்னோர் புகழ்பாடும்
காற்றை கிழித்து அவர் கடலோடி
கற்றாளை கொணர்ந்த கதை கூறும்

பரலோக அன்னைக்கு பவளவிழா
பாரோர்க்கு இதுவன்றோ பெருவிழா
ஊரெல்லாம் தோரணம் உள்ளத்தில் பூரணம்
வாய்கொண்டு சொல்ல வார்த்தையேயில்லை

ஊர்வளம் காண ஊர்வலம் வருவாள்
தேர் எழில் காண தேடி இங்கு வருவீரே!
நோய் நொடி பஞ்சம் பசிபிணியெல்லாம்
தாய் தயை தன்னில் மகிழ்ச்சியாய் மாறும்

தாழ்ச்சியை அணிந்து தாயடி பணிவோம்
யேசுவில் வாழ ஒர வரம் கேட்போம்
பக்தியும் பண்பும் ஓங்கிட வேண்டும்
பரலோக அன்னை துணை செய்ய வேண்டும்

எஸ்பீரியர் ஜெனாத்

நாவாந்துறை பரலோக அன்னைக்கோர் பவள விழா

அலைவந்து கரையோடு கதைபேசிச் செல்லும்
வலையோடு மீனவர்கள் படகேறிச் செல்வர்
கலைஞர்கள் கவிகூடிப் பண்பாடும் துறையில்
அழகொளியாய் நின்றருளும் அன்னையடி பணிவோம்

பிரமிக்க வைக்கும் பிரமாண்டத் தோற்றம்
பேரழகுக் கோவிலது மக்களின் உழைப்பு
கரைகடந்த அர்ப்பணிப்பின் அற்புத வடிவம்
பரலோக மாதாவின் உறைவிடம் ஆகும்

பரலோக மாதாவின் பவளவிழா ஆண்டில்
பார்போற்றும் அன்னையடி பணிவோம் நாளும்
இகவாழ்வில் இன்னலினை நீக்குவாள் அன்னை
இறையருளை இறைஞ்சுகின்றோம் கருணைமழை பொழிவாள்

ஆவணி பதினைந்தில் பெருவிழா நடக்கும்
அன்னையவள் திருக்கோலம் ஊர்வலம் போகும்
தேரேறும் திருத்தாயின் திருப்பார்வை படரும்
ஊரெங்கும் அருள்வெள்ளம் கரைபுரண் டோடும்

எழிற் கோலம் காட்டுகின்ற திருக்கோயில் பாரீர்
ஏழிசையில் பாடலிசை திசையெங்கும் கேளீர்
அலைகடலும் அருட்கடலும் சங்கமிக்கும் நேரம்
அன்னையவள் தேர்ப்பவனி திசையெங்கும் காணீர்.

டானியல் சௌந்திரன்

நெஞ்சம் நிறைந்தவளே

பாதத்தில் இளமதியை வாகனமாய்க் கொண்டவளே!
பன்னிரு கோத்திரத்தை பொன்முடியில் அணிந்தவளே!
உலகோர்க்கு அன்னையாய் அரசியாய் அமர்ந்தவளே!
எம்மண்ணில் கால்பதித்து பவளவிழா தந்தவளே!

இதயத்தால் துதிப்போர்க்கு இரங்கிடும் அன்னையே!
இதழால் துதிப்போரை அரவணைக்கும் பேரன்பே!
ஆலயம் நிறைந்திடுவார் ஆர்ப்பரித்து புகழ்பாட
மனங்களோ நிறையவில்லை அன்பில்லா வெற்றிடமாய்

நாள் முழுதும் உபதேசம் கருத்தாய் கேட்பார்கள்
பக்தியில் நிறைந்தாலும் மனங்களும் மாறவில்லை
பாறையிடை வீழ்ந்தவிதை முட்புதரில் விழுந்த விதை
நல்ல நிலங்கள் தான் காணவில்லை நற்பலனை தருவதற்கு

பயமில்லா பாதகங்கள் அழிவில்லாப் போதகங்கள்
பயமொன்று என்நெஞ்சில் யார்தான் அழிவாரோ?
பவளவிழா தேரேறி பவனிவரும் மாமரியே
அரவணைத்துக் காத்திடுவாய் நெஞ்சம் நிறைந்தவளே!

ம. யுகன்

பரலோக அன்னைக்கு விருத்தம்

பன்னிரு விண்மீன்கள் சென்னியில் மகுடமாய்ச் சூடியே
கதிரவனை ஆடையாய் அணிந்ததாயே
சர்ப்பத்தின் தலையை கால்களால் மிதித்த
உன் பாதம் வெண்ணிலா பிறையினில் ஒளிச்சுடர் வீச
விண்ணகம் சென்றதம்மா
கவலையால் நிறைந்து கண்கள்
கலங்கி கதறி அழுது நிற்கின்றோம் தாயே
எம் குறை தீர்ந்திட அருள்மழை பொழிந்திட
பரலோக அன்னையும் திருப்பாதம்
சிரம்பணிந்திறஞ்சுவோமே.

சூ. அமிர்தநாதர்

நன்றி நவிலல்

நாவாந்துறை புனித விண்ணக அன்னை ஆலய மக்களாகிய நாம் இவ்வாண்டு 75வது வருட யூபிலியைக் கொண்டாடும் வேளையில், எடுத்த பொறுப்பை நிறைவேற்ற மரியன்னை துணை புரிந்தமையை எண்ணி மலர்க் குழுவினராகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம். உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களின் உதவிக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆசிச் செய்தியை வழங்கிய திருமறையின் தலைவர்களையும் வாழ்த்துச் செய்தி வழங்கியவர்களையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

தமது விபரங்களைப் படங்களுடன் அனுப்பி உதவிய இவ் ஆலயத்தின் பிள்ளைகளுக்கும் எமது நன்றிகள்.

சிறப்பான, ஆழமான, நாவாந்துறையில் கிறிஸ்தவம் தொடர்பானதோர் வரலாற்றுக் கட்டுரையை வழங்கிய அருட்தந்தை S.V.B. மங்களராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

கட்டுரைகள், கவிதைகள் தந்தவர்களுக்கும், படங்களை எடுத்துதவிய ஒளிப்பதிவாளருக்கும் எமது நன்றிகள்.

படங்களை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வெவ்வேறு குழுவினருக்கும் எமது நன்றிகள்.

புத்தகத்தை அச்சேற்றிய அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

- மலர்க்குழு